பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 28 திங்கட்கிழமை (12.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 228

# தமிழ் அரசியல் கைதிகள் மீதான விசாரணைகள் விரைவில் துரிதமாகும்

## பிரதியமைச்சர் விஜிதமுனி சொல்கிறார்



யாழ்ப்பாணம், ஜூலை 12

விசாரணைகள் எதுவும் இன்றி நீண்ட காலம் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள, தமிழ் அரசியல் கைதிகள் மீதான விசாரணைகளை விரைவில் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகராவும் தாமும் இணைந்து, இது குறித்துப் பிர தம நீதியரசர், மற்றும் சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்து விசாரணைகளைத் துரிதமாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக -

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் பிரதி அமைச்சர் காமினி விஜிதமுனி சொய்சா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதி அமைச்சர் காமினி விஜிதமுனி, நேற்றுக் காலை ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலாவின் இல்லத்துக்கு விஜயம் செய்திருந்தார். அவ்வேளை ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அங்கு வைத்து அவர் மேலும் தெரிவித்ததாவது :-

1971 ஆம் ஆண்டில் ஜே.வி.பி. கிளர்ச்சி நடைபெற்ற மொனராகலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவனாகவே நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன்.

அதே சூழ்நிலையில்தான் இன்று யாழ்ப்பாணமும் இருக்கிறது. எனவே இங்குள்ள மக்களின் பிரச்சினைகளை நான் நன்கு உணர்ந்து, அறிந்துகொள்ள முடிந்தது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் பல இராணுவ வீரர்களின் சடலங்கள் தென்னிலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன. அதைவிடப் பெரும் எண்ணிக்கையான தமிழ்ப் பொதுமக்கள் இங்கு கொல்லப்பட்டிருப்பார்கள் என்பது எனக்குத் தெரியும்.

நாம் இங்குவந்து மக்களின்பிரச்சினைகள் தொடர்பாக (24 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பாரியார் நடிகை அசினுடன் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு விஜயம்

### கண் சத்திரசிகிச்சை முகாம் நிகழ்விலும் பங்கேற்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை12

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ உள்ளடங்கிய குழுவினர் நேற்றுப் பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்தனர்.



கடந்த மூன்று தினங்களாக யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்று வந்த கண் சிகிச்சை முகாமின் இறுதி நாள் நிகழ்வில் பங்கேற்பதற்காக வருகை தந்த இக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்தியகலாநிதி சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே, தென்னிந்திய திரைப்பட நட்சத்திரம் அசின், ஜனாதிபதி செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் இடம்பெற்றிருந்தனர்.

இந்திய கண்சிகிச்சை நிபுணர்களினால் நடத்தப்பட்ட இந்த விழிவெண்படல சத்திர சிகிச்சை முகாமில் சிகிச்சை பெற்றவர்களையும் அக் (24 ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த, கோத்தபாய கதை வசனத்துடன் ஒப்பேறிய விமலின் உண்ணாவிரதம் நாட்டுக்கு அவமானம்

### ஐ.நா. நிலைமையில் மாற்றமில்லை என்று சுட்டிக்காட்டுகிறார் ஹேரத்

கொழும்பு, ஜூலை 12

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் உண்ணாவிரத நாடகம் சர்வதேச ரீதியில் நாட்டை அவமானப்படுத்திவிட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கதையும் கோத்தபாய ராஜபக்ஷ வசனமும் எழுதி அமைச்சர் விமல் வீரவன்ஸ அரங்கேற்றிய நாடகத் தால் நடந்தது ஒன்றுமில்லை. ஐ.நாவின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை என்று ஜனநாயக தேசிய முன்னணி எம்.பி. விஜித ஹேரத் நேற்றுக் குற்றஞ்சாட்டினார்.



கொழும்பு ரொஸ்மிட் பிளேஸில் நேற்றுப் பகல் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் விஜித ஹேரத் எம்.பி. தொடர்ந்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

(24 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்தம் உடனடியாக இல்லை; நிறைவேற்று பிரதமர் பதவி குறித்து ஆராய்வு

கொழும்பு, ஜூலை 12

அரசமைப்புத் திருத்தங்கள் உடனடியாக நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படமாட்டாது. வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்தவுடன் அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைக்க அரசு திட்டமிட்டிருந்தது. எனினும் இன்னும் நான்கு மாத காலத்துக்குப் பின்னரே திருத்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படலாம் என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள எதிர்ப்பே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை இரண்டு தடவைகளுக்கு மேல் நீடிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தடவைகளுக்கு மேல் நீடிப்பதை இடதுசாரிக் கட்சிகள் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை எனப் பகிரங்கமாகக் (24 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவுடனான பிரச்சினைக்கு ராஜதந்திர ரீதியில் தீர்வு தேவை

### ஐ.தே. கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 12

ஐக்கிய நாடுகள் சபையுடன் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையை இராஜதந்திர ரீதியில் தீர்த்துக்கொள்வதற்கு இலங்கை அரசு முயற்சி செய்தால் அந்த நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கத் தாம் தயார் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் எம்.பியுமான கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

(24 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணை மருத்துவ மாது மரணம் குறித்து விசாரணைகள் தொடர்ந்து நடக்கின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 12

மர்மமான முறையில் வேலணை வைத்தியசாலையில் இறந்துகிடந்த குடும்பநல மருத்துவ மாது சரவணை தர்சிகாவின் மரணம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாக யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வேலணை அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றிவந்த தர்சிகா நேற்றுமுன் தினம் சனிக்கிழமை கழுத்தில் சுருக்கிடப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது மரணம் தொடர்பாக குறித்த வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியான டாக்டர் பிரியந்த செனவிரத்னவும் விசாரிக்கப்பட்டு (24 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர் மீது தாக்குதல் நடத்தவில்லை; இலங்கைக் கடற்படை அடியோடு மறுக்கிறது!

கொழும்பு, ஜூலை 12

இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் எதுவும் நடத்தப்படவில்லை என இலங்கைக் கடற்படை அடியோடு மறுத்துள்ளது.

கச்சதீவுப் பிரதேச கடற்கரையில் கடந்த சனிக்கிழமையன்று இரவு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த 50 மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தியிருக்கிறது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டதை அடுத்தே, இலங்கைக் கடற்படை மறுப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளன. அண்மையில் இலங்கைக் கடற்படையினரின் (24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேசசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ,ஜூலை12

நல்லூர் பிரதேசசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று திங்கள் காலை 8.30 மணிக்கு நல்லூர் பிரதேச சபை எல்லைக் குட்பட்ட சகல முன்பள்ளிகளுக்குமான விளையாட்டு விழா யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு யாழ். முத்துத்தம்பி வித்தியாலயத்தில் பற்சுகாதார மருத்துவமுகாம் டாக்டர் திருமதி லோஜினி கணேசன் தலைமையில் இடம்பெறும். (ஒ-டி)

# மரண அறிவித்தல்கள்

## மனுவல் தம்பி லீனஸ்

(ஓய்வுபெற்ற யாழ்.தொழிற்திணைக்கள பிரதமலிகிதர், ஊர்காவற்றுறை YMCA ஸ்தாபகர்,தி.கு பொது நிலையினர் ஆசிரியத்தலைவர்)

கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், பொன்னாச்சி கடைச்சந்தி, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவல்தம்பி லீனஸ் நேற்று (11.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி மனுவல்தம்பி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சவரிமுத்து தம்பதிகளின் மருமகனும் பெனடிற்அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவரான அலோசியஸ், ரூபன், சாந்தினி, தீபன் மற்றும் ராஜினி, சுபாஜினி (ப.நோ.கூ.ச ஊர்காவற்றுறை), றோகன் (ஆசிரியர், யா/ஊர்காவற்றுறை, புனித அந்தோனியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்சகோதரி பெனிக்கா (தி.கு), அருட்சகோதரி வலன்ரைன்(தி.கு) ஆகியோரின் அன்புத் தம்பியும், ஜேசுதாசன் (அஜன் மரக்காலை, யாழ்ப்பாணம்), ஜீவப்பிரகாசம் (ப.நோ.கூ.ச, வேலணை), நஸ்மி (யா/புனித அந்தோனியார் றோ.க ஆண்கள் பாடசாலை , ஊர்காவற்துறை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜீவன், மிலோ ஜன், பிஜனுயன், சாலுகாரீனா ஆகியோரின் அன்புப் பேரனும், யோசப், மரியதாஸ், றோஸ்மலர், இந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(13.07.2010) செவ்வாய் கிழமை பி.ப 2 மணிக்கு நல்லடக்க ஆராதனையின் பின் புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: லி.இ.றோகன்(மகன்)
தெ.பே 0778680534

(சி/569215)

## திருமதி ஆழ்வாப்பிள்ளை சின்னம்மா



பெருந்தெரு, ஆண்டியாவளை, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆழ்வாப்பிள்ளை சின்னம்மா நேற்று (11.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை இலட்சுமியின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு (கொடிகாமம்), பார்வதி (புலோலி), மற்றும் செல்லையா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபேந்திரம் (ஹொலண்ட்), கணேசலிங்கம் (நிலஅளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), விசுவலிங்கம், கமலாவதி (சுவிஸ்), யோகநாதன், பத்மாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், குலமணி(ஹொலண்ட்), புஸ்பரதி, மேனகா, விமலநாதன் (சுவிஸ்), சூரியகலா ஆகியோரின் அன்பு மாமியாரும் சொர்மிலா (ஹொலண்ட்), சுரேகா (பிரான்ஸ்), சுஜீவ் (ஹொலண்ட்), விதுசன் (சுவிஸ்), வினுசாந்(சுவிஸ்), கோகிலன், கோபி, மதுசா, ராகவன், குருசியன், ஆகியோரின் அன்புப் போர்த்தியும், நிலக்சனா (ஹொலண்ட்), ரணிசன் (ஹொலண்ட்), சஞ்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரதுஇல்லத்தில் இன்று (12.07.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்தச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருந்தெரு,
புலோலி

(சி/569212)

தகவல்:
பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



கடந்த 10.07.2010 சனிக்கிழமையன்று
அகாலமரணமடைந்த கைதடி தெற்கைச் சேர்ந்த
குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்

## செல்வி சரவணை தர்சிகா

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலியையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

(100510)

கைதடி தெற்கு,
கைதடி.

பு.சசிகுமார் குடும்பம் (சசி அண்ணா),
ந.சசிகரன், ந.சரூபன்,
ச.சலஞ்சன் (மைத்துனர்மார்).

## அச்சுவேலியில் கொமர்ஷல் வங்கிக் கிளை இன்று திறப்பு

யாழ்ப்பாணம் ,ஜூலை12

கொமர்ஷல் வங்கிக்கிளை இன்று அச்சுவேலி நகரில் திறந்து வைக்கப்பட உள்ளது.

அச்சுவேலி ராய் வீதியில் இந்தக்கிளை திறக்கப்பட உள்ளதாகவும் வங்கியின் 180 ஆவது கிளை இதுவெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (டி)

## 'நெல்சிப்' திட்டமிடல் குழுக்கூட்டம் இன்று

யாழ்ப்பாணம் ,ஜூலை12

வலிகாமம் வடக்கு பிரதேச சபை 'நெல்சிப்' திட்டமிடல் குழுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச சபை தலைமைக்காரி யாலயத்தில் செயலாளர் இ.அருணகிரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் நெல்சிப் வேலைத்திட்டம் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. எனவே நெல்சிப் பிரதேச திட்டமிடல் குழு உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-டி)

## பாலர்பாடசாலை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை12

வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் உள்ளூராட்சி வார நிகழ்வுகளில், பாலர்பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா நாளை செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் வலி.வடக்கு பிரதேச சபை செயலாளர் இ.அருணகிரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளர் சி.குகனேயன் கலந்து கொள்வார். (ஒ-டி)

## 2ஆம் தவணைப் பரீட்சை திகதிகள் அறிவிப்பு

பருத்தித்துறை, ஜூலை12

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் இரண்டாம் தவணைக்கான பரீட்சைகள் ஆரம்பமாகி நடைபெறும் திகதிகள் பற்றி வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரால் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 11 உரிய பரீட்சைகளை எதிர்வரும் 21 ஆம் திகதியும் தரம் 6 தொடக்கம் 10 வரையான பரீட்சைகளை எதிர்வரும் 26 ஆம் திகதியும் தரம் 1 தொடக்கம் 5 வரையான பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதியும் ஆரம்பித்து நடத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை இரண்டாம் தவணைப் பரீட்சைகள் யாவும் பாடசாலை மட்டத்திலேயே நடத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-190)

## சிலாபம் விபத்தில் குருநகர்வாசி மரணம்

யாழ்ப்பாணம் ,ஜூலை12

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹயஸ் வாகனம் சிலாபம் பகுதியில் எதிரேவந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் குருநகரைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார் மற்றும் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று நடந்த விபத்தில் உயிரிழந்தவர் சத்தியவான் மரியதாஸ் மரியாம்பிள்ளை (வயது-73) என்பவர் ஆவார். இவர் குருநகர் இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்தவராவார்.

இவர் சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து நீர்கொழும்பு ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டு அங்கு மரணமானார்.

அதே இடத்தைச் சேர்ந்த அ.திபூசியஸ் (வயது-50), தி.கொறற்றி (வயது-45), அந்தோனிக்கம்மா (வயது-65) ஆகியோர் காயமடைந்து சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ-16)


### தேவை

கல்பேட், ஊர்ச்சேவல் கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும்.
158/4, தாசன் பாம், கோயில் வீதி, யாழ்ப்பாணம்.


### தவறிவிட்டது

132, பலாலி வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகக் கொண்ட செல்வரட்ணம் யசோதா 596622224 V செல்வரட்ணம் பரமேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை கைப்பையுடன் திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கந்தர் மடத்திற்கு வரும்வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் [illegible]

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன முகாமையாளர்
செல்வராசா அவர்களின் அன்புத் தந்தை

## வ.வேலுப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் எமது
கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கை
ஆக்குவதுடன் அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சகபணியாளர்கள்
Gateway குழுமம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிறேஸ் சிவக்கொழுந்து அருளானந்தம்



கிழவிதோட்டம், கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கிறேஸ் சிவக்கொழுந்து அருளானந்தம் 10.07.2010 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சி.அருளானந்தனின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் டெய்சி சுகுணவதனி, பிறின்சிலி சுகுணேந்திரன் (பிரான்ஸ்), அருள்திரு கிங்ஸ்லி சுரேந்திரன் (சபைக்குரு, அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை, மானிப்பாய்), றோஸி புனிதவதனி நோயல் ஜயகிஷன் (கொழும்பு), டொறின் சுவர்ணவதனி நவரட்ணராஜா (U.K.), அருள்திரு சாமுவேல் சுபேந்திரன் (முகாமைக்குழு, கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபை, மட்டக்களப்பு), கிறிஸ்ரினா ஷாமிலா குணரட்ணம் (உதவி அஞ்சல் அதிபர், அஞ்சல் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகுமாரி சுகுணேந்திரன் (பிரான்ஸ்), அஜித்தா சுரேந்திரன், நோயல் ஜயகிஷன் (உற்பத்தி நிறைவேற்றுநர், சிலோன் ரேப்ஸ், யாஎல), சுதர்சன் நவரட்ணராஜா (U.K.), அனுஷா சுபேந்திரன் (ஆசிரியர், மட்/ஊறணி சரஸ்வதி வித்தியாலயம்), டினேஸ் பிரியரங்கன் குணரட்ணம் (அபிவிருத்தி உதவியாளர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனா ஆரணி - எமி அனோஜா, அலன் அபிஷேக் - ஆன் அபிஷாறா, கெலன் நோயரின், அடினா பிறீத்தி, ஹனா அபிஷா - ஜோயன்னா பிரீத்திகா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (13.07.2010) செவ்வாய்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேரோண்டை மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிழவிதோட்டம், கரவெட்டி மத்தி,
கரவெட்டி. தொ.பே. 021 2262030 (சி/569214)

தகவல்:
பிள்ளைகள்.

## வல்லிபுரம் வேலுப்பிள்ளை (மனேச்சர்)



நாவற்குழியை வசிப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் வேலுப்பிள்ளை (மனேச்சர்) நேற்று (11.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் செல்வராசா (முன்னாள் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்), வரதராசா (முன்னாள் ஹட்டன் நஷனல் வங்கி உத்தியோகத்தர்), இராஜேஸ்வரி, விமலேஸ்வரி, கமலேஸ்வரி, யோகேஸ்வரி (ஆசிரியை, யா/நாவற்குழி ம.வி.), யோகேந்திரராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இந்திரா, சூரியகலா (ஆசிரியை), இராசலிங்கம், ராஜானந்தன், காலஞ்சென்ற கிருஷ்ணதாஸ் மற்றும் பாலச்சந்திரன், ஜெயந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்மிகா, தர்சிகா, பிரியங்கா, சித்திராங்கன், கீர்த்தனா, றவீன், றமித், மதூசன், நீருஜன், யதீசன், விஜித், திவாகர், நதியா ஆகியோரின் அன்புப் பேரனும் தனுப்பிரியாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2010) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேரதீவு றோட்,
நாவற்குழி. 021 3218859 (சி/569211)

தகவல்:
செல்வராசா (மகன்).

## நிற்சிங்கம் இரத்தினசிங்கம்

பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணியைச் சேர்ந்த நிற்சிங்கம் இரத்தினசிங்கம் நேற்று (11.07.2010) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நிற்சிங்கம் - இரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வனும் திருமதி நித்தியலட்சுமி (இலங்கை வங்கி), திருமதி நிமலநாயகி (ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி), நித்தியானந்தன் (பிரான்ஸ்), ஏகாம்பரநாதன் (சுவிஸ்), நிர்மலானந்தன் (சங்கானை பாமசி), நித்தியகல்யாணி (ஆசிரியை, வட்டு திருநாவுக்கரசு ம.வி), நாகராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுரேந்திரன், ஜெயக்குமாரன் மற்றும் தனபாலன், கனகநாதன் (S.V.M), புஸ்பலதா (ஆசிரியை, வட்டு இந்துக் கல்லூரி), பவானி, றாதிகா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (12.07.2010) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சன் ஷைன் மான்ஷன்",
சித்தன்கேணி.

(100512)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஐ.நா. நிறுவனங்களின் வாகனப் பயண அனுமதி

ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டு நிறுவனங்களின் வாகனங்கள் ஏ- 9 வீதியூடாக வன்னிப் பிரதேசத்துக்குச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சிடமே அனுமதி பெற்றுச்செல்லவேண்டும். இந்தப் புதிய விதி, அல்லது ஏற்பாடு கடந்த ஒரு வார காலத்திற்கு முன்னர் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது வரை காலமும் ஜனாதிபதி செயலணிக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று ஐ.நா. தொண்டு நிறுவனங்கள் ஏ-9 வீதியூடாக வன்னிப் பிரதேசத்துக்கு சென்று வந்தன.

இந்தத் திடீர் மாற்றத்துக்கான, புதிய ஏற்பாட்டுக்கான காரணம் எதுவும் நிச்சயமாகத் தெரியாது. உத்தியோகப் பூர்பமாகத் தெரிவிக்கப்படவில்லை.

போரினால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான வன்னி மக்கள் இப்போதுதான் தமது பகுதிகளில் மீளக் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். அவர்கள் தமது சொந்தத்தில் தொழில்செய்து தமது அன்றாட உணவுத் தேவையை தானும் நிறைவேற்றக் கூடிய தள நிலைமை இன்னும் உண்டாகவில்லை; உருவாக்கப்படவில்லை.

அதனால், அவர்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளை ஐக்கியநாடுகள் சபையின் தொண்டு நிறுவனங்களே பெரிய அளவில் செய்து வருகின்றன. உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தல், குடி தண்ணீர் விநியோகம், தற்காலிக வீடுகளை அமைத்தல், மலசல கூடங்களை அமைத்தல் உட்பட அத்தியாவசியத் தொண்டுகளை ஐ.நா. தொண்டு நிறுவனங்களே களைப்பின்றி, சலிப்பின்றிச் செய்துவருகின்றன.

இத்தகைய ஒரு கட்டத்தில், சந்தர்ப்பத்தில், ஐ.நா.தொண்டு நிறுவனங்கள் மீள்குடியமர்ந்த மக்களுக்கு நல்கும் நயமான சேவைகளுக்கு முட்டுக்கட்டை போடும் விதத்தில், அவற்றின் வாகனங்கள் ஏ-9 வீதியூடாக செல்வதற்குத் திடீரென ஒரு வார காலத்திற்கு முன்னர் வாகன அனுமதி முறை ஜனாதிபதி செயலணிக் குழுவிடமிருந்து மாற்றப்பட்டதன் பின்னணி என்ன? அதற்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை,

அரசாங்கம் இவ்வருடத்திற்குரிய வரவு - செலவுத் திட்டத்தில், பாதுகாப்பு அமைச்சுக்கே ஆகக் கூடுதல் நிதியை ஒதுக்கிய அதேவேளை, ஒப்பீட்டளவில் மீள் குடியேற்றம் மற்றும் மனிதாபிமானப் பணிகளுக்கு மிக மிகக் குறைந்த அளவிலேயே நிதியை ஒதுக்கியுள்ளது!

இத்தகைய பின்புலத்தில், அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட போரினால் இடம்பெயர்ந்து பல அவலங்கள், துன்பங்கள் சோதனைகளின் பின்னர் மீளக்குடியமர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு உதவ வேண்டிய தார்மீகப் பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்தது. ஆனால் அரசின் வரவு - செலவில் இந்த மக்களின் சேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதித்தொகை ''பச்சடி போடவும்'' போதாது!

இத்தகைய ஒரு சூழ்நிலையில், மீளக்குடியமர்ந்த மக்களுக்குத் தான் செய்ய வேண்டிய கடமை என்று உணர்ந்து, ஐ.நா.நிறுவனங்கள் செய்யும் மனிதாபிமானப் பணிகளை ஸ்தம்பிதம் அடையச் செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்துடனேயே அரசு செயற்படுகிறதோ என்று சந்தேகம் கொள்ளவைக்கிறது!

தமது வாழ்க்கையைத் தொலைத்து, அதனை மீளக்கட்டியெழுப்பி முந்திய நிலைக்கு வருவதற்கு உரிய நிதி வளமோ, ஏனைய ஆதார வசதிகள் தானும் இன்றி அல்லாடும் மீளக்குடியமர்ந்த வன்னித் தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் உதவிகளையும் தட்டிப் பறிக்கும் செயற்பாடாகவே அரசின் இந்த நடவடிக்கையைப் பார்க்க முடிகிறது. வெறும் நிர்வாக நடைமுறை மாற்றம் என்று அரசின் திடீர் செயற்பாட்டை தர்க்க ரீதியாகவேனும் கருத முடியாது!

அவ்வாறு இல்லை என்றால் -

ஐ.நா.சபையின் செயலாளர் நாயகத்துக்கு இலங்கை விவகாரம் குறித்து ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழு நியமிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக தலைநகர் கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள், கொடும்பாவி எரிப்புகள், முற்றுகைகள், உண்ணாவிரதம் என்பனவற்றின் சங்கிலித் தொடரான கைங்கரியங்களின் ஓர் அம்சமோ இது என்ற ஐயுறவையும் தொக்கி நிற்கச் செய்கிறது.

இல்லையேல், அல்லற்பட்டு, அல்லற்பட்டு வாழ்க்கையின் கடைசி எல்லைக்குள் சென்றுவிட்ட வன்னித் தமிழ் மக்களுக்கு அரசு செய்யாத, அருமருந்தன்ன உதவிகளை வழங்கிவரும் ஐ.நா.தொண்டு நிறுவனங்களை வழியை தடுத்துக் குற்றி போடுவதற்கு உண்டான அவசியமும், அவசரமும்தான் என்ன? இதற்குப் பதில் தெரியாத இருளில் வன்னித் தமிழ் மக்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளார்கள்!

*பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன் றகைமைக்கட் டங்கிற் றுலகு* - என்கிறார் வள்ளுவர்.

பகைவரையும் நண்பராக்கிக் கொண்டு செயற்படும் குணம் உடையவனுடைய பெருந்தன்மையில் தான் உலக நலம் அடங்கி உள்ளது.

# ஐ.நாவை ஆத்திரம் கொள்ளவைத்துள்ள அமைச்சர் வீரவன்ஸவின் ஆர்ப்பாட்டம்

**நேற்று 11.07.2010 அன்று சண்டே ரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி.**

ஜனாதிபதி ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும் சர்வதேச கொந்தளிப் பொன்றில் சிக்கிக் கொண்டிருக்கும் அதே வேளையில் ஜனாதிபதி ராஜபக்ஷ இந்து சமுத்திரத்தின் தீவுக் கூட்ட நாடான மாலைதீவில் எழுந்துள்ள அரசியல் பிரச்சினையைத் தீர்த்து வைக்கச் சென்றிருந்ததானது இலங்கையிலும் வெளிநாடுகளிலும் எல்லோரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. குறிப்பாக அவரது அரசாங்கம் ஐ.நாவுடனான சர்ச்சையொன்றில் மாட்டிக் கொண்டிருந்த வேளையில் எதிர்க்கட்சியினரும் இதுபற்றிக் குறை கூறத்தவறவில்லை. அவர்கள் சிலேடையாகச் சொன்னார்கள், மாலைதீவில் அவர் மேற்கொண்ட காரியம் அந்த நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடும் செயலுக்கு ஒத்ததாகும் என்று - ஜனாதிபதி புறப்படுவதற்கு ஒரு நாள் முன்பே அவருடைய அமைச்சரவை உறுப்பினர்களில் ஒருவரும் நெருங்கிய அரசியல் நம்பிக்கையாளருமான விமல் வீரவன்சவும் வேறு சில எதிர்ப்பாளர்களும் பௌத்த லோக மாவத்தையிலுள்ள ஐ.நா. வளாகத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். ஜனாதிபதி திரும்பி வந்த போது ஐ.நா செயலாளர்நாயகம் நியமித்த நிபுணர் குழுவை கலைக்கும்படியாகக் கோரி உண்ணாவிரதத்தில் இறங்கி இருந்தார் விமல் வீரவன் ஸ. வீரவன்ஸவின் செயல் ஐ.நா.வில் பெரும் எதிர்வலைகளையும் உலகம் முழுவதிலும் கண்டனங்களையும் ஏற்படுத்தியிருந்தது. மாலைதீவில் 2008 நவம்பரில் நடந்த தேர்தலில் மொஹமட் நஷீத் இரண்டாவது சுற்றுத் தேர்வில் வெற்றி பெற்று ஜனாதிபதி பதவியை ஏற்றிருந்தார். முதல் கட்டத் தேர்வில் முன்னாள் அதிபர் மவுமூன் அப்துல் கயூம் அதிகவாக்குகளைப் பெற்றிருந்தார்.

நஷீத் கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைத்திருந்தார். பல கட்சிகள் இதில் இணைந்திருந்தன. அதலாத் என்ற (தீவிர இஸ்லாமிய)நீதிக் கட்சியும் இதில் ஒன்றாகும். இணைந்திருந்த கட்சிகளுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருந்தன. அதிபர் நஷீத்தின் சொந்தக் கட்சியான மாலைதீவு ஜனநாயகக் கட்சிக்கும் ஏனைய கூட்டணிக் கட்சிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படலாயின. 2009 ஆம் ஆண்டு அந்த நாட்டு நாடாளுமன்றமான மக்கள் மஜ்லிஸ் தேர்தலின் போது முரண்பாடுகள் மேலும் அதிகரித்தன. கயூமின் திவெகி ஏய்யத் துங்கே கட்சியும் அதன் நட்புக் கட்சி ஒன்றும் அதிக ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டன. அதிருப்திகள் அதிகரித்ததால் மாலைதீவு ஜனநாயகக் கட்சி மக்கள் சபையில் அரசுக்கு எதிராக வாக்களிக்க முற்பட்டது.

ஆளும் ஜனநாயகக் கட்சி தேசிய சபைகளுக்கும் வேறு முக்கிய பதவிகளுக்கும் தனது சொந்த உறுப்பினர்களையே நியமிக்கத் தொடங்கியிருந்தது.

வெளிநாட்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்வதில் சொந்தத் தெரிவுகளைச் செய்ததாகவும், தேசிய சொத்துக்களை நாடாளுமன்ற அனுமதியின்றியே விற்பதிலும், வாடகைக்கு விடுவதிலும் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. மாலேயில் நவீன விமான நிலையம் ஒன்றை கட்டுவதற்கான பலகோடிடொலர் ஒப்பந்தம் ஒன்றினை மலேஷியா - இந்திய கூட்டு அமைப்பு ஒன்றுக்கு வழங்கியதாகவும் பெரும் குற்றச்சாட்டு எழுந்தது.

கடந்த வாரம் தேசிய நிதிகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பான மசோதா ஒன்று நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்ட போது ஜனநாயகக் கட்சி அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடு உச்சக்கட்டத்தை அடைந்தது. நாடாளுமன்றத்துக்கு அறிவிக்காமலேயே அரச சொத்துக்கள் விற்பனை மற்றும் அடமானத்துக்கு விடுவதை எதிர்த்தும் கட்டுப்படுத்தும் வகையிலும் எதிர்க்கட்சிகள் தீர்மானங்களைக் கொண்டுவர முற்பட்டன. அவை சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் அரசுக்குப் பெரும் தர்மசங்கடம் ஏற்படலாயிற்று. தீர்மானத்தை அங்கீகரித்துக் கையெழுத்திட ஜனாதிபதி நஷீத் மறுத்ததுடன் தனது அமைச்சரவையை ராஜினாமா செய்யும்படியும் பணித்தார்.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மலேயில் சென்றிறங்கியவுடனேயே ஜனாதிபதி நஷீத்துடன் ஆலோசனையில் கலந்தார். மக்கள்சபை தன்னிச்சையாக நடைபெற அரசமைப்பு இடம் தருவதால்அதனுடன்மென்மைப் போக்கைக் கடைப்பிடிக்கும்படி கேட்டுக் கொண்டார். வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களை விடுவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

அரச,எதிர்க்கட்சித் தலைவர்களும் அன்னியோன்யமாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

பின்னர் கயூமை சந்தித்த ராஜபக்ஷ மஜ்லிஸ் நடவடிக்கைகளில் தாம் தலையிடமாட்டார் என நஷீத் வாக்களித்திருக்கிறார் எனத் தெரிவித்தார். எல்லா சட்டங்களையும் சபை விவாதிப்பதற்கு அவர் அனுமதிப்பார் என்றும் ராஜபக்ஷ கூறினார். கயூம் பதவியில் இருந்த போது இலங்கையில் புலிகளின் பயங்கர வாதத்தை ஒழிக்க முழு ஆதரவும் வழங்கியமையால் தமது அரசின் அனுசரணைகளை மகிழ்ச்சியுடன் வழங்க முன் வந்ததாகவும் அவரிடம் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையைப் பொறுத்த வரை மாலைதீவு அரசமைப்பு தெரிவிக்கும் வகையில் நஷீத்தின் அமைச்சரவையை ஏற்பதும் மறுப்பதும் நாடாளுமன்றத்தைப் பொறுத்த விடயம் என்று ராஜபக்ஷ கூறி விட்டார்.

இலங்கை - மாலைதீவு அரசுத் தலைவர்கள் விடுத்த கூட்டறிக்கையில் இலங்கை ஜனாதிபதியின் நல்லெண்ண விஜயத்தை அந்த நாடு வரவேற்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மாலைதீவு அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்ட ஒற்றுமையில் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு மக்கள் சபையில் இருந்தும் எதிர்க்கட்சியிலிருந்தும் தலா மூன்று பேர் கொண்ட ஆறுபேர் குழுவொன்றை நியமிப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கடந்த புதன்கிழமை இரவு நஷீத் இன்னமும் விட்டுக் கொடுப்பதாய் இல்லையென்பதற்கான அறிகுறிகள் தென்படலாயின.

ராஜபக்ஷ நாடு திரும்புவதற்கு முன்பே நஷீத் தனது புதிய அமைச்சரவைக்கு சத்தியப் பிரமாணம் செய்து வைத்தார். இவர்கள் அனைவருமே முன்னைய அமைச்சர்களும் அதே பதவிகளுமாகவே காணப்பட்டன. இவர்கள் ஏழுநாள்களுக்குள் மக்கள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

தமிழில்: கோகுலன்

## கடுமையான தொனியில், பான் கீ மூன் அறிக்கை

ராஜபக்ஷ வியாழக்கிழமை நாடு திரும்பினார். நம்பிக்கைக்குரிய அமைச்சர் விமல் வீரவன்சவால் உருவாக்கப்பட்டிருந்த பெரிய பிரச்சினையை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர்களும் அவர்களின் குழுவினரும் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள ஐ.நா. வளாகத்தைச் சூழ்ந்து கொண்டனர். பணயம் வைக்கும் சூழ்நிலையொன்று உருவாக்கப்பட்டுவிட்டதாக கொழும்பிலுள்ள ராஜதந்திரிகள் அதிர்ச்சிக்குள்ளாகி இருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அரசின் முழு ஆதரவு இருந்ததாகவே பேச்சுக்கள் அடிபட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் தள்ளுபாடு ஏற்பட்டது. வீரவன்சவின் தீவிர ஆதரவாளரும் முன்னாள் அமைச்சருமான பியசிறி விஜேனாயக்கவும் பொலிஸ் தாக்குதலில் காயமடைந்த ஆறுபேரில் ஒருவராவார். ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒழுங்கீனமாகச் செயற்படுகிறார்கள் என்று கேள்விப்பட்டதையடுத்தே அவர்கள் தலையிட்டதாகக் கூறப்பட்டது.

அடுத்தநாள் (புதன்கிழமை) வீரவன்ஸ இறுதி எச்சரிக்கையொன்றை விடுத்தார். அன்று மாலை 6 மணிக்கு முன் ஐ.நா. செயலாளர் நாயகம் நிபுணர் குழுவைக் கலைக்காது போனால் தாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்று அவர் அறிவித்தார்.

நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் வீரவன்சவின் ஆர்ப்பாட்டம் தொடர்பாக கோபத்துடன் கூடிய பிரதி பலிப்புக் காணப்பட்டது. மூவின் பிரதம அலுவலர் விஜே நம்பியார் இலங்கையின் நிரந்தர ஐ.நா. பிரதிநிதி பாலித கொஹனவை அலுவலகத்துக்கு அழைத்தார். இந்தச் சந்திப்பின் போது இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலர்களுக்கு பத்திரமும் பாதுகாப்பும் அளிக்கப்படும் என்று அவர் ''முழுமையான தெளிவான'' வாக்குறுதியளித்தார் என்று ஐ.நா. துணைப் பேச்சாளர் ஃபாகர்ன் ஹாக் கூறியிருந்தார். இருந்த போதிலும் வளவுக்கு வெளியில் இன்னும் ஆர்ப்பாட்டக் காரர்கள் இருப்பதாக அறிகுறிகள் தென்படு கின்றன. அலுவலர்கள் அனைவரும் திரும்புவார்களா என்பதை வதிவிட குழு அவதானிக்கும் என்று அவர் மேலும் கூறினார். கேள்விகளுக்கு அவர் தொடர்ந்து பதிலளிக் கும் போது, இந்த விடயத்தை நாங்கள் பாரதூரமாகவே எடுத்துக் கொள்கின்றோம். அலுவலர்களின் நடமாட்டத்தை எதுவும் பாதிக்குமானால் அது பாரதூரமானதாகவே இருக்கும். எமது பணிகள் இடையூறு இல்லாமல் நடைபெற உதவுவதாக இலங்கை அரசு கொடுத்துள்ள வாக்குறுதியைக் காப்பாற்றும் என்று நம்புகிறோம் என்றார்.

**கேள்வி: ரொய்ட்டர் செய்தியில் பொலிஸார் அலுவலர்கள் வெளியில் செல்ல அனுமதிக்க முயற்சி செய்த போது வீரவன்ச ஜனாபதியின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவை அழைத்தார். உடனே பொலிஸார் அலுலவர்கள் வெளியே செல்ல அனுமதிப்பதை நிறுத்திவிட்டார்கள் என்று கூறப்பட்டிருப்பது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

அரச தரப்பில் தலையீடு செய்யப்பட்டதால் எல்லா அலுவலர்களும் வெளியில் கொண்டுவரக் கூடியதாக விருந்தது. மற்றபடி அந்த அழைப்பு பற்றி குறிப்பாக எனக்கு ஒன்றும் தெரியாது. அரச அதிகாரிகளும் பொலிசாரும் ஐ.நா. அலுலவர்கள் பாதுகாப்பாய் இருக்க வேண்டும் என்ற அவர்களின் கடப்பாடுகளை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகின்றோம்.

உண்ணாவிரதத்தை வீரவன்ச தொடர்ந்து மேற்கொண்டார். பான் கீ மூன் நிபுணர் குழுவைக் கலைக்கும் வரை தொடரப் போவதாகவும் அறிவித்தார்.

அதேநேரம் ஐ.நாவின் பிரதிபலிப்பு மீண்டும் வேகமாகவே இருந்தது. அவர்கள் விடுத்த அறிக்கை பின்வருமாறு அமைந்தது.

கொழும்பிலுள்ள ஐ.நா செயலகம் தனது வழமையான செயல்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பதைத் தடுப்பதில் இலங்கை அதிகாரிகள் தோல்வி கண்டிருப்பதை ஐ.நா. செயலாளர் நாயகம் முற்றாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றார். அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவராலேயே ஏற்பாடு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ள ஒழுங்கீனமான ஆர்ப்பாட்டத்தின் விளைவால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் காரணமாக ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் நீல் புஹ்னேயை ஆலோசனைகளுக்காக நியுயோர்க் வரும்படி அழைத்துள்ளார். அத்துடன் கொழும்பிலுள்ள யு.என்.டி.பி. பிராந்திய நிலையமும் மூடப்பட்டிருக்கும் என்று அறிவித்துள்ளார். ஐ.நாவின் உபசரணை நாடு என்ற முறையில் இலங்கை அரசாங்கத்தைத் தனது பொறுப்புக்களை உணர்ந்து நடந்து கொள்ளும்படி செயலாளர் நாயகம் கேட்டுக் கொள்கின்றார். மேற்கொண்டும் வேறு இடைஞ்சல்களின்றி இலங்கை மக்களுக்கு ஐ.நா. வழங்கும் முக்கிய பணிகளைத் தொடர்வதற்கு உறுதியளிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

## நாளை

ஆனி 29 — 13.07.2010
செவ்வாய்க்கிழமை
திதி: : துதியை
மு.இ. 09.18 வரை
நட்சத்திரம் : பூசம்
பி.ப. 02,16 வரை
சுபநேரம் : 10.29-11.59 வரை
ராகுகாலம் : 02.58-04.29 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணத்துக்கான அதிமுக்கிய சுற்றுச்சூழல் மதிப்பீடு பூர்த்தி

வடமாகாணத்துக்கான அதிமுக்கிய சுற்றுச்சூழல் மதிப்பீட்டை மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை செய்து முடித்துள்ளது.

வடமாகாணத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்கு அரசு முற்பட்டுள்ள இவ்வேளையில் செய்து முடிக்கப்பட்டுள்ள இந்த மதிப்பீட்டின் மூலம் அபிவிருத்திக்கான முக்கிய இடங்களை இனங்காண முடியும் என்று கருதப்படுகின்றது.

அனர்த்த முகாமைத்துவ தேசிய கட்டட மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்களின் ஆதரவுடன் இந்தக் கணிப்பீடு செய்து முடிக்கப்பட்டிருப்பதாக மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் தலைவர் சாரித்த ஹேரத் இந்தத் தகவலை தெரிவித்தார்.

இத்துறையின் ஆய்வுக்கான நிதியுதவிகளை ஐ.நா அபிவிருத்தித் திட்டம் வழங்கியிருக்கின்றது. திருகோணமலை, அம்பாந்தோட்டை வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாகவும் மத்திய சுற்றுச்சூழல் அபிவிருத்தி அதிகாரசபை அதிமுக்கிய சுற்றுச்சூழல் கணிப்பீடுகளைச் செய்து முடித்துள்ளது.இந்தப்பகுதிகளும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வருவதாகத் தெரிகின்றது. (ப)

## மாணிக்கவாசகர் குருபூசை தினம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசை தினம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

* * *

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசைத் தினம் நாளைமறுதினம் புதன்கிழமை பாடசாலை அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விசேட நிகழ்வாக மாணவர்களின் கலைநிகழ்வுகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (ஒ-டி)


உங்களை உணருங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

THE ART OF LIVING

அவர்களின்

வாழும் கலைப் பயிற்சி

உலகில் 182 நாடுகளுக்கு மேல் வெற்றிகரமாகப் பயிற்றப்படும் வாழும் கலைப் பயிற்சி மீண்டும் நமது இடத்தில் ஆரம்பமாகிறது.

★ சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், எளிய யோகா ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி

★ ஞாபகசக்தி அதிகரிக்க
★ நிகழ்காலத்தில் வாழ
★ மனதை ஒரு நிலைப்படுத்த
★ வேலைகளில் முழுக்கவனம் செலுத்த
★ ஆஸ்மா, இரத்தக்கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபட

இதில் கலந்துகொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறிமுக உரை

இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபம்
காலம் : இன்று (12.07.2010) திங்கட்கிழமை
நேரம் : மாலை 5.15 மணிக்கு

வாழும் கலைக்குழுமம்
T.P: 0777740593

(100506)



பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் 2010

கிளி/பூநகரி மகாவித்தியாலயம்

மேற்படி கூட்டம் 18.07.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்

கிளி/பூநகரி மகாவித்தியாலயம்.

(100503)



Mathuram Institute

Dutch Road, Irupalai Kopay South.


## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை12

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி, பெருக்கடி என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ நாக புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. பக்தர்கள் எண்ணைக் காப்புச் சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும். கும்பாபிஷேக பிரதம குரு சிவாச்சார்யமணி சிவஸ்ரீ க.மகாகணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும். (ஒ-டி)

## நாளை மின் தடை

யாழ்ப்பாணம், ஜூலை12

பருத்தித்துறை பிரதான வீதியை அகலமாக்கும் பணிகளுக்கான மின் விநியோகத் தூண்கள் இடமாற்றப்படவுள்ளதால் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை பின்வரும் இடங்களில் மின்விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை மற்றும் தென்மராட்சிப் பிரதேசம் முழுவதும் மின்தடை நடைமுறையில் இருக்கும் என இலங்கை மின்சார சபை, மின் அத்தியட்சகர் அறிவித்துள்ளார் (ஒ)

## விஞ்ஞானக் கருத்தரங்கு

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் 'ஒ' பிரிவின் அனுசரணையுடன் போருக்குப் பிந்திய அபிவிருத்தி தொடர்பில் "சூழலும் அது சார்ந்த சட்டமும்" எனும் கருப்பொருளிலான இலவசக் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பௌதிகவியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கருத்துரையை யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை உதவி விரிவுரையாளர் கு.குருபரன் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்று யாழ்.விஞ்ஞான சங்கத்தின் 'ஒ' பிரிவின் செயலாளர் கலாநிதி கு.வேலா [illegible] அறிவித்துள்ளார் (ஒ)

## சபிண்டீகரண அழைப்பு



### திருமதி சுப்பிரமணியம் செல்லமுத்து

கடந்த 14.06.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத்தெய்வம் திருமதி சுப்பிரமணியம் செல்லமுத்து அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை நாளை (13.07.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**என்றும் எம் நன்றிக்குரியவர்கள்**

எமது அன்புத்தாய் மறைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து எம்மை அரவணைத்து ஆறுதல் கூறித் தேற்றிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும், ஊடகங்கள் , கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் செய்தி வெளியிட்டவர்கள், வெவ்வேறு நாடுகளிலிருந்து எம்மோடு துயர்பகிர்ந்து கொண்டவர்கள், உறவினர்கள், நண்பர்கள், இறுதி நல்லடக்கம்வரை பல வழிகளிலும் எம்மோடு நின்று உதவிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்து என்றும் நன்றிக்குரியவர்களாகின்றோம்.

முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி.

குடும்பத்தினர்.

செல்லமுத்தூஸ் புடவை மாளிகை நெல்லியடி.


மீண்டும் இசைக்கொலுவேறிட

வெளிநாடுகளிலும் புகழ் ஈட்டிய முத்தான கலைஞர்களின் சங்கமம்

ஸப்தஸ்வரா இசைக் குழு

உங்கள் விழாக்களுக்கு அழைத்து மகிழ்ந்திட

தொடர்பு
ஸ்ரீகுகன், விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு. 0776980573, 0213216621
ஸ்ரீ, கொடிகாமம், 0779405549
இரா.சிவராமன், அரச வீதி, நல்லூர், 0774707629, 0214909203


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை முன்னாள் அதிபர் திருக்குடும்ப சபை அருட்சகோதரி

**லூயிஸ் அந்தோனிப்பிள்ளை**

அவர்களின் திடீர் மறைவையொட்டி அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். போர்டோவின் திருக்குடும்ப சபையின் யாழ். மாகாணத் தலைவிக்கும் ஏனைய அருட்சகோதரிகளுக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/நெடுந்தீவு றோ.க மகளிர் கல்லூரி
நெடுந்தீவு.

(100748)

## கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் குடும்ப நல மருத்துவமாதுவாக சேவை புரிந்து வேலணை பிரதேச வைத்தியசாலையில் 10.07.2010 அன்று அகால மரணமடைந்த குடும்ப நல மருத்துவமாது

**செல்வி சரவணை தர்சிகா**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரியும்,
உத்தியோகத்தர்களும்.
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - ஊர்காவற்றுறை.

## இதய அஞ்சலி



ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் குடும்ப நல மருத்துவமாதுவாக சேவை புரிந்து வேலணை பிரதேச வைத்தியசாலையில் 10.07.2010 அன்று அகால மரணமடைந்த குடும்ப நல மருத்துவமாது

**செல்வி சரவணை தர்சிகா**

அவர்களுக்கு எமது கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அவரின்பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரச குடும்ப சுகாதார உத்தியோகத்தர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(சி-569204)

## கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் குடும்ப நல மருத்துவமாதுவாக சேவை புரிந்து வேலணை பிரதேச வைத்தியசாலையில் 10.07.2010 அன்று அகால மரணமடைந்த குடும்ப நல மருத்துவமாது

**செல்வி சரவணை தர்சிகா**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2004A குடும்பநல உத்தியோகத்தர்கள்,
கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,

(சி-569203)

## மரண அறிவித்தல்

### திருமதி பூலோகராஜா திரவியம்

அனுராதபுரம், மாவடியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு, 3ஆம் கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூலோகராஜா திரவியம் நேற்று (11.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற V.C.பூலோகராஜாவின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும், புஸ்பராணி (வவுனியா), காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் சந்திரமதி(கண்டி), சிவநேசன் (சுவீடன்), யோகராணி, விஷ்ணுதாஸ் (அவுஸ்திரேலியா), சந்திரகாந்தா (சமுர்த்தி உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்திரகாந்தா (சந்திரா- மகள்),
[சமுர்த்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்].

03ஆம் கட்டை,
பருத்தித்துறைவீதி, கல்வியங்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அகில இலங்கைக் கலை இலக்கியச் சங்கத்தின் கலை இலக்கிய விழாவின் முதல்நாள் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய ஒருவருக்கு பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட உடுவை எஸ்.தில்லை நடராஜா பரிசில் வழங்குவதை முதலாவது படத்திலும், சிறப்பான கலைப் பணி ஆற்றியமைக்காக கொழும்புத்தமிழ்ச் சங்கத்துக்கு வழங்கப்பட்ட விருதை அச்சங்கத்தின் துணைத்தலைவர் சட்டத்தரணி இராஜகுலேந்திரா, அகில இலங்கைக் கலை இலக்கிய சங்கத் தலைவர் பொன். சுகந்தனிடமிருந்து பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும், விழாவில் இடம்பெற்ற கலைநிகழ்வுகளை இறுதியிரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: ஹரிஸ்)

# 'நீ முன்னாலே போனால் நான் பின்னாலே வாறேன்!' பஸ்களின் ஓட்டப் பந்தயத்தில் பரிதவிக்கும் பயணிகள்

கட்டைவேலி, ஜூலை 12

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இ.போ.ச. பஸ் வண்டிகளும் தனியார் மினி பஸ்களும் ஏட்டிக்குப் போட்டியாக சேவையில் ஈடுபட்டு ஒன்றையொன்று துரத்திச் செல்வதால் பயணிகளும், வீதியில் ஏனைய வாகனங்களைச் செலுத்துவோரும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருவதாகக் கூறப்படுகின்றது.

பஸ் வண்டிகளின் பற்றாக்குறையினால் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மிகக் குறைந்தளவு பஸ் வண்டிகளே சேவையில் ஈடுபடுகின்றன. இதன் காரணமாக மினி பஸ் வண்டிகளுக்குப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட நிறைய வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. அதாவது 15 நிமிடங்கள் இடவெளியில் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் வீதியில் மினி பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரத்திற்கு ஒரு இ.போ.ச. பஸ் சேவைதான் இவ்வீதியூடாக இடம் பெற்று வருகின்றது. எனினும் இ.போ.ச. பஸ் வண்டி பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் நேரத்தைக் கணித்தே மினி பஸ் வண்டியும் புறப்படுகின்றது.

இதனால் பஸ் வண்டிக்குள் இருந்து பயணிக்கும் பயணிகள் விபத்து நேர்ந்துவிடுமோ என அஞ்சிய படியே பயணிக்க வேண்டியுள்ளது. வீதியில் ஓடும் இதர வாகனங்களும் இப்போட்டி ஓட்டத்தால் திக்குத்திணற வேண்டியுள்ளது. அது மட்டுமன்றி வீதியில் பயணத்திற்காக காத்திருக்கும் பயணிகள் சிலரையும் ஒன்றை ஒன்று துரத்திச் செல்லும் பஸ் வண்டிகளை ஏற்றிச்செல்ல மறுத்து, தமது ஓட்டப் பந்தயத்திலே குறியாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

உரிய அதிகாரிகள் இவ்விடயத்தினையிட்டு தகுந்த தீர்வினைத் தரவேண்டுமென வடமராட்சிப் பிரதேசப் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-275)

# பொக்கணை நீரூற்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்

நாவற்குழி,ஜூலை12

ஊரெழு, பொக்கணைக் கிராமத்திலுள்ள வற்றாத கிணற்று வளாகத்துக்குப் பாதுகாப்பு உத்தியோகத்தரை நியமிப்பதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.கிளை, தலைமை அலுவலகத்திடம் அனுமதியைக் கோரியுள்ளது.

பாதுகாப்பு உத்தியோகத்தரை நியமிக்க அனுமதி கிடைத்தபின் பொக்கணை நீரூற்றைச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிட அனுமதி வழங்கப்படலாமெனவும் கூறப்படுகின்றது.

உள்ளூர்,வெளியூர் சுற்றுலாப் பயணிகள் இந்த நீரூற்றைப் பார்வையிட விரும்பிய போதும் இதுவரை அனுமதி கிடைக்காதமை குறிப்பிடத்தக்கது. (எ-121)

# யாழ். நகரை இரவுவேளைகளில் கைவிடும் வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அநேகமான மின் விளக்குகள் இரவில் ஒளிர்வதில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாகவும் மற்றும் முக்கிய சந்திகளிலும் பொருத்தப்பட்டுள்ள இந்த மின் விளக்குகள் மின்மினிகள் போல விட்டு விட்டே ஒளிர்கின்றன.

இதேவேளை, வீதிவிளக்குகள் கைவிட்டாலும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வர்த்தகர்களால் பொருத்தப்பட்ட மின் குமிழ்கள் பிரகாசத்துடன் எரிவதாலேயே நகரில் இரவு வேளைகளில் நடமாடித் திரிவதற்குரிய வெளிச்சம் கிடைப்பதாகவும் சுட்டிக்காட்டுப்படுகின்றது. (எ-224)

# பின்னே நகரும் தொலைபேசிக் கம்பங்கள்

வடமராட்சி ,ஜூலை12

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலமாக்கப்படுவதையடுத்து 'கேபிள்' தொலைபேசி இணைப்புள்ள கம்பங்கள் யாவும் பின்னோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றன.

தொலைபேசிக் கம்பங்களைப் பின் நோக்கி நகர்த்துவதற்கான வேலைகளை 'ரெலிக்கொம்' நிறுவனம் தனியாரிடம் ஒப்படைத்துள்ளது.

தற்போது வடமராட்சிப் பகுதியில் தொலைபேசிக் கம்பங்களை பின் நோக்கி நகர்த்தும் பணி துரிதமாக நடைபெற்று வருகின்ற அதேசமயம் தொலைபேசிச் சேவைகள் எதுவும் பாதிக்கப்படாத நிலையிலேயே இப்பணி இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (எ-236)

# பற்றையை வெட்டப் புறப்பட்டது 'பங்கர்'!

நவாலி,ஜூலை 12

மானிப்பாயில் பற்றையை வெட்டிய போது பாரிய பங்கரொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரிய வருவதாவது: -

மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதியில் நீண்ட காலமாகப் பற்றைக் காடாகக் கிடந்த 10 பரப்புக் காணியொன்றை டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கையின் கீழ் துப்புரவு செய்வதற்காக சண்டிலிப்பாய் பிரதேச செயலர், மானிப்பாய் பிரதேச சபை செயலாளர், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோர் அடங்கிய குழு வொன்று சென்றது.

3 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த சுமார் 300 இலகுவேலைத் திட்ட பயனாளிகள் பற்றைகளை அகற்றிக் கொண்டிருந்த வேளையில் அங்கு பாரிய பங்கரொன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள இந்த பங்கருக்குள் வெளவால்கள் குடிகொண்டுள்ளன.

இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்ட பங்கரினைப் பாதுகாப்புப் படையினரும் பார்வையிட்டு சென்றுள்ளனர். (எ-100)

# வடமராட்சிக்கான மின்விநியோகம் ஓகஸ்ட் மாதத்துக்கு முன் வழமைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 12

வடமராட்சிப் பகுதியில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் மின்வெட்டு நிறுத்தப்பட்டு ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் வழமை போல சீரான வகையில் மின்சாரம் வழங்கப்படும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வீதி அகலிப்புப் பணிகள் நடைபெறுவதனால் மின் கம்பங்களை வேறு இடங்களில் நடவேண்டி உள்ளது. இதனால்தான் வாரத்தில் 3 நாள்கள்- 8மணி முதல் 6 மணி வரை வடமராட்சி உள்ளிட்ட சில பகுதிகளில் மின்சாரம் தடைசெய்யப்படுகிறது.

சிலவேளைகளில் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இரவு 7.30மணி வரை கூட இந்த மின் வெட்டு நீடிக்கின்றது. எனினும் இலங்கை மின்சாரசபை துரிதமாகச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. மின்வெட்டு அமுல் செய்யப்படும் நாள்களில் இயலுமான வரை 6 மணிக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த மின்வெட்டுக் காரண மாக சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், நிலாவரை, வடமராட்சி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படுவதால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகுகின்றனர் எனவும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மின்விநியோகம் சீர்செய்யப்படுவதன் ஊடாக இதனை நிவர்த்தி செய்ய முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)




# யானைப் பசிக்குச் சோளப்பொரி; வீதிப்புனரமைப்புக் குறித்து ஆதங்கம்

வண்ணை,ஜூலை12

யாழ்.பாங்ஷால் வீதி மற்றும் ஆறாம் குறுக்கு வீதி என்பவற்றின் சில பகுதிகள் கொங்கிறீற், தார் மூலமாகச் செப் பனிடப்பட்டுள்ளன.

அதேவேளை மேற்படி வீதிகளில் மேலும் பல பகுதிகள் குண்டும் குழியுமாகவே காட்சியளிக்கின்றன.

இதனால் மேற்படி வீதிகளில் பயணிக்கும் பிரயாணிகள், பாடசாலை மாணவ, மாணவிகள் தினமும் அசௌகரியங்களுக்கு உட்பட்டே பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் யாழ். மாநகர சபை வேலைப் பகுதியினரால் குறித்த வீதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் திருத்த வேலைகள் யானைப்பசிக்குச் சோளப்பொரி போட்டது போலிருப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-160)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளால் அப்புறப்படுத்தப்படும் பற்றைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாகப் பற்றைக் காணிகளை துப்புரவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நல்லூர்ப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பற்றைக் காணிகளை உரிமையாளர்கள் துப்புரவுசெய்ய வேண்டும் எனவும் அவற்றை மீறும் பட்சத்தில் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரமரிப்பு அற்றிருக்கும் பற்றைக் காணிகள் சம்பந்தமாக நல்லூர்ப் பிரதேச சபைக்குப் பொதுமக்கள் உடன் தகவல் வழங்கினால் சபை அவற்றை பொறுப்பேற்றுத் துப்புரவு செய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை உரிமை கோரப்படாத பற்றைக் காணிகளை பொறுப்பேற்கும் நடவடிக்கைகளை பிரதேச சபை மேற்கொள்ளும் என வும் நல்லூர் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-[illegible])

# ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வடமராட்சி,ஜூலை12

வடமராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாக உள்ள ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், சுகாதாரமும் உடற்கல்வியும், விஞ்ஞானம், மனைப்பொருளியல், இரண்டாம் மொழி சிங்களம், விவசாயம், சித்திரம், சங்கீதம், நடனம்,கிறிஸ்தவம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிகளுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

இப் பதவிகளில் சித்திரம், சங்கீதம், நடனம், கிறிஸ்தவம் ஆகிய பாடங்களுக்கு வடம ராட்சி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு உரிய தகைமையுடைய ஆசிரியர்கள் தங்களது விண்ணப்பங்களை யாழ்ப்பாண மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா தெரிவித்துள்ளார். (எ-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒஸ்டியோபொரோஸிஸ் - இந்நோய்க்கு எதிராகப் போராடுவதற்கு இன்னமும் காலம் கடந்துவீடவில்லை

டாக்டர் கலீல் காசிம் MBBS, MD (Medicine) வாத நோய் நிபுணர் + ஜயவர்தனபுர பெரியாஸ்பத்திரி

சென்ற வாரத் தொடர்ச்சி

## ஒஸ்டியோபொரோஸிஸ் நோய்க்கு சிகிச்சையளிக்க முடியுமா?

ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட தடுப்பு முறைகளைத் தவிர நீங்கள் ஒஸ்டியோபொரோஸினால் பீடிக்கப்பட்டவராயின், வேறு வகையான சிகிச்சைகளும் உள்ளன. ஒஸ்டியோபொரோஸிஸ் ஏற்பட்டதும், மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகின்றன. எலும்புகள் முறிவதற்குக் காரணமான செல்களின் செயற்பாட்டை இந்த மருந்துகள் தடுக்கும். எனவே, அவை எலும்பு மாஸை அதிகரிப்பதற்கும் எலும்புகளைப் பலப்படுத்துவதற்கும் உதவுகின்றன. எலும்பு முறிவு ஏற்படும் ஆபத்தையும் இது குறைக்கின்றது. ஒஸ்டியோபொரோஸினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு முதல் வருட சிகிச்சையின் போது புதிதாக முதுகெலும்பு முறிவு ஏற்படும் ஆபத்தை 60 தொடக்கம் 70 வீதம் வரை குறைக்க முடியும் என்பது அண்மைய ஆய்வின் மூலம் புலனாகின்றது. போதியளவு கல்சியமும் அவசியமாயின் விட்டமின் D யும் உட்கொள்ளுமாறு சிபார்சு செய்யப்படுகின்றது.

## எனக்கு ஒஸ்டியோபொரோஸிஸ் நோய் ஏற்பட்டிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?

சில இலகுவான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் எந்த வயதிலும் ஒஸ்டியோபொரோஸிஸ் ஆபத்தை உங்களால் கட்டுப்படுத்த முடியும். இந்த ஆலோசனையை நீங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் பின்பற்றினால் உங்கள் எலும்புகளைப் பாதுகாக்க முடியும். இந்த ஆலோசனையால் உங்கள் நெருங்கிய நண்பர்கள் அல்லது குடும்ப அங்கத்தவர்களும்கூட பயனடையலாம்.

## அறிவுறுத்தப்பட்டவாறு சிகிச்சையை மேற்கொள்ளவும்

சிறந்த பலன்களைப் பெறுவதற்கு உங்களுக்கு நீண்டகாலப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், பல வருடங்களுக்கு தொடர்ந்தும் நீங்கள் சிகிச்சை பெறவேண்டியிருக்கும். ஒஸ்டியோபொரோஸிஸ் நோய் காரணமாக எலும்பு மாஸ் குறைவதற்கு எவ்வளவு காலம் எடுக்கின்றதோ அதனை மீளக் கட்டியெழுப்புவதற்கும் காலம் எடுக்கின்றது. சிகிச்சையின் பயனுறுதித்தன்மையை நீங்கள் பார்க்கவோ, உணரவோ முடியாது. எவ்வாறாயினும், உங்களுக்கு எலும்பு முறிவு ஏற்படும் ஆபத்தை அது குறைக்கும். ஒரு வருடம் சரிவர சிகிச்சை பெற்ற பின்னர் உங்களுக்கு புதிதாக முதுகெலும்பு முறியும் ஆபத்து கணிசமான அளவு குறைந்துவிடும். எனவே, உங்கள் எலும்புகளைப் பலப்படுத்தி எதிர்காலத்தில் எலும்பு முறிவுகள் ஏற்படாமல் அதனைப் பாதுகாக்க வேண்டும் என நீங்கள் விரும்பினால் உங்கள் வாத நோய் நிபுணரின் ஆலோசனையை பின்பற்ற வேண்டும்.

## உங்கள் உணவு குறித்து அவதானமாக இருக்கவும்

உங்கள் உணவு, குறிப்பாக நீங்கள் உட்கொள்ளும் கல்சியத்தின் அளவு எலும்பு மாஸை பேணிப் பாதுகாப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றது. போதியளவு கல்சியம் எடுக்குமாறு- நாளொன்றுக்கு சுமார் 1500 மில்லி கிராம் உட்கொள்ளுமாறு உங்களுக்கு

ஆலோசனை கூறப்படுகின்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை நீங்கள் நாளாந்தம் எடுக்க வேண்டிய கல்சியத்தின் அளவைக் கணிப்பதற்கு உதவும்.

பால் உணவுப் பொருட்களில் முக்கியமாக பெருமளவு கல்சியம் உள்ளது. பூரண கொழுப்புடைய பால் உணவுப் பொருட்களைப் போன்றே ஆடை நீக்கப்பட்ட பால் மற்றும் குறைந்தளவு கொழுப்பு சத்துடைய பால் உற்பத்திப் பொருட்களிலும் அதேயளவு கல்சியம் உள்ளது. எனவே, நீங்கள் குறைந்த அளவு கலோரி உணவை உட்கொள்ளும் அதேவேளையில், உங்களுக்கு போதியளவு கல்சியம் கிடைப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். கனிச்சத்துக்கள் நிறைந்த சிலவகையான இயற்கை நீரிலும் கல்சியம் பெருமளவு உள்ளது

உங்களது உணவைப் பூரணப்படுத்துவதற்கு கல்சியம் உட்கொள்ள வேண்டும். பல்வேறு வகையான கல்சிய உணவுகள் உள்ளன. இதுபற்றி நீங்கள் உங்கள் வாத நோய் நிபுணருடன் கலந்தாலோசிக்கலாம்.

## சூரிய ஒளியின் சக்தியைப் பெறுங்கள்

ஒஸ்டியோபொரோஸிஸ் நோய்க்கு எதிராக போராடுவதற்கு சூரிய ஒளி உதவியாகவுள்ளது. உடல் மீது சூரிய ஒளி பட்டதும் தோல் விட்டமின் D யை பெற்றுக்கொள்ளத் தொடங்குகின்றது. இந்த விட்டமின் முக்கியமானதாகும். ஏனென்றால், கல்சியம் இரைப்பையினால் உறிஞ்சப்பட்டு எலும்புகள் பலமடைவதற்கு இது ஏதுவாக அமைகின்றது.

எனவே, ஒவ்வொரு நாளும் சூரிய வெளிச்சத்தில் நிற்பது உகந்ததாகும். உங்களால் இதனைச் செய்ய முடியாவிட்டால், உங்கள் உணவில் (மீன் ஈரல் எண்ணெய்கள், எண்ணெய் மிகுந்த மீன்) விட்டமின் D போதியளவு இருப்பதை உறுதிப்படுத்துமாறு வாத நோய் நிபுணர் உங்களைக் கேட்டுக்கொள்வார். மேலதிகமாக விட்டமின் D எடுக்குமாறும் அவர் உங்களுக்கு

ஆலோசனை கூறலாம்.

### நாளாந்தம் உடற்பயிற்சி

ஒஸ்டியோபொரோஸிஸ் நோய்க்கு எதிரான போராட்டத்தில் நாளாந்த உடற்பயிற்சி முக்கிய பங்கை வகிக்கின்றது. உடற்பயிற்சி எலும்புகளை வலிமையாக்க உதவுகின்றது. அவை தசை நார்களைப் பலப்படுத்துவதால், நீங்கள் விழும் ஆபத்தும் குறைகின்றது.

கிரமமாக நடப்பவர்களுக்கு எலும்பு முறிவு ஏற்படும் ஆபத்தும் குறைவாகவுள்ளது. மூட்டு வாதத்திற்கு நீச்சல் பொருத்தமானதாக உள்ள போதிலும், ஒஸ்டியோபொரோஸிஸுக்கு இதனால் குறைந்த நன்மையே ஏற்படுகின்றது. நீச்சலில் ஈடுபடும் பொழுது உங்கள் உடலின் பாரத்தை நீர் தாங்குகின்றதே தவிர உங்கள் எலும்புக்கூடு தாங்குவதில்லை என்பதே இதற்குக் காரணமாகும். எவ்வாறாயினும், முதுகெலும்பில் முறிவு ஏற்படும் சந்தர்ப்பங்களில் முதுகு கடுமையாக வளைவதைத் தடுப்பதற்கு நீச்சல் உதவக்கூடும்.


### கவனமாக இருத்தல்

முதுகெலும்பில் திடீர் அழுத்தங்கள் ஏற்படுவதைத் தடுப்பது அவசியமானதாகும். இதனால் எலும்பு முறிவு ஏற்படலாம் என்பதே இதற்குக் காரணமாகும். முன்புறம் வளைந்து பாரமான பொருட்களைத் தூக்குவதை தவிர்துக்கொள்ள வேண்டும்.

- முழங்காலில் இருந்து அல்லது குந்தியிருந்து உங்கள் படுக்கையைத் தயார்படுத்தவும்.
- நீங்கள் ஏதாவது பொருளைத் தூக்கும் பொழுது முழங்காலை வளைப்பதன் மூலம் உங்கள் முதுகை நேராக வைத்துக்கொள்ளவும்.
- அதிகம் பாரமான சூட்கேஸ்களை அல்லது பைகளை தூக்க வேண்டாம்.
- திடீர் அசைவுகளை தவிர்த்துக் கொள்ளவும்

### கீழே விழும் ஆபத்தைக் குறைத்தல்

நாம் முதுமையடையும் பொழுது கீழே விழும் ஆபத்து அதிகரிக்கின்றது. நீங்கள் விழுவதற்கு ஏதுவாகவுள்ள பொருட்களை அடையாளங்கண்டு விழுவதைத் தவிர்ப்பதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்யவும்.




ஒஸ்டியோபொரோஸிஸ் காரணமாக இடுப்பெலும்பு முறிவு

- உங்கள் கண் பார்வையை பரிசோதிக்கவும்
- நடப்பதில் அல்லது நிதானமாக நிற்பதில் ஏற்படும் கோளாறுகளுக்கு பரிகாரம் காணவும் (பிஸியோதரப்பி அல்லது தடியைப் பயன்படுத்துதல் உதவும்)
- உங்கள் மருத்துவரைக் கேட்காமல் மருந்துகளைஎடுக்க வேண்டாம்
- நீங்கள் அருந்தும் மதுவின் அளவைக் கட்டுப்படுத்தவும்
- திடீரென நீங்கள் இருக்கும் நிலையை மாற்றும் பொழுது குறிப்பாக கட்டிலில் இருந்து எழும் பொழுது கவனமாக நடந்துகொள்ளவும்
- படுத்திருந்த பின் எழும் பொழுது தலை சுற்றுமாயின் உங்கள மருத்துவரிடம் அதுபற்றித் தெரிவிக்கவும்
- நீங்கள் நடந்து செல்லும் இடங்களில் தடைகள் இருக்காது பார்த்துக்கொள்ளவும்
- வழுக்கக்கூடிய நில விரிப்புகளை அகற்றவும்
- வெளிச்சத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும்: நீங்கள் நடமாடும இடங்களில் வெளிச்சத்தை அதிகரிக்கவும். தேவையான அளவு சுவிற்சுகளை தேவைப்படுமிடத்தில் வைத்துக்கொள்ளவும்.
- தேவையான விதத்தில் தளபாடங்களின் உயரத்தை மாற்றியமைத்துக்கொள்ளவும் (கட்டில், சாய்ந்திருப்பதற்கான கதிரை, கழிவறை ஆசனம்)

### புகைப்பிடித்தலை நிறுத்தவும்

புகை பிடித்தல் ஒஸ்டியோபொரோஸிஸ் நோய் ஏற்படும் ஆபத்தை அதிகரிக்கச் செய்கின்றது.

### ஒஸ்டியோபொரோஸிஸ் நோய்க்கு எதிராக போராடுவதற்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லை

சுறுசுறுப்பான வாழ்க்கையை மேற்கொண்டு போதியளவு கல்சியமுள்ள உணவை உட்கொள்வதே ஒஸ்ரியோபொரோஸிஸ் ஏற்படுவதை தடுப்பதற்கான சிறந்த வழியாகும். பொதுவாக எவ்வளவு விரைவாக சிகிச்சை ஆரம்பிக்கப்படுகின்றதோ அந்தளவுக்கு அது பயனுறுதி மிக்கதாக இருக்கும். ஒஸ்டியோபொரோஸிஸினால் பீடிக்கப்பட்ட ஒரு நோயாளிக்கு எவ்வளவு விரைவில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகின்றதோ அந்தளவுக்கு அவருக்கு எலும்பு முறிவு

ஏற்படும் ஆபத்து குறைகின்றது.

**(04.07.2010 திகதி உதயனில் 'ஒஸ்டியோபொரோஸிஸ் - இந்நோய்க்கு எதிராகப் போராடுவதற்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லை' என்னும் தலைப்பில் பிரசுரமான கட்டுரையின் மற்றொரு பகுதி இது.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி ஜனனி சிவலிங்கத்தின் பரத நிருத்திய அரங்கேற்றம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் மங்கள விளக்கினை பேராசிரியர் அ.சண்முகதாஸ், நடன ஆசிரியர் ஸ்ரீமதி வசந்தி குஞ்சிதபாதம் ஆகியோர் ஏற்றுவதை முதலிரு படங்களிலும், நாட்டிய அரங்கேற்றத்தில் செல்வி ஜனனி சிவலிங்கத்தின் ஆடல் தோற்றமொன்றை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்ட பார்வையாளர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: டிலீப்)

# வலி. தென்மேற்கு அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தால் ஓய்வூதியர் நலன் பேண விசேட திட்டங்கள் அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஜூன் 12

வலி.தென்மேற்கு பிரதேச அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம், பல விசேட திட்டங்களை ஓய்வூதியர்களுக்காக அறிமுகம் செய்துள்ளது.

இந்தச் சேவைகளை இப்பிரதேசத்திலுள்ள ஏனைய அரச சேவை ஓய்வூதியர்களும் பெற்றுப் பயன் பெறவேண்டும்.

எனவே இதுவரை அங்கத்தவர்களாக இணையாதவர்கள் உடனே அதற்குரிய படிவத்தினைப் பூர்த்தி செய்து அங்கத்தவராகிப் பயனை அடையுங்கள்.

இவ்வாறு சண்டிலிப்பாய் அரச சேவை நம்பிக்கை நிதியச் செயலாளர் ஐ.மார்க்கண்டன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

ஒவ்வொரு ஓய்வூதியரும், தம்மைப் போல அரசசேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு தம் அபிமானத்தையும் மரியாதையையும் பேண உதவுவதன் மூலம் அவர்களது பொதுவான நலநோம்பு விடயங்களை விருத்தி செய்ய வேண்டும் என்ற- இலக்கு - நோக்குடன் நாம் செயற்படுகின்றோம்.

அத்துடன் மரணப் பணிக்கொடை, புலமைப்பரிசில்,வைத்தியசாலைக் கொடுப்பனவு, கண்வில்லை சத்திர சிகிச்சைக் கொடுப்பனவு, 10 ஆயிரம் ரூபா கடன் எனப் பல அனுகூலங்களுடன் சேமிப்பு வைப்புத் திட்டம், விசேட மரணப் பணிக்கொடைத் திட்டம், புனிதயாத்திரைத் திட்டம் விடுமுறை விடுதி, சுகாதார மத்தியஸ்த தலத்திட்டம் என பலவற்றுக்கு விசேட திட்டங்கள் மூலம் உதவுகின்றோம்.

எனவே இச் செயற்றிட்டங்களின் பலனை அடைந்திட வலி. தென்மேற்கு பிரதேசப் பகுதியில் வதியும் ஓய்வூதியர்கள் அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தில் இணையவேண்டும் - என்றார். (எ-302)

## பளிங்குக் கல் பயிற்சி நெறி

நவாலி,ஜூலை 12

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பளிங்குக் கல்லில் உருவாக்கங்களைத் தயாரிக்கும் பயிற்சி நெறியொன்று தொழில் நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் இன்று திங்கட்கிழமை முதல் 16 ஆம் திகதி வரை 5 நாள்களுக்கு நடத்தப்படவுள்ளது.

விஞ்ஞானத் தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ்.சுதர்சன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி அ.எழிலரசி கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார்.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ-10)




# பரவைக் கடலில் தினசரி மீன் பிடிப்பு; வாங்கிச் செல்ல பயணிகள் முண்டியடிப்பு!

நாவற்குழி,ஜூன் 12

கோப்பாய் கைதடி பிரதேசப் பரவைக் கடலில் உள்ளூர் மீனவர்கள் வலை வீசியும், சிறிய ரக கரைவலைகளை வளைத்தும் இப்போது நாளாந்தம் மீன்பிடியில் ஈடுபடத் தொடங்கி உள்ளனர்.

இக் கடலில் விரும்பிய இடத்தில் மீன் பிடிப்பதற்கு படையினர் அனுமதித்து உள்ளனர்.

இதனால் மீனவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் பரவைக் கடல் பிரதேசத்தில் மீன் பிடிப்பதில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது.

கடல் நீரும் இடுப்பளவிற்கு வற்றி விட்டதால் மீனவர்கள் சிரமமின்றி முழுப்பிரதேசத்திலும் வலை வீச முடிகின்றது.

முரல் மீன்களே இங்கு பெரும்பாலும் பிடிக்கப்படுவதாகவும் வீதிப் பயணிகள் உடனடியாகவே இம் மீன்களை காத்து நின்று வாங்குவதில் முண்டியடித்து ஆர்வம் காட்டுவதையும் அவதானிக்க முடிகின்றது. (50-121)

# வன்செயலால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி யாழ்.மாவட்டத்தில் தகவல்கள் சேகரிப்பு

நாவற்குழி,ஜூன் 12

யாழ்.மாவட்டத்தில் வன்செயல் காரணமாக ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகள், பாதிப்புக்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் நடவடிக்கையை புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

பிரதேச செயலர்கள் மூலமாக கிராம சேவகர்களுக்கு இப்படிவங்கள் தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளன.

இப்படிவத்தில் - இடம் பெயர்ந்து முகாம்களில் இருந்து மீளக் குடியேறியோர், உறவினர் நண்பர் வீடுகளிலிருந்து மீளக் குடியேறியோர் விவரம், கடந்தகால வன்செயல்களில் இறந்தோர், காணாமல் போனோர், விதவைகள் எண்ணிக்கை, குடும்பத் தலைவர் ஊனமுற்று வருமானம் உழைக்க முடியாத நிலையிலுள்ள குடும்ப எண்ணிக்கை, அத்தகைய பாடசாலை செல்லும் பிள்ளைகள் எண்ணிக்கை, முழுமையாக, பகுதியாக பாதிப்புற்ற வீடுகளின் எண்ணிக்கை, பாதிப்புற்ற வணக்கத் தலங்கள்,சிறு, நடுத்தர வியாபாரத் தலங்கள் கைத்தொழில்களின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

கிராம அலுவலர்கள் இவ்விவரங்களைத் திரட்டி பிரதேச செயலருக்கு விரைவில் அறிக்கையிட உள்ளனர். (எ-121)

# வீதி அகலிப்புக்காக வலி.கிழக்கில் மின் தடை; விவசாய, கைத்தொழில் முயற்சிகளுக்குப் பெருந்தடை

கோப்பாய்,ஜூன் 12

வலி. கிழக்குப் பிரதேசத்தில் வீதி அகலிப்புப் பணிக்காக தற்போது வாரத்தில் இரு தடவை மேற்கொள்ளப்படும் மின் வெட்டுக் காரணமாக பல்வேறு தரப்பினருக்கும் பாதிப்புக்கள் ஏற்படுவதாகப் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக் காட்டப்படுகிறது.

குறிப்பாக விவசாயம் மற்றும் சிறு கைத்தொழில்களுக்கே இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடரும் மின்வெட்டால் விவசாயச் செயற்பாடுகளுக்காக நீர் இறைக்கும் பணிகளில் தாமதமும் மற்றும் குறித்த முறையில் நீர்பாசனம் செய்யும் ஒழுங்கும் சீர்கெடுகின்றது. குறிப்பாகப் பொதுக் கிணற்றில் இருந்து நீர்பாசனம் செய்வோர் அதிக சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

மேலும் சிறு கைத்தொழில் முயற்சிகளான மர அரிவு, ஒட்டுவேலை, மோட்டார் உந்துருளி சீர்களம் மற்றும் ஐஸ்கிறீம் போன்ற கைத்தொழில் நடவடிக்கைகள் பாதிப்பிற்குள்ளாவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (எ-72)

# வீதி விளக்குகளுக்கு நன்றி கூறும் திருடர்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 12

சுற்றுச்சூழலில் ஏற்பட்டிருந்த இருளைப் பயன்படுத்தி ஈச்சமோட்டைப் பகுதியில் உண்டியல் உடைத்துப் பணம் திருடப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஈச்சமோட்டை கிராம சேவையாளர் அலுவலக வளாகத்திலுள்ள வேளாங்கன்னி மாதா சொரூபத்துக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த உண்டியலே இவ்வாறு உடைக்கப்பட்டு பணம் முழுவதும் திருடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டமை திருடர்களுக்கு வசதியாகப் போய்விட்டது. வீதி விளக்குகள் ஒளிராமையால் இந்தப் பகுதி முழுவதும் தொடர்ந்தும் இருளில் மூழ்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து இனியாவது உரியவர்கள் கவனமெடுத்து ஒளிரக்கூடிய வீதி விளக்குகளைப் பொருத்துவதனூடாக இவ்வாறான திருட்டுச் சம்பவங்களைக் குறைக்க முன்வர வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-க-23)

# அதிகரித்த விலையில் மதுபான வகைகள் யாழ்.புறநகர்ப் பகுதிகளில் விற்பனை

யாழ்ப்பாணம்,ஜூன் 12

யாழ். குடாநாட்டில் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் சாராயம், பியர் போன்ற மதுபான வகைகள் மிகவும் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த மதுபான வகைகள் யாழ். நகரில் விற்கும் விலைகளை விட குநாட்டின் புறநகர்ப்பகுதிகளில் அதிகரித்த விலையில் விற்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும் இயங்கி வரும் மதுபான உற்பத்தி நிறுவனங்கள் தமது வாகனங்கள் மூலம் குடாநாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்களுக்கு நேரடியாக மதுபானங்களை விநியோகித்து வருகின்றன. எனினும் யாழ்.நகரத்தில் விற்கப்படும் விலையிலும் பார்க்க மிகக் கூடுதலான விலைக்கே புறநகர்ப் பகுதிகளில் இவை விற்பனை செய்யப் படுகின்றன. பெரும்பாலும் போத்தல் ஒன்றுக்கு 10 ரூபா தொடக்கம் 20 ரூபா வரை அதிகரித்த விலையில் மதுபான வகைகள் விற்கப்படுகின்றன.

இதேவேளை யாழ். குடாநாட்டிலுள்ள மதுபான விற்பனை நிலையங்களில் மதுபான வகைகளின் விலைப்பட்டியல் எதுவும் வைக்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-236)

# வவுச்சருடன் வரும் கடிதம்!

யாழ்ப்பாணம்,ஜூலை 12

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியம் பெறுவோரின் ஜூலை மாத ஓய்வூதிய வவுச்சர்களுடன் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்ட கடிதமும் இணைத்து அனுப்பப்படுவதாகக் கூறப்படுகின்றது.

'விதவைகள், தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் வரப்பிரசாதங்கள் பற்றி வெளிப்படுத்தல்' என்னும் தலைப்பிலான அறிவித்தல் கடிதமே இவ்வாறு ஓய்வூதிய வவுச்சர்களுடன் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-2[illegible])

# வீதியை ஆக்கிரமிக்கும் பாரவூர்திகளால் அசௌகரியங்களை எதிர்கொள்ளும் மக்கள்

கொழும்புத்துறை , ஜூலை 12

யாழ். ஆரியகுளம் பகுதியை அண்மித்த சந்திப்பகுதியில் பாரவூர்திகள் தொடர்ச்சியாக நிறுத்தி வைக்கப் படுவதால் பொதுமக்கள் போக்குவரத்து நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் உள்ள மரக்காலைகளுக்கு பொருள்களை இறக்கும் வாகனங்களே இவ்வாறு நிறுத்தி வைக்கப்படுகின்றன.

இந்தச் சந்தியில் இருந்து பிரிந்து செல்லும் ஒழுங்கைகளை ஆக்கிரமித்தவாறு இந்த வாகனங்கள் நிற்பதால் பிரதான வீதிகளால் வரும் வாகனங்களை மக்கள் அவதானித்து வீதிக்குச் செல்வது கடினமாகவுள்ளது. இதனால் விபத்துக்களைப் பயணிகள் எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை இவ்வீதிகளால் பயணிக்கும் வாகனச் சாரதிகளும் இவ்வாறு லொறிகள் நிறுத்தி வைக்கப்படுவதால் பல நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். (எ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உன்னத சேவைக்காக இணைந்துள்ள குழுவினர்

கிளிநொச்சி மக்களே, இன்று முதல் உங்கள் சகல வங்கி அலுவல்களையும் கவனிக்கவிருக்கும் இந்த வெற்றி அணிக்கு நல்வரவு கூறுங்கள்.

இன்று திறந்துவைக்கப்படும் எமது 191ஆவது வாடிக்கையாளர் நிலையத்தின் அச்சாணியாக விளங்கும் இத் தொழில் நிபுணர்கள் உங்களுக்கு அதிசிறந்த வங்கிச் சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவார்கள்.

HNB கிளிநொச்சி, கருணா நிலையம், A9 வீதி, கிளிநொச்சி
எங்கள் வங்கிச் சேவைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 021-2285343, 021-2285344 அல்லது 021-2285348

SAATCHI & SAATCHI

HNB
உங்கள் முன்னேற்றத்தில் பங்காளி



මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

09.07.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2263

வெற்றி எழுத்து: M
வெற்றி எண்கள்: 5 4 4 0 7 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | M | 5 | 4 | 4 | 0 | 7 | 5 | ரூபா.10,518,789/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 5 | 4 | 4 | 0 | 7 | 5 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 4 | 4 | 0 | 7 | 5 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 4 | 0 | 7 | 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் 131 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 7 | 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1343 |
| 5 பரிசுகள் | | | | | | 7 | 5 | ரூபா. 100/= | பரிசுகள் 13286 |
| 6 பரிசுகள் | | | | | | | 5 | ரூபா. 20/= | பரிசுகள் 131129 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 5 | 4 | 4 | 0 | 7 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 5 | 4 | 4 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 137 |
| 9 பரிசுகள் | | 5 | 4 | 4 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1325 |
| 10 பரிசுகள் | | 5 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13178 |
| 11 பரிசுகள் | M | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 52457 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 12,011,720.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline 2433631 இணையத்தளம்: www.nlb.lk


## பெண் நாய்களுக்கு கோப்பாயில் கருத்தடை

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஜூலை 23, 24 ஆம் திகதிகளில் பெண் நாய்களுக்குக் கருத்தடை செய்யும் நடவடிக்கை இடம்பெறவுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிறுப்பிட்டி, கோப்பாய், அச்சுவேலி ஆகிய பிரதேசங்களில் குறித்த தினங்களில் இச்சேவையைப் பொதுமக்கள் பெற முடியுமெனவும், கண்டியிலிருந்து இதற்கென மருத்துவத்துறை உத்தியோகத்தர்கள் வர உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுபகின்றது.

வீதிகளில் கட்டாக் காலி நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவதில் இந்நடவடிக்கை உதவுமென நம்பப்படுகிறது. (ஏ-121)

## மரண அறிவித்தல்

### செல்வி சரவணை தர்ஷிகா

(குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்-வேலணை)



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை- சரஸ்வதி தம்பதியரின் செல்வப் புதல்வி சரவணை தர்ஷிகா 10.07.2010 அன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் திருமதி இராஜசிலோசனா மோகனதாஸ் (ஆசிரியை, யா/ அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம்), சதுர்ணா (நுண்கலைப் பிரிவு, யாழ்.பல்கலைக் கழகம்- இறுதியாண்டு மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மோகனதாஸ் (இலங்கை துறைமுக அதிகாரசபை, காங்கேசன்துறை) அவர்களின் அன்பு மைத்துனியும் அக்ஷணாவின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.07.2010) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
கைதடி தெற்கு. (100747)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயாங்கேணி, கோபாலபுரம் பகுதிகள் தொல்பொருள் வலயமாக பிரகடனம்!



கொழும்பு, ஜூலை 12

கிழக்கு மாகாணம் வாகரைப் பிரதேச செயலகப் பிரதேசப் பிரிவுக்குட்பட்ட காயாங் கேணி, கோபாலபுரம் ஆகிய பகுதி , கள் பாதுகாக்கப்பட்ட தொல்பொருள் வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் சிலர் கட்டட எச்சங்களை அகழ்ந்து புதையல் எடுக்க முயற்சி செய்கின்றனர் என்று கிடைத்த தகவல்களுக்கு அமைய கடந்த வாரம் அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது, புராதன கட்டடச் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து பொலன்னறுவைப் பிராந்தியத் தொல் பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள் அங்கு சென்று பார் வையிட்டனர். இதன் பின்னர் காயாங் கேணி, கோபாலபுரம் ஆகிய பகுதிகள் பாதுகாக்கப்பட்ட புராதன தொல் பொருள் வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டன.

மேலும் ஒரு மாத காலம் அவர்கள் அங்கு தங்கியிருந்து தொல்பொருள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இந்தப் பகுதிகள் பொலன்னறுவை, அநுராதபுரம் இராஜதானிகளின் இறுதிப் பகுதிகளோடு தொடர்புபட்டிருக்கலாமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இது தொடர்பாக மேலதிக ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என வாகரைப் பிரதேச செயலாளர் இராகுல நாயகி தெரிவித்தார்.

சுமார் 75 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தப் புராதனச் சின்னங்கள் இருக்கலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பகுதிகளைச் சூழவுள்ள பகுதிகளிலும் இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் பல புராதன அடையாளங்கள் இனங்காணப்படலாமென நம்பப்படுகிறது. (ஏி)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,775 அபிவிருத்திப் பணிகள்!

காத்தான்குடி, ஜூலை 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டு ஆயிரத்து 639கோடிய 80 லட்சம் ரூபா செலவில் ஆயிரத்து 775 அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப்பிரிவுகளிலும் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு மேமாதம் வரை 670 கோடி ரூபா செலவில் 836 பணிகள் நிறைவடைந் துள்ளன எனவும், அவர் தெரிவித்தார்.

மின்சாரம், வீதி, கல்வி, நீர்ப்பாசனம், குடிதண்ணீர், வடிகான், சுகாதாரம், கடற்றொழில், பொது வசதிகள் உட்பட பல்வேறு அடிப்படைத்தேவைகள் இத்திட்டத்தினூடாக நடைபெற்றுவருகின்றன.

கமநெகும, மகநெகும, மத்திய அமைச்சுக்கள், மாகாணசபை, உள்நாட்டு வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள் போன்றவற்றின் நிதி ஒதுக்கீடுகளிலிருந்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ஏி)

## ஏறாவூர் நகரப் பிரதேசத்தில் குண்டும், குழியுமாக வீதிகள்!

மட்டக்களப்பு, ஜூலை 12

ஏறாவூர் நகரப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச சபைக்குட்பட்ட அநேக உள்வீதிகள் நீண்டகாலமாகப் புனரமைப்பு செய்யப்படாமல் குண்டும், குழியுமாகக் காணப்படுகின்றன என இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள அநேக வீதிகள் தார் ஊற்றி முறையாக செப்பனிடப்படாமல் குன்றும், குழியுமாக காணப்படுவதால் மழைக்காலத்தில் நீர் தேங்கி நின்று மக்கள் பிரயாணம் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது.

இதனால், இவ்வீதியினூடாகப் பிரயாணம் செய்யும் பொது மக்களும், வாகன ஓட்டுநர்களும் பெரிதும் சிரமப்படுகின்றனர். சில வீதிகள் குறுக்காக வெட்டப்பட்ட நிலையிலும், வீதித் தடைகள் போடப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. இதனால், வாகன விபத்துகள் ஏற்படுகின்றன எனவும், வாகன ஓட்டுநர்களும், பாதசாரிகளும் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதிகளை தார் ஊற்றி செப்பனிட்டு தருமாறு ஏறாவூர் நகரப் பிரதேசசபைக்கு உட்பட்ட பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

இது விடயத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாண அமைச் சர்களும் கவனம் செலுத்தவேண்டுமெனவும் பொதுமக்கள் எதிர்பார்கின்றனர். (ஏி)

## பனிச்சங்கேணிப் பிரதேசத்தில் ஒரு தொகை ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஜூலை 12

வாகரை பனிச்சங்கேணி காட்டுப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆர்.பீ.ஜீ,மோட்டார் ரகக் குண்டுகள் உட்பட 7.62 ரக தோட்டாக்கள் 300 என்பவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அம்பாறை பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்த வெடி பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

கண்டுபிடிக்கப்பட்ட வெடி பொருள்களில் பாதுகாப்பற்ற முறையில் காணப் பட்ட மோட்டார் மற்றும் ஆர் பீ ஜீ குண்டு களை இராணுவத்தின் குண்டு செயலிழக் கச் செய்யும் பிரிவினர் செயலிழக்கச் செய்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஏி)




# நோர்வூட் நகரில் போலிக் கச்சேரி முற்றுகை பெருந்தொகை ஆவணங்கள் மீட்பு

### பிரதான சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜூலை 12

மோட்டார் போக்குவரத்து திணைக் களத்தின் அங்கீகாரம் பெற்ற முகவர் நிலையம் என்ற போர்வையில் நோர்வூட் நகரத்தில் நீண்ட காலம் இயங்கிவந்த போலி நிறுவனம் நாவலப்பிட்டி பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து சுமார் ஐயாயிரம் நிழற் படங்கள், இறப்பர் முத்திரைகள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் என்பனவும் கைப் பற்றப்பட்டன.

அவற்றுடன் பிரதான சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி பஸ் நிலையத்தில் நின்றிருந்த நபரொருவரிடம் நாவலப்பிட்டி பொலிஸ் அதிகாரி விசாரணை நடத்தியிருந்தார்.

அந்த விசாரணைகளின் பின்னரே இப் போலி நிறுவனம் சுற்றிவளைக்கப்பட்டது.

இச் சுற்றிவளைப்பின்போது மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளின் பெயர், பதவி கொண்ட இறப்பர் முத்திரை களும் -

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத் திற்கான படிவங்களும் -

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களும் -

விநியோகிப்பதற்குத் தயார் நிலையில் இருந்த போலி சாரதி அனுமதிப் பத்திரங்களும் -

தற்காலிக அனுமதிப் பத்திரங்களுக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் ஐயாயிரம் நிழற் படங்களும் கைப்பற்றப்பட்டன.

அதேவேளை, சந்தேகநபர் எந்த நேரத்திலும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதிகொண்ட போலி அடையாள அட்டையும் அவரிடமி ருந்து கைப் பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நாட்டின் எப்பகுதியில் உள்ளவர்களுக்கும் இலகுவாக சாரதி அனுமதிப்பத்திரத்தை தயாரித்துக் கொடுக்கும் கைங்கரியத்தைக் கொண்டிருந்தார் என விசாரணைகளின்போது தெரியவந்தது.

சந்தேகநபரை நாவலப்பிட்டி நீதிமன்றில் ஆஜராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி பொலிஸ் பொறுப்பதிகாரி விக்கிரம சேகரவின் தலைமையில் விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன. (ஏி)

## கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் வசதியற்ற 950 குடும்பங்களுக்கு வீடுகள்

### சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் தகவல்

கேகாலை, ஜூலை 12

கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் வாழும் வருமானம் குறைந்த சுமார் 950 குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹீபால ஹேரத் தெரிவித்தார்.

இதற்காக சப்ரகமுவ மாகாண சபையால் இரண்டு கோடி 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறிவை வருமாறு:-

கடந்த வருடத்தில் கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் சுமார் மூன்று கோடி ரூபா செலவில் 975 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

இந்த வீடுகளுக்கான சகல வேலைப் பணிகளும் தற்பொழுது முடிவடைந்துள்ளன.

வீடுகளை அமைப்பதற்கென தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபாவும், சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபாவும் மீளப்பெறாத உதவியாக வழங்கப்படுகிறது.

இரத்தினபுரி மாவட்டத்தில் 540 குடும்பங்களுக்கு இவ்வாறு நிதியுதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

கேகாலை மாவட்டத்திலுள்ள குடும்பங்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது - இப்படி முதலமைச்சர் தெரிவித்தார். (ஏி)




## டெங்கு நோயால் இரத்தினபுரியில் ஒரு மாதத்தில் அறுவர் மரணம்

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் டெங்கு நோயால் அறுவர் மரணமடைந்தனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜூன் மாதம் மட்டும் 463 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர் என இரத்தினபுரி சுகாதாரத்துறைப் பணிப்பாளர் அத்துல தங்கல்ல தெரிவித்தார்.

கடந்தமாதம் மரணமடைந்த அறுவரும் டெங்கு நோயாளர்கள் என சந்தேகிக்கப் படுகின்ற போதிலும், இதுவரை உறுதி அறிக்கை கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வேகமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த இரத்தினபுரி மாவட்டத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக பிரதேசசபைகளின் உதவியோடு பாடசாலைகளில் விசேட திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

நுளம்பு பெருகும் விதத்தில் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என வைத்தியர் அத்துல தங்கல்ல மேலும் தெரிவித்தார். (ஏி)

## மாத்தளை தொழில் திணைக்களத்தில் தமிழ்பேசும் அதிகாரிகளை நியமிக்குக!

### தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை

மாத்தளை, ஜூலை 12

மாத்தளை தொழில் திணைக்களத்தில் தமிழ் பேசும் அதிகாரிகள் இல்லாத காரணத்தால் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என விசனிக்கப்படுகின்றது.

இது குறித்து தொழிலாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

சிங்களமொழி தெரியாத தொழிலாளர்கள் தமிழில் பேசுவது திணைக்கள அதிகாரிகளுக்கு விளங்குவதில்லை.

அதிகாரிகள் சிங்களத்தில் பேசுவது தொழிலாளர்களுக்கு விளங்குவதில்லை.

இதன்காரணமாக பெயர்கள் உட்பட ஏனைய பதிவுகள் குழறுபடியாகின்றன.

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற தேவைகளுக்காகத் தொழில் அலுவலகத்துக்குச் செல்லும் தொழிலாளர் களின் பதிவுகள் மொழி புரியாத காரணத்தால் பிழையாக மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் சேமிப்பை மீளப் பெற்றுக் கொள்வதில் தொழிலாளர்கள் இறுதிநேரத்தில் பல இடையூறுகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது.

எனவே, இத்திணைக்களத்துக்கு தமிழ் பேசும் அதிகாரிகளை நியமிக்கும்படி தொழிலாளர்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. (ஏி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடமைப்புத் திட்ட பயனாளிகள் விபரம்

நாவற்குழி, ஜூலை 12

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கி நிதி உதவியுடன் வீட்மைக்கும் திட்டத்தின் 5ஆவது கட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளின் பட்டியல் குறித்த கிராம அலுவலர் பிரிவுகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பயனாளிகள் தெரிவு தொடர்பான முறைப்பாடுகளை வலி. கிழக்குப் பிரதேச செயலகத்திலோ அல்லது யாழ்.மாவட்டச் செயலகத்திலோ அல்லது உலக வங்கி வீடமைப்புத் திட்ட யாழ்.அலுவலகத்திலோ அல்லது திருகோணமலையிலுள்ள உலக வங்கி வீடமைப்புத் திட்ட அலுவலகத்திலோ செய்ய முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறைப்பாடுகள் எழுத்து மூலமாவே செய்யப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-121)


## முக்கிய அறிவித்தல்

பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
கிளைகள் ரீதியாக அங்கத்தவர்கள் விபரங்களைத் திரட்டுதலும்
புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளலும்

04.06.2010 ஆம் திகதி உதயன் 04ஆம் பக்க விளம்பரத்திற்கு மேலதிகமாக

திகதி நீடிப்பு :-
31/07/2010 வரை நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

க.மகிந்தன் சி.தாரணி
தலைவர் செயலாளர்


## இறால் வளர்ப்பு ஆய்வுப் பணி

நாவற்குழி, ஜூலை 12

'ஜெய்கா' சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் அச்சுவேலியில் இறால் வளர்ப்புச் செய்வதற்ான சாத்தியங்கள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டுள்ளதாக் கூறப்படுகின்றது.

இறால் வளர்ப்பதற்கு உகந்த சூழ்நிலை இனங்காணப்படுமிடத்து எதிர்காலத்தில் இப்பகுதியில் இறால் வளர்ப்பு மேற்கொள்ளலாமெனவும் அறிய வருகின்றது. (எ-121)




டயிடஸ் ஸ்ரோஸ்
2439422

**BIT** New Batch registration MIS
முடிவுத்திகதி 31.07.2010
1st, 2nd, 3rd year and final project
அடிப்படையிலிருந்து முற்று முழுதாகக் கற்பதற்கு...
MM Projector, Broadband facility
# 74, Sabapathy Lane, Thalaiyaali, pirambady,Jaffna. Director TPNo : 0776577359


## முடிவில்லா த் துயரலையில் பத்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 ★ 06 ★ 1933



உதிர்வு 03 ★ 07 ★ 2000

### அமரர் கந்தையா மயில்வாகனம்

ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்
(பொலிஸ் பப்பா)
திதி : பிரதமை (12.07.2010)

பந்த பாசம் மறந்து பரமனடி சேர்ந்து பத்து ஆண்டுகள் ஆச்சு
காலமெல்லாம் என்னுடன் வாழ்வீர்கள் என்றிருந்தேன்
அன்பாலும் பண்பாலும் எல்லோரையும் அரவணைத்த
என் அன்புத் தெய்வமே!
என்றும் உரிமையோடு சொல்லி அழைக்க நீங்கள் இல்லையே
ஆற்றுவார் எவருமின்றி நிலை தடுமாறி நிற்கின்றேன்
உற்றார், உறவினரைக் கண்டால் அன்பு காட்டி உபசரிக்கும் உத்தமரே!
கண்ணீர்தான் இனி என் வாழ்வில் என்று எழுதிவிட்டான் கடவுள்
கண்ணுறங்கும் வேளையிலும் கனவிலும் உங்கள் நினைவால்
கலங்குகிறேன்.
நித்தம் நித்தம் கலங்குகிறேன் என் நிலையை நினைத்து
வீடுதான் கோயில் நீங்கள் தான் தெய்வம் என்று நித்தம் மலர் தூவி
வணங்குகிறேன்.
இனியும் என்னைக் கலங்கவிடாமல் நீங்கள் சென்ற இடம் என்னையும்
அழையுங்கள்.
நீங்கள் தான் தஞ்சம் என்றிருந்தேன் இன்று தனிமரமானேன்.
என்றும் உங்கள் ஆத்மா சாந்திபெற சந்நிதி முருகனை வேண்டுகிறேன்.

பழைய பாலத்தடி, திருமதி ம.பரமேஸ்வரி
தொண்டைமானாறு (மனைவி).
[100739]

## யா/கேரம்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் சாதனைகள்



### தடகளப் போட்டி

கணேஸ் துஷ்யந்தன்
15 வயதுப்பிரிவு குண்டு போடுதல்
வடக்கு மாகாண மட்டம் முதலாமிடம்

நடைபெற்ற வட மாகாண தடகளப் போட்டியில் முதலிடம் பெற்று பதக்கத்தைப் பெற்றதோடு தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்

### சித்திரப் போட்டி



ஸ்ரீகாந்தா இசைநிலா
தேசிய மட்டம் முதலிடம்
ஆசியநாடுகள் மட்டம் 3ம் இடம்



ஜெயந்தன் பிரணவி
தேசிய மட்டம் 3ம் இடம்

அனர்த்த முகாமைத்துவ செயற் திட்டத்தின் கீழ் நடைபெற்ற சித்திரப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரு இடங்களைத் தட்டிக் கொண்டது மட்டுமன்றி ஆசிய நாடுகளின் கீழ் நடைபெற்ற போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளது

இம் மாணவர்கள் மூவரையும் பாராட்டுவதோடு மேலும் நடைபெறுகின்ற போட்டிகளிலும் வெற்றி பெறவேண்டும் என வாழ்த்துகின்றோம்.
இம் மாணவர்களையும் பயிற்றுவித்து வெற்றி பெறச் செய்த அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்

யா / கேரம்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் பாடசாலைச் சமூகம்


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2137 திகதி 10-07-2010

ஆங்கில எழுத்திற்கும் W

வெற்றி எண்கள் 03 27 36 59 போனஸ் இல: 17

ஜக்பொட் பரிசு ரூ. 12,862,525/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 181202 | 20/- | 3,624,040/- |
| 2 இல | 12970 | 100/- | 1,297,000/- |
| 3 இல | 267 | 1,000/- | 267,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7247 | 40/- | 289,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 519 | 1,000/- | 519,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 06 | 10,000/- | 60,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,862,525/- | - |
| 1 இல + போனஸ் இல | 8659 | 100/- | 865,900/- |
| 2 இல + போனஸ் இல | 398 | 500/- | 199,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 330 | 200/- | 66,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,714,820/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 211632 | | 9,314,820/- |

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 302095325-0-47 |
| கொழும்பு | 302096573-9-22 |
| மட்டக்களப்பு | 302095907-5-46 |
| காலி | 302100959-1-39 |
| யாழ்ப்பாணம் | 302093238-0-37 |
| கம்பஹா | 302098528-0-30 |
| அநுராதபுரம் | 302098834-7-28 |
| பதுளை | 302098672-4-25 |
| அம்பாந்தோட்டை | 302094472-5-04 |
| மாத்தளை | 302097428-7-20 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 13,357,075/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2010 ஜூலை 14 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2335546/7


## தாயின் ஓராண்டு நினைவலைகளுள் தனயனவன் தம்பியின் மூவாண்டு நினைவுகளும்

இனிதிருக்க வந்தது 07 . 06 . 1944



நினைத்திருக்க சென்றது 23 . 06 . 2009

### அமரர் முத்தம்மா தங்கவேலு

(திதி: பிரதமை)

பார்த்திருக்க வந்தது 03 . 03 . 1984



காத்திருக்கச் சென்றது 26 . 12 . 2007

### அமரர் தங்கவேலு சயந்தன்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஆண்டு வந்து கழிந்ததனால் - காலம்
நீண்டுகொண்டு சென்றிடினும் தாயே
மாண்டு போகவில்லையம்மா! எம்மில்
மீண்டு நிற்கும் உங்கள் எண்ணம்.

காலம் செய்த கோலம் அதுவாய் தாயே
ஞாலத்தில் நீங்கள் காட்சிக்கில்லை - நீரிருவீர்
கோலமிட்ட இல்லமிங்கு கோலம் மாறிப் போய்க்கிடக்க
வாலை மகன் சயந்தனோடு வருவேன் என்று போனீர்களோ!

அந்தி பகல் அருகிருந்து அரு மக்களாய் வளர்த்த தாயே!
வந்த நோய்க்காய் வந்தனை செய்து வருந்தி நொந் திளைத்தாயே
இந்தப் பிறவி போனதம்மா இன்னும் பிறந்தால் நீயே அம்மா!
உந்தன் மடியில் மறுபடி தவழும் மற்ற நாளினி எப்போதம்மா!

இருளது வந்து தினம் நாளதைக் கௌவுது - எம்மோடு
இருப்பவர் இழப்பினால் இதயங்கள் ஏங்குது
விருப்புடனா தாயே நாம் விடையது சொன்னோம் - என்றும்
விருப்பத்தோடு நும்மை நினைப்பினில் கொள்வோம்.

ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!

சர்வோதய வீதி,
நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
தொலைபேசி: [illegible]

நெஞ்சங்களில்
நிலைக்க வைத்த
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எழில் பெறும் மாநகர்" கிளிநொச்சியில் ஹற்றன் நஷனல் வங்கியின்

HNB 191 ஆவது கிளை HNB

# திறப்பு விழாச் சிறப்பு மலர்

## அகமகிழ்கின்றோம்



சைவமும் தமிழும் ஒருங்கே அமைந்த கிளிநொச்சி மாநகரில் எல்லாம் வல்ல இறைவனின் அருளாசியுடன் ஹற்றன் நஷனல் வங்கியின்191ஆவது கிளை திறப்பு விழா சிறப்புற நடைபெற திருவருள் பாலித்துள்ளது. எம்மக்களின் வறுமைத்துன்பங்கள் நீங்கி நல்வாழ்வு கிட்டிட இவ்வங்கி தன்பணியை ஆரம்பிக்கும் இப் பொன்நாளில் என் ஆசிகளை வழங்குவதுடன் பணிசிறக்க இறைவனின் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ பாலகுமாரசாமி குருக்கள்,
(உதவிக்குருக்கள்), கிளிநொச்சி கந்தசாமிகோயில்.

HNB

## நல்வரவாகட்டும்



போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேறியுள்ள இம்மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவேண்டிய இன்றையநிலையில் ஹற்றன் நஷனல் வங்கி தனது 191 ஆவது கிளையை இங்கு ஆரம்பிப்பது இம் மாவட்ட மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும். இவ்வங்கி இம்மாவட்டத்தில் முதன் முறையாக தன் சேவையின் மூலம் அனைவரினதும் வாழ்வாதார நிலையை உயர்த்தும் என்ற எதிர்பார்புடன் வாழ்த்தி வரவேற்கின்றேன்.

திருமதி றா.கேதீஸ்வரன்
அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்.

## இறை ஆசி கிட்டட்டும்



வாழ்வாதரங்கள் அனைத்தையும் இழந்து திரும்பவும்''பீனிக்ஸ்'' பறவைகள் போல் எழும் எம்மக்கள் மத்தியில் இவ்வங்கி 191ஆவது கிளையை கிளிநொச்சி நகரில் ஆரம்பிப்பது வரவேற்புக்குரியது. எம்மக்களின் நன்மை கருதி இப் பிரதேசத்தில் இக்கிளையை நிறுவ முயற்சி எடுத்த வங்கியின் தலைமைப் பீடத்தினரையும், உயரதிகாரிகளையும் பாரா ட்டி மகிழ்கிறேன். ஒரு நாட்டின் முதுகெலும்பாக வங்கிகளே உள்ளன. இவ் வங்கியும் நாடெங்கும் கிளைகளை நிறுவி சேவையை சிறப்புற வழங்கி வருகிறது. மேன்மேலும் பணி வளர இறை ஆசீர் வேண்டுகின்றேன்.

அருட் தந்தை, நா.ச.பிரபாகர்
புனித பவுல் ஆலயம் (கருணா நிலையம்), கிளிநொச்சி.

## அபிவிருத்தி கண்டிடுவோம்



ஹற்றன் நஷனல் வங்கி, கிளிநொச்சி நகரில் புதிய கிளையுடன் கால்பதிப்பது வரவேற்புக்குரியது. புவியியல் ரீதியாக நீண்ட ஒரு பெருநிலப் பரப்பினையும், விவசாய வளங்களையும், வர்த்தக மூலங்களையும் கொண்டுள்ள இக் கிளி நொச்சி மாநகரில் ஹற்றன் நஷனல் வங்கி காலத்தின் தேவைகளுக்கும் சமூக மாற்றங்களுக்கும் ஏற்ப விரைவானதும் பயன் மிக்கதுமான வாடிக்கையாளர் சேவையை எமக்கு வழங்கும் என எண்ணி சிறப்புற இந்நன்நாளில் வாழ்த்தி வரவேற்கின்றேன்.

திரு.ச.பி.அமலராசா
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,
பிரதேச செயலகம், கிளிநொச்சி.

## தேவைகள் கண்டு சேவைகள் செய்க....!



மக்கள் சேவை எனும் மகோன்னத நோக்கோடு சேவை செய்யும் ஹற்றன் நஷனல் வங்கியானது தனது 191ஆவது கிளையுடன் இன்று கிளிநொச்சி மண்ணில் காலடி பதிப்பது மகிழ்ச்சிக்கும் வரவேற்புக்கும் உரியதாகும். சேவையை வழங்க வேண்டிய இடத்தையும், வாடிக்கையாளர்களின் தேவைகளையும் சிறப்புற இனங்கண்டு இக்கிளையை இங்கு நிறுவ நடவடிக்கை மேற்கொண்ட வங்கி உயரதிகாரிகள் பாராட்டப்பட வேண்டியவர்களே. ஸ்திரம் மிக்க இவ்வங்கி மேன்மேலும் பல்வேறு இடங்களிலும் சேவையினைத் தொடர எமது நிறுவனத்தின் சார்பில் மனதார வாழ்த்தி மகிழ்கின்றோம். மக்கள் சேவை வங்கியின் முன்னேற்றம்.

வி.சுகுமாரன்,
பணிப்பாளர் மேக்ன்ரைல் பாதுகாப்புச் சேவை.

## "விழாச் சிறப்புற வாழ்த்தும் வர்த்தகப் பெருமக்கள்"


### எழிலகம்

ஒரேஞ் ஏக விநியோகஸ்தர்கள்,
ANTON PVC பைப் விநிகோகஸ்தர்கள்,
இலத்திரனியல் உபகரணங்களின்
மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்.



புகையிரத வீதி, கிளிநொச்சி
தொ.பே: 021-228 5960

### குவி ஹாட்வெயர்

கட்டட உபகரணங்கள், வன்பொருள்,
Multilac பெயின்ற் வகைகள்,
(Colour bank) இவற்றினை
நியாய விலையில் பெற்றிட



32, கண்டி வீதி, கிளிநொச்சி.
தொ.பே: 024 3248434

### இரத்தினாஸ்

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்,
தண்ணீர் பம்பிகள் இவற்றினை நியாய
விலையில் பெற்றிட நாடுங்கள்.



109, கண்டி வீதி, கிளிநொச்சி.
கிளை வவுனியா
தொ.பே: 077-274975

### ஏ.கே.ஆர். மோட்டேர்ஸ்

அனைத்து வகையான வாகன
உதிரிப்பாகங்கள், உழவு இயந்திரம்,
மோட்டார் சைக்கிள்களுக்கான
உதிரிப்பாகங்கள் பெற்றிட
நம்பிக்கை மிக்க நிறுவனம்.





A.9 வீதி, கிளிநொச்சி.
தொ.பே: 021-2285375

### செல்லா

தரமானதும், சுவைமிக்கதுமான உணவு
வகைகள், ஓடர்களுக்குமான உணவு
வகைகள், விநியோகவசதி,
கொழும்புக்கான A/C,Non A/C வாகன,
ஆசன பதிவுகளுக்கு நாடுங்கள்

ஏசியன் றெஸ்ரோறன்ட் &கூல்பார்.



A.9 வீதி, கிளிநொச்சி.
தொ.பே: 021 3208998

### ஜெகதீஸ் றேடேர்ஸ்

HARDWARE ITEMS,
PAINT வகைகள்,
CEMENT வகைகள்
இவற்றினை நியாய விலையில்
பெற்றிடலாம்.



கரடிப்போக்கு, கிளிநொச்சி.
தொ.பே: 021 3208141

### UNITED LANKA ENTERPRISE

* VRT Hardware Stores
* Union Money Exchange
* VRT Communication
* Millennium Accounting Service.
* Transport/Parcel Service.





*VRT Building*
*Kandy Road,*
*Tel: 021 3208080*

### E.B.N MULTI SHOP

அனைத்து வகையான கைத்தொலை
பேசி வகைகளின் விற்பனையாளர்கள்
நியாயவிலையில்
பெற்றிட நாடுங்கள்.

இலத்திரனியல் மின் உபகரணங்கள்
விற்பனையாளரும், சேவை வழங்குநரும்



கந்தசாமி கோயில் முன்பாக,
கிளிநொச்சி.
தொ.பே: 021 2285315

### Pillayar Hadware & Motor Stores

கட்டட உபகரணங்கள், பெயின்ற்
வகைகள், மில் இயந்திர பாகங்கள்,
உழவு இயந்திரபாகங்கள் இவற்றை
தரமானதாகவும், நியாயவிலையிலும்
பெற்றிடலாம்.



A/9 வீதி, கிளிநொச்சி
தொ.பே: 021-3208011


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப்பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# கர்நாடக சங்கீதம் 01

## பகுதி – I

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. கன இராகம் என்றால் என்ன?

02. நடபைரவி இராகத்தின் நேர் பிரதிமத்திம மேளம் யாது?

03. நவராகமாலிகை வர்ணத்தின் சரணத்தில் "பதஸ்ரோஜ" என்னும் பிரயோகத்தில் இடம்பெறும் இசை அணி யாது?

04. சுருதி நிர்ணயிக்கப்பட்ட காற்றுவாத்தியம் ஒன்றைக் குறிப்பிடுக.

05. கல்யாணி இராகத்தின் ஜன்னியமான உபய வக்ர ஔடவ சம்பூர்ண இராகம் யாது?

06. மொஸாட்டுக்கு பாப்பரசினால் வழங்கப்பட்ட பட்டம் யாது?

07. பாகேஸ்ரீ என ஹிந்துஸ்தானி இசையில் அழைக்கப்படும் இராகத்திற்கு ஒப்பான கர்நாடக இசையில் உள்ள இராகம் யாது?

08. ஹிந்துஸ்தானி பெஹாக் இராகத்தில் வரும் அன்னிய ஸ்வரங்கள் யாவை?

09. ர, கு ஆகிய ஸ்வரங்கள் வரும் மேளச்சக்கரங்கள் யாவை?

10. "உற்றுமை சேர்வது" என்னும் தேவாரம் அமைந்துள்ள பண் யாது?

* கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லையோ, சொற்றொடரையோ எழுதி நிரப்புக.

11. மேலைத்தேய லிபி முறையை .................................... என அழைப்பர்.

12. இராகத்திலோ சங்கதியிலோ வரக்கூடிய முடிவு ஸ்வரம் ................................... எனப்படும்.

13. தாள அங்கங்களைக் கையினால் ஓசையுடன் காட்டும் கிரியை .......................... ஆகும்.

14. விரிபோணி என்னும் பைரவி இராக அடதாள வர்ணத்தை இயற்றியவர் ............ ......................... ஆவார்.

15. .......................... 29ஆவது மேளத்தின் ஜன்னியமான வக்ரஷாடவ சம்பூர்ண இராகமாகும்.

16. ஹரிகாம்போதியின் ஆரோகண அவரோகணத்தை மேலைத்தேய சங்கீத லிபி முறையில் எழுதும்போது கைசிகி நிஷாதத்திற்கு ...................... அடையாளம் இடப்படும்.

17. காக பாதத்திற்குரிய மொத்த அட்சர எண்ணிக்கை ................ ஆகும்.

18. நாராயண தீர்த்தர் "கிருஷ்ண லீலா தரங்கினி" என்ற நூலை ........................ என்னும் ஊரில் நிறைவுசெய்தார்.

19. "சங்கீத தர்ப்பணம்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள வாத்தியம் ...................... ஆகும்.

20. தரு .......................... சங்கீதத்தைச் சேர்ந்த உருப்படியாகும்.

## பகுதி – II

01. பின்வரும் இராகங்களுள் இரு இராகங்களுக்கு விரிவான இலட்சணம் எழுதுக. (உருப்படிகள் சஞ்சாரம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்)
    1) பண் கௌசிகம். 2) கீரவாணி.
    3) ஸாவேரி. 4) கமாஸ்.

02. பின்வரும் உருப்படிகளுள் இரண்டிற்கு இலட்சணம் தருக.
    1) ஜாவளி. 2) சூளாதி.
    3) அஷ்டபதி. 4) பதம்.

03. தாளதசப்பிராணங்களுள் பின்வருவனவற்றை உதாரணங்களுடன் விளக்குக.
    1) கிரகம். 2) கிரியை.
    3) அங்கம். 4) பிரஸ்தாரம்.

04. கடபஜாதி ஸங்க்கையை எழுதி அத்திட்டத்தின் மூலம் எவ்வாறு இராகங்களின் மேள எண்ணைக் கண்டுபிடிக்கலாம் என்பதை உதாரணம் மூலம் விளக்குக.

05. சிறுகுறிப்பு எழுதுக.
    1) கனபஞ்சகம். 2) கடபஜாதி.
    3) சூத்திரகண்டம். 4) ஸ்வரஸாகித்தியம்.

06. பின்வரும் பதங்களை உதாரணம் மூலம் விளக்குக.
    1) பஞ்சமாந்திய இராகம். 2) மகுட ஸாகித்தியம்.
    3) மத்திமகால ஸாகித்தியம். 4) சங்கேத அட்சரங்கள்.

07. 1) ஜன்னிய இராகப் பிரிவுகளை எழுதுக.
    2) வர்ஜ இராகப் பிரிவுகளை உதாரணங்களுடன் அட்டவணைப்படுத்தி எழுதுக.

**SPECIAL GUIDE FOR 2010 A/L SCIENCE STUDENTS**

# கர்நாடக சங்கீதம் 02

## பகுதி – I

* பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

01. சதுர்த்தண்டிப் பிரகாசிகை என்னும் நூல் எத்தனை பிரிவுகளைக் கொண்டது?

02. ஸகல வாத்தியம் என்றால் என்ன?

03. செல்வி இராஜராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களால் திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்ட சபை எது?

04. "ஸிதார்" என்ற ஹிந்துஸ்தானி வாத்தியக் கருவியை உருவாக்கியவர் யார்?

05. கந்தர் அந்தாதியை இயற்றிய வாக்கேயக்காரர் யார்?

06. "பாவயாமி ரகுராமம்" என்னும் இராகமாலிகைக் கீர்த்தனையை இயற்றிய வாக்கேயக்காரர் யார்?

07. கோட்டு வாத்தியத்தில் உள்ள பரிவுநாதத் தந்திகள் எந்த மேளத்துக்கு சுருதி கூட்டப்படுகின்றன?

08. "கீத வாத்திய விநோத" என்னும் விருதினைப் பெற்ற வாக்கேயக்காரர் யார்?

09. "எவ்வரி" என்ற ஆபோகி இராக வர்ணத்தை இயற்றியவர் யார்?

10. கிற்றார் வாசிப்பு முறையில் முதன்முதலில் மாற்றம் ஏற்படுத்திய நாடு எது?

* கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லையோ, சொற்றொடரையோ எழுதி நிரப்புக.

11. புறச்செவியில் ................................................................................ என்னும் பாகங்கள் அடங்கியுள்ளன.

12. "வெண்கலக்குரல்" என இரசிகர்களினால் விவரிக்கப்பட்ட இசைக்கலைஞர் .............................................. என்பவராவார்.

13. "சங்கீத தர்ப்பணம்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள வாத்தியம் .................... என்பதாகும்.

14. "ராதா வதன" என்ற அஷ்டபதி அமைந்த ஆரோகண அவரோகணம் ................ ........................... ஆகும்.

15. செம்பை வைத்தியநாத பாகவதரினால் முதன்முதலாக இசைத்தட்டில் பாடப்பட்ட தமிழ் இராகமாலிகை விருத்தம் ..................................... ஆகும்.

16. ஹிந்துஸ்தானி இசையில் ஜோட்டிற்கு ஒப்பானது கர்நாடக இசையில் ............. ...................... ஆகும்.

17. "அலைபாயுதே கண்ணா" என்னும் பதத்தை இயற்றியவர் .......................... ஆவார்.

18. விநாயக ராம் ........................... வாசிப்பதில் பிரபலமானவர்.

19. நடுச்செவியில் ............................................. என்னும் மூன்று என்புகளால் ஆன தொடர் உள்ளது.

20. ஹிந்துஸ்தானி இசையில் .................................. என்ற பாணிகள் உண்டு.

## பகுதி – II

01. பின்வரும் சஞ்சாரங்களின் இராகங்களைக் கண்டுபிடித்து எழுதி அவற்றின் ஆரோகண அவரோகணங்களையும் ஸ்வரஸ்தானங்களையும் எழுதுக.
    1) ரிகபநிஸா - ஸ்நிஸ்ரி - ஸ்நிபக - நிபகரிஸா.
    2) கமதநிதம - கமதம கரிஸ - நிதமகரிஸ - கமதநி ஸநிதம கரிஸ.
    3) ரிமபதா - பமபதஸா - ஸ்நீதபமகரி - ஸரிகரிஸா - ரிமபதப - மகரிஸ.
    4) ஸமகம - தநிஸா - ஸ்ரிஸ்நிதா - ஸ்நிதமா - நிதமகரிஸ.

02. 1) கோட்டு வாத்தியத்தின் படத்தை வரைந்து அதன் பாகங்களைக் குறிப்பிடுக.
    2) அவ்வாத்தியத்தின் அமைப்பை விளக்கி தந்திகளைச் சுருதிகூட்டும் முறையை எழுதுக.

03. திரிதால், தாதரா, ஜப்தால், தீப்சந்தி ஆகிய ஹிந்துஸ்தானி சங்கீத தாளங்களின் ஜதிகளை (டேக்கா) எழுதுக.

04. 1) பின்வரும் வாத்தியங்களுக்கு இவ்விரண்டு உதாரணங்கள் தருக.
    1. தத. 2. ஸுசிர.
    3. அவனத்த. 4. கன.
    2) கிற்றார் அல்லது தபேலா வாத்தியத்தின் அமைப்பை விளக்குக.

05. 1) "பங்கஜநாப" என்னும் முத்திரையை உடைய வாக்கேயக்காரர் யார்?
    2) அவரது முத்திரைகளுள் இன்னொரு முத்திரையைக் குறிப்பிடுக.
    3) அவர் இயற்றிய இரு இராகமாலிகைகளைக் குறிப்பிடுக.
    4) அவரின் இசைத்தொண்டை விளக்குக.

06. 20ஆம் நூற்றாண்டில் கர்நாடக சங்கீதத்தில் ஹிந்துஸ்தானி, மேற்கத்தைய இசையின் செல்வாக்குப் பற்றி ஆராய்க.

07. நீர் கற்ற அடதாள வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வரதாளக் குறிப்புக்களுடன் எழுதுக.

*(13 ஆம் பக்கம் பார்க்க)*

தொகுப்பு:- சங்கீத ஆசிரியர்,
யா/மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# விவசாய விஞ்ஞானம்


## பகுதி – A, அமைப்புக்கட்டுரை வினாக்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. A. பசு ஒன்றின் முலைத்தொகுதியின் படம் கீழே காட்டப்பட்டுள்ளது.

1) A,B,C,D,E பகுதிகளைப் பெயரிடுக.

A ..........
B ..........
C ..........
D ..........
E ..........




2) பால் விடுவிக்கப்படல் என்றால் என்ன?

3) பால் கறத்தல் என்றால் என்ன?

B. 1) பால் இறக்கச் செயன்முறைக்கான தூண்டற்செயற்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

2) தூண்டற் செயற்பாட்டிற்கு அடுத்ததாக நிகழும் அகச் செயற்பாடு எது?

3) பரிவகக் கீழினால் சுரக்கப்படும் ஓமோன் எது?

C. 1) ஒட்சிரோசின் ஓமோனின் செயற்பாடு யாது?

2) இவ் ஓமோன் செயற்பாடு எத்தனை நிமிடங்கள் வரை காணப்படும்?

3) ஒட்சிரோசின் ஓமோன் வெளிப்பாட்டை நிரோதிக்கும் ஓமோன் எது?

D. 1) பசுக்களின் மடியில் ஏற்படும் நோய் ஒன்றைக் குறிப்பிட்டு அதற்குக் காரணமான நோயாக்கியையும் பெயரிடுக.

a) நோய் ..........
b) நோயாக்கி ..........

2) a) "ஸ்ரிக்கப்" பரிசோதனை மேற்கொள்ளப்படுவதன் நோக்கம் யாது?

b) ஸ்ரிக்கப் பரிசோதனைக்குத் தேவையான பொருட்களைக் குறிப்பிடுக.

c) கடும்புப்பால் கொண்டுள்ள சிறப்பியல்புகள் மூன்றைக் குறிப்பிடுக.

d) பால் கறப்பவரின் சுகாதாரம் தொடர்பான செயற்பாடுகள் மூன்றைக் குறிப்பிடுக.

d) பசுப்பாலில் பின்வரும் கூறுகளின் சதவீதங்களைக் குறிப்பிடுக.

1. நீர் ..........
2. லக்டோஸ் ..........
3. புரதம் ..........
3. கொழுப்பு ..........

02. A. 1) மண் இழையமைப்பு என்றால் என்ன?

2) மண் கட்டமைப்பு என்றால் என்ன?

3) மண்ணின் பிரதான கூறுகள் நான்கையும் குறிப்பிடுக.

4) சர்வதேச வகைப்படுத்தலிற்கு அமைவாக (I.S.S.S) மணல், அடையல், களித் துணிக்கைகளின் விட்டங்களின் வீச்சைக் குறிப்பிடுக.

a) மணல் ..........
b) அடையல் ..........
c) களி ..........

B. 1) மண் இழையமைப்பைத் துணியும் முறைகளைக் குறிப்பிடுக.

2) வயற்கொள்ளளவு என்றால் என்ன?

3) மண்ணின் தோற்ற அடர்த்தி அதிகரிப்பதனால் ஏற்படும் விளைவுகள் மூன்றைக் குறிப்பிடுக.

4) மண்ணின் தோற்ற அடர்த்தியைத் துணிவதற்குரிய சமன்பாட்டை எழுதுக.

5) மண்ணின் தோற்ற அடர்த்தியைக் குறைப்பதற்கு பயிர்ச்செய்கைக் களத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிடுக.

C. 1) மண்ணின் கற்றயன் பரிமாற்றுத்திறன் என்பதன் கருத்து யாது?

2) மண் கற்றயன் பரிமாற்றும் திறனால் கிடைக்கும் பிரதான அனுகூலம் யாது?

3) கற்றயன் பரிமாற்றுத்திறனை மேம்படுத்துவதற்கு பயிர்ச்செய்கை நிலத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிடுக.

4) ஈரவலயத்தில் காணப்படும் மண் பொதுவாக அமிலத்தன்மை உடையதாகக் காணப்படுகிறது. இதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

03. A. 1) உணவுப்பாதுகாப்பு என்றால் என்ன?

2) உணவைப் பழுதடையச்செய்யும் நுண்ணங்கி வகைகளைக் குறிப்பிடுக.

3) உணவைப் பழுதடையச்செய்வதில் பங்குகொள்ளும் பௌதிகக் காரணிகளைத் தருக.

4) பங்கசுக்களின் வளர்ச்சிக்கு ஏற்ற வெப்பநிலை வீச்சையும், pH வீச்சையும் குறிப்பிடுக.

a) வெப்பநிலை வீச்சு ..........
b) pH வீச்சு ..........

B. 1) உணவுப் பாதுகாப்பு முறைகள் ஐந்தைக் குறிப்பிடுக.

2) மேற்குறிப்பிட்ட பாதுகாப்பு முறையில் உள்ள கோட்பாடுகளைக் குறிப்பிடுக.

3) உணவுப் பாதுகாப்பு முறையின்போது உணவில் ஏற்படும் பௌதிக மாற்றங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

4) கீழே காட்டப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பு முறைகளை ஒப்பிடுக.

| | பாய்ச்சர் முறை | கிருமியழித்தல் முறை |
|---|---|---|
| a) | .......... | .......... |
| b) | .......... | .......... |
| c) | .......... | .......... |

C. 1) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள், பழங்கள் போன்றன நுகர்வோருக்கு வந்தடைய முன்னர் 40%-60% மானவை வீணாக இழக்கப்படுகின்றன. இதற்கான காரணங்கள் நான்கைக் குறிப்பிடுக.

2) உணவு நற்காப்பில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் நான்கைக் குறிப்பிடுக.


3) இலங்கையில் மரக்கறி உற்பத்தியில் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் கூடுதலாக இருப்பதற்குரிய காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

4) உணவு நற்காப்பின் முக்கியத்துவங்கள் நான்கைக் குறிப்பிடுக.

04. A. கோழியின் இனப்பெருக்கத் தொகுதியைப் படம் குறிக்கின்றது.

1) பகுதிகளைப் பெயரிடுக.

A ..........
B ..........
C ..........
D ..........
E ..........
F ..........




2) மேற்குறிப்பிட்ட பகுதிகளினால் ஆற்றப்படும் தொழில்களைக் குறிப்பிடுக.

A ..........
B ..........
C ..........
D ..........
E ..........

3) முட்டை உருவாக்கச் செயன்முறையில் ஒளிக்கான தூண்டல் கிடைக்கும் வேளையில் கபச்சுரப்பியால் சுரக்கப்படும் ஓமோன் யாது?

4) கோழி முட்டையில் உள்ள போசணைக் கூறுகளின் சதவீத அளவைக் குறிப்பிடுக.

a) நீர் ..........
b) புரதம் ..........
c) கொழுப்பு ..........

C. 1) சூழல் வெப்பநிலை உயர்வாக உள்ளபோது முட்டை உற்பத்தி (குறைவடையும், கூடும்)


2) கோழி முட்டையின் அடைகாக்கும் காலம் எத்தனை நாட்கள்?

3) அடைவைத்தலுக்காக முட்டைகளைத் தெரிவுசெய்யும்போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் ஐந்தைக் குறிப்பிடுக.

4) சில கோழிகள் ஓடற்ற முட்டை இடுவதற்கான காரணம் யாது?

5) கோழி முட்டை மூலம் குஞ்சுகளுக்குக் கடத்தப்படும் பக்றீரிய நோய் எது?

D. மையநீக்கப் பம்பியின் மாதிரி வரைபடம் தரப்பட்டுள்ளது.




1) A,B ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.

A ..........
B ..........

2) மையநீக்க விசை எப்பகுதி மூலம் ஏற்படுத்தப்படுகிறது?

3) மையநீக்கப் பம்பியின் அனுகூலங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

4) வேறு இரு வகையான நீர் இறைக்கும் பம்பிகளின் பெயர்களைத் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Multimedia மற்றும் Accounting**
**கணினி பாடநெறிகளுக்கு சிறப்புக் கட்டணச்சலுகை**

கிராமம் முதல் நகரம் வரை காணப்படும் 20 கணினி பயிற்சி மையங்களிலும் இச்சலுகை வழங்கப்படுகிறது

**Bumper Offer**



பரீட்சைகள் எதுவும் இன்றி நேரடியாக தெரிவு செய்யும் எந்தவொரு பாடநெறிக்கும்

**50% கட்டணச் சலுகை**

- Dip in Video Editing
- Dip in Computerized Accounting
- Dip in Graphic Design
- Tally Accounting Technician
- Dip in 3D Modeling & Graphics
- Professional Video Production

Free study pack for all courses

யாழ் குடாநாட்டில்...

**TECHNO WORLD**
**Studies (Pvt) Ltd**

கணினிப் பயிற்சி நிறுவனம்


கஸ்தூரியார் வீதியில்
344, கஸ்தூரியார் வீதி 021-4921124

மானிப்பாயில்
தினேஸ் வெதுப்பக மேல்மாடி, 182, யாழ் வீதி 021-4922400

திருநெல்வேலியில்
142, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி 021-4922401

சாவகச்சேரியில்
கென்ஸ்மன் வீதி, நீதிமன்றம் எதிரில் 021-5102600

கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்



## ஈரவிழிகளுடன் உங்களின் 3 ஆம் ஆண்டு நினைவலைகள்,



(100492)

எமது திருக்கோயிலில் நேரில் நின்று
பேசும் தெய்வமும் நீயே-கண்மணி
மெழுகுவர்த்தி போல் ஒளியைத் தந்து
சோகத்தை ஏற்றுக்கொள்பவளும் நீயே
எத்தனை வருடங்கள் சென்றாலும் உனது
ஒளியையும் அருளையும் மறக்கமுடியுமா?
மீண்டும் கிடைக்குமா........ கண்மணியே!


தோற்றம்: 03.02.1940
மறைவு: 15.07.2007
திதி: பிரதமை

திருமதி
**நகுலாவதி தங்கராஜா**
(மணி)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அங்கலின் ரெக்ஸ்ரைல்
55, பெரிய கடைவீதி,
யாழ்ப்பாணம்.

## நீங்கா நினைவில் 3 ஆம் ஆண்டு



பாசத்தின்
பிறப்பிடமாய்:
04.11.1956



நேசத்தின்
முடிவிடமாய்:
16.06.2007

**திருமதி கணேஸ்வரி தம்பிராஜா**
**(சுகந்தா)**

(முன்னாள் உத்தியோகத்தர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அலுவலகம், தெல்லிப்பளை)

திதி: வளர்பிறை பிரதமை 12.07.2010

ஊர் அறிய வாழ்ந்தாய்
உலகம் போற்ற வாழ்ந்தாய்
வாழ்க்கையின் அர்த்தத்தை கற்றுத்தந்தாய்
ஆண்டுகள் பதினைந்து கூடி வாழ்ந்தோம்
அதுவே எனது வாழ்க்கையின் பொற்காலம்
ஆண்டுகள் மூன்று ஆனதுவோ
முத்தென இருந்த எம்மை தடம்புரட்டியது விதியோ?
அம்பாளின் நிழல் சேர்ந்த நிம்மதியில்
வாழ்கின்றோம் நாம்.....
என்றும் வாசலில் உன் வரவுக்காய்....

'துர்க்கா இல்லம்',
26/5, பிரம்படி லேன்,
கொக்குவில். 0773164535

உனை எண்ணி
கணவர், தாய், சகோதரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


180 வது மைல்கல்

# அச்சுவேலி

எமது நாட்டின் சில பிரதேசங்களில், அப்பிரதேசத்திற்கே உரித்தான தொழில் முறைமைகள் பல காணப்படுகின்றன. இதற்கு பிரதான காரணியாக அமைவது, பாரம்பரிய தொழில் முறைமையினை பின்பற்றுதலும், அவற்றுக்கு தேவையான மூலப்பொருட்களை அப்பிரதேசத்திலேயே பெற்றுக்கொள்வதினாலேயே ஆகும். வார்ப்புத் தொழிலகம் இப்பிரதேசத்தில் இருந்ததாகவும், அது பிற்காலத்தில் பல காரணங்களினால் கைவிடப்பட்ட நிலையிலிருந்து அழிந்து போனதாக அறியப்படுகிறது. பல தசாப்தங்களுக்கு முன்பு வார்ப்பு தொழிலுக்கு அச்சு உபகரணம் பாவித்த காரணத்தினால் இப்பிரதேசம் "அச்சுவேலி" என்று பெயர் பெற்றிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது. அத்தோடு இன்றும் பாழடைந்த நிலையில் காட்சியளிக்கும் பழமையான உலோக பாகங்கள் கொண்ட தோற்றமானது வார்ப்பு தொழிலகம் இருந்ததற்கான சான்றாகவும் அமைகிறது. யாழில் உதயமாகியுள்ள அபிவிருத்தி பணியானது அச்சுவேலி பிரதேசத்தின் வளர்ச்சிக்கு உறுதுனையாகும் இக்காலகட்டத்தில், நவீன வசதிகளைக் கொண்ட கைத்தொழில் வலயம் ஒன்றை விருத்தி செய்யவும், தொழிலகத்தினை மறுசீரமைக்கவும் திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றனர். அதிவேகமாக இப்பிரதேசம் அபிவிருத்தியடைவதால் தேவையான நவீன வங்கி வசதிகளுடன் நிதியியல் பலத்தை கொண்ட கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை இன்று அச்சுவேலி நகரில் திறந்து வைக்கப்படுகிறது.

கொமர்ஷல் வங்கியின் இப்புதிய கிளை ராஜ வீதி, அச்சுவேலி என்ற முகவரியில் 2010 ஜுலை 12ம் திகதி திங்கட்கிழமை மு.ப 09.36 மணிக்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது. இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும்படி அனைவரையும் அழைக்கிறோம்.

தொலைபேசி (முகாமையாளர்) 021-3207650, (பொது) 021-3207651, 021-3207652



OgilvyAction

COMMERCIAL BANK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நோய் உபாதைகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். பண விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்குவீர்கள். காலை முதல் மாலை வரை உற்சாகமாக செயற்படுவீர்கள். விருந்து, விசேஷங்களால் வீட்டில் கலகலப்பு உண்டு.

### இடபம்



சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். முன்பின் தெரியாதவர்களை நம்பி சில வேலைகளை ஒப்படைக்கலாம். திடீர் செலவுகளைச் சமாளிக்க நண்பர்களிடம் கடனுதவி பெறலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

### மிதுனம்



வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். காலை நேரத்தில் கனிவான செய்திகளைக் கேட்கலாம். எடுத்த காரியத்தை முடிக்க நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். இரண்டு மூன்று நாள்களாக செய்யாமல் விட்ட வேலை ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும்.

### கடகம்



குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். சிலரிடம் கோபமாகப் பேசலாம். நண்பர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செல விடலாம். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். குடும்ப உறுப்பினர்களுக்கு பிடிக்காத காரியம் ஒன்றைச் செய்வீர்கள். சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம்.

### சிங்கம்



வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். தாய் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கும். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பொருளாதார நிலைமை மேம்படும். இதுவரை உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

### கன்னி



தொல்லை கொடுத்தவர்கள் தோள் கொடுத்து உதவும் நாள். தெய்வ காரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். காலை நேரத்தில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். பழைய பொருள்களை மாற்றி புதிய பொருள்கள் வாங்கலாம். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பரபரப்பாக செயற்படும் நாள்.

### துலாம்



நினைத்த ஒரு வேலையைச் செய்ய முடியாமல் மற்றொரு வேலையைச் செய்யலாம். குடும்பத்திற்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொடுக்கலாம். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். கடந்த கால விடயம் ஒன்றை அசைபோட்டுப் பார்ப்பீர்கள்.

### விருச்சிகம்



கடன் பிரச்சினைகளால் கவலைகள் அடையலாம். சில வேலைகளுக்காக கடுமையாக அலைய நேரிடலாம். போட்டி, பொறாமைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். வாடகைக்கு குடியிருப்போர் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். எதிலும் வேகத்தை தவிர்த்து நிதானமாகச் செயற்பட வேண்டும். தண்டச் செலவு நேரும்.

### தனுசு



அரசியல்வாதிகள் திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையலாம். உறவினர்கள் வழியில் மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். பால்ய நண்பர் ஒருவரைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். சொத்து வாங்கல் கொடுக்கல் விவகாரங்களில் முன்னேற்றம் உண்டு.

### மகரம்



தேக ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உடன் பிறப்புக்களை அனுசரித்துச் செல்வது நல்லது. மனைவி, குழந்தைகளுடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். மதிப்புப் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். சண்டை போட்ட ஒருவரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். ஆறுதல் அனுபவம் உண்டு.

### கும்பம்



உறவினர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். வியக்கத்தக்க செய்திகளைக் கேட்கலாம். உங்கள் நலனில் அக்கறை கொண்டவர்களின் யோசனையைக் கேட்டு செயல்படுவீர்கள். கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளின் மனம் கோணாமல் நடந்துகொள்ள முற்படுவீர்கள்.

### மீனம்



சில வேலைகளுக்காக அங்கும் இங்கும் அலைய நேரிடலாம். அயலாரை அனுசரித்துச் செல்ல வேண்டும். உங்களின் வேலை ஒன்று உறவினரால் தடைபடலாம். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். பிறருக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரணமும்

மலர்வு 30 . 08 . 1986



உதிர்வு 29 . 05 . 2010

அமரர்

**பாலகிருஸ்ணன் ஐயா சிவச்செல்வன் ஐயா (சிவா)**

புன்னகையும் பூமுகமும் கொண்ட உன்னை
ஈரைந்து மாதங்கள் கருவிலே சுமந்து- முதலாவதாய்
பெற்றெடுத்தாள் உன் அன்னை
அப்பா, அம்மா என்றும் தம்பி என்றும்
ஆருயிர்த் தங்கை என்றும் அத்தான் என்றும்
பண்ணிசை போல் பாசம் வளர்த்தாய்
இனிய நண்பனாய் எல்லோருக்கும் அன்பனாய்
இதயத்தில் நிறைந்தவனே!
சின்னஞ்சிறு பாலகன் போல் குறும்புகளும் விளையாட்டுக்களும் புரிந்து
இருபத்துமூன்றாண்டுகளாய் எம்முடனே இருந்துவிட்டு
திடீரென இன்று நீர் பிரிந்ததேனோ?
உனை எண்ணி விட்ட கண்ணீர் காயவில்லை- இனி
விழிகளிலே நீரும் இல்லை
கூண்டுக் கிளிபோல் தவிக்கின்றோம்- நாம்
கூப்பிடும் சத்தம் கேட்கிறதா- உனக்கு?
உன்னை இழந்து தவிக்கின்றோம்
மடிந்த எம் மகனே உன் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

156, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0771605159, 0214908460.

உ. பாலகிருஸ்ணன் ஐயா (நல்லூர்).

(100499)

## தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழ அகதிகள் 25 பேரையும் கனடா விடுவிக்கும்

றொறன்ரோ, ஜூலை12

கனடா வன்கூவரில் கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் 25 பேரையும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்பதற்கான ஆதாரங்கள் எவையும் இல்லை என கனேடிய எல்லை சேவைகள் நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஓசியன் லேடி கப்பல் மூலம் சென்ற 76 இலங்கை அகதிகள் அநேகர் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டபோதும் 25 பேர் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

அத்துடன் அவர்கள் அனைவரும் கனடாவில் புலிகளின் புதிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக வந்தவர்கள் என்றும் கனேடியப் பாதுகாப்பு தரப்பினரால் கூறியிருந்தனர்.

பல மாதங்களாக தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின் அவர்களுக்கு எதிராக எவ்வித ஆதாரங்களும் இதுவரையில் திரட்டப்படவில்லை எனக் கனேடியக் குடிவரவுத்துறை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர்களை விடுவிப்பதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் விரைவில் வெளியாகும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஒ)

## 'லிவ்ற்- 2' கூட்டம்

நாவற்குழி, ஜூலை 12

'கெயர்' சர்வதேச நிறுவனத்தினரால் 'லிவ்ற்-2' மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் என்னும் திட்டத்திற்கான கூட்டம் அண்மையில் சிறுப்பிட்டி கிழக்கு பன்னாலையில் நடைபெற்றது.

இதில் 'கெயர்' நிறுவன அதிகாரிகளுடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும், கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உதியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-121)


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1206 சிவப்பு

09-07-2010

27 30 35 46

இடபம்

ஜக்பொட் பரிசு ரூபா. 4,866,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 217,660 | 20/- | 4,353,200/- |
| 2 இலக்கங்கள் | 20,034 | 40/- | 801,360/- |
| 1 இல. + லக்கினம் | 19,893 | 60/- | 1,193,580/- |
| 2 இல. + லக்கினம் | 1,796 | 200/- | 359,200/- |
| 3 இலக்கங்கள் | 536 | 1000/- | 536,000/- |
| 3 இல. + லக்கினம் | 50 | 10,000/- | 500,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,866,400/- | - |
| மொத்தம் | | | 8,143,340/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 259,976 | | 8,643,340/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,838,400/-


2010 ஜூலை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல் நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 501424975-5-35 |
| குருநாகல் | 501421133-6-42 |
| அனுராதபுரம் | 501429136-3-20 |
| கண்டி | 501423878-0-11 |
| கம்பஹா | 501425527-6-05 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற 'பொசன்' பூரணை நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களே இவை. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சி.டபிள்யூ.சி.வி.இராஜகுரு உள்ளிட்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், படையினரால் வழங்கப்பட்ட உணவு வகைகளை பொதுமக்கள் உண்பதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் காட்சிப் படுத்தப்பட்டிருந்த அலங்காரப் பந்தலினை இறுதிப் படத்திலும் காணலாம். *(405)*

# மடுக்கரைச்சிக் கிராம பாடசாலை மாணவர்களுக்கு கடற்படையால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

மன்னார் , ஜூலை 12

மன்னார்,நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வாழ்க்கை பெற்றான் கண்டல் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மடுக்கரைக் கிராமப் பாடசாலை சிறார்களுக்கு பாடசாலை செல்வதற்கான சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கடற்படையினரினால் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மடுக்கரை கிராமம் பொருளாதார ரீதியாக பின்தங்கிக் காணப் படுவதுடன் போக்குவரத்தும் சீரின்மையாலும் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வரும் பிரதேசமாகும்.

இக்கிராமத்தில் வாழும் 225 குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லும் 290 மாணவர்களுக்கு வடக்கு, கிழக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் அமரசிங்க இப்பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளார்.

மன்னார் பிரதேசக் கடற்படையின் பொதுமக்கள் தொடர்பு அலுவலர் லக்ஸ்மன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

நானாட்டான் பிரதேச செயலாளர் ஏ.கே. சந்திரஐயர், நிர்வாக கிராம அலுவலர் வை.சந்திரசேகரம் ,எக்செஸ் இஞ்சினியரிங் நிறுவன முகாமையாளர் பெர்ணான்டோ உட் பட மற்றும் கடற்படை அலுவலர்களும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

மடுக்கரை கிராமப் பாடசாலையில் கல்வி கற்கும் இருநூறு மாணவர்களுக்கும் மற்றும் அயல் கிராமத்தில் உள்ள பாடசாலைகளில் சென்று கல்வி கற்கும் 90 மாணவர்களுக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (எ-86)

## சமூகசேவைகள் அமைச்சின் நடமாடும் சேவை நாளை

கிளிநொச்சி , ஜூலை 12

சமூக சேவைகள் அமைச்சின் நடமாடும் சேவை நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயதில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் முதியோர் அடையாள அட்டை வழங்கல்,சுயதொழில் ஊக்குவிப்பு நிதி வழங்கல், முதியவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் போன்ற சேவைகள் இடம்பெறவுள்ளன. (6)

# அஞ்சல் திணைக்களப் போட்டிகளில் மன்னார் மாவட்டத்தில் வெற்றியீட்டியோர்

வலி.வடக்கு , ஜூலை 12

வடமாகாண அஞ்சல் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியாக மன்னாரில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**சைக்கிள் ஓட்டம்**

முதலாமிடம்-ஏ. சகாயனாந் - மன்னார், இரண்டாமிடம்-சி.ஸ்ரீரஞ்சன் - அளவெட்டி, மூன்றாமிடம் - எம்.எம் றில்வாஜ் -வவுனியா

**மரதன் ஓட்டம்**

முதலாமிடம் - ஏ. அமிர்தரெட்ணம்- மன்னார், இரண்டாமிடம்- பி. கண்ணதாஸ் - வேலணை, மூன்றாமிடம் - ஆர். வசீகரன் - வல்வெட்டித்துறை.

**நீச்சல் போட்டி**

முதலாமிடம்- பி. தபோதரன் - சாவகச்சேரி, இரண்டாமிடம் - ஏ.அந்தோனி- மன்னார், மூன்றாமிடம்- ஜி. கிளாரன்ஸ்- ஊர்காவற்றுறை.

**பிற நீச்சல்**

முதலாமிடம்- ஏ.அந்தோனி - மன்னார், இரண்டாமிடம்- எஸ். பிராங்கிளின் - மன்னார், மூன்றாமிடம்- ஜி.கிளாரன்ஸ் - ஊர்காவற்றுறை.

**வேக நடை**

முதலாமிடம்- ஜி.கிளாரன்ஸ் - ஊர்காவற்றுறை, இரண்டாமிடம்- ஏ. எமில்ராஜேஸ்வரன் - மன்னார், மூன்றாமிடம் - ஆர். வசீகரன்- வல்வெட்டித்துறை. (எ-86)

# அதிகரித்த பஸ் கட்டணங்களால் மீளக் குடியமர்ந்த மக்கள் பாதிப்பு

மன்னார், ஜூலை 12

மன்னாரில் மக்கள் அண்மையில் மீளக் குடியமர்ந்த பிரதேசங்களில் இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பஸ் சேவைகளின் கட்டணங்கள் அதிகரித்த அளவில் அறவிடப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாந்தை மேற்கு, மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அண்மைக் காலப் பகுதியிலேயே மக்கள் மீளக்குடியமர்ந்தனர். இப்பிரதேசங்களுக்கான பஸ் கட்டணங்கள் ஏனைய பிரதேசங்களை விடவும் அதிக அளவில் அறவிடப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

மன்னாரிலிருந்து வவுனியா செல்வதற்கு 80 ரூபாவும், 36 கிலோ மீற்றர் தூரமான மாந்தைக்குச் செல்வதற்கும் 80 ரூபாவே பஸ் கட்டணமாக அறவிடப்படுவதாகவும் இதனால் பொதுமக்கள் அரச, தனியார் ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-80)

## இளைஞர் சேவை மன்ற அதிகாரி நியமனம்

கிளிநொச்சி , ஜூலை 12

கிளிநொச்சி மாவட்டத்தின் இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரியாக ஐயாத்துரை தெய்வேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கடந்த மாதம் 17 ஆம் திகதி நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரால் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திற்கே தற்போது இளைஞர் சேவை அதிகாரியாக தெய்வேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 17 ஆம் திகதியில் இருந்து கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார் . (எ-405)

# மீள் குடியேற்றம் நிகழ்ந்தும் மீளா அவலத்துடன் இயங்கி வரும் கிளிநொச்சி மத்திய கல்லூரி

கிளிநொச்சி , ஜூலை 12

பகல் வேளையில் திடீரெனப் பெய்த மழையினால் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகள் முழுமையாக பாதிப்புக்குள்ளாகின. இச் சம்பவம் கடந்த 8ஆம் திகதி வியாழக் கிழமை நடைெற்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகம் இடைத்தங்கல் முகாமாகப் பயன்படுத்தப் பட்டு வரும் நிலையில் இப்பாடசாலை கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவன வளாகத்தில் உள்ள கூரைகள் அற்ற கட்டடங்களில் தறப்பாள் கட்டப்பட்டும், மரநிழல்களிலும் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் திடீரென கடந்த வியாழக்கிழமை பெரும் மழை பெய்ததால் ஆசிரியரும் மாணவர்களும் ஒதுங்க இடமின்றி அல்லோல கல்லோலப்பட்டனர். மழையை அடுத்து அடுத்தநாள் மாணவர் வரவும் வெகுவாகக் குறைந்திருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தின் முதல் நிலைப் பாடசாலைகளில் ஒன்றான இக்கல்லூரி ஏ-9 வீதியில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கும் அருகில் எவ்வித வசதிகளும் அற்ற நிலையில் தறப்பாள் கொட்டில்களிலும், மரநிழல்களிலும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் கிளிநொச்சியில் பூர்த்தியாகிவரும் நிலையில் இக்கல்லூரி தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இராமநாதபுரம் ம.வி., தருமபுரம் ம.வி., முருகானந்தா ம.வி., அக்கராயன் ம.வி போன்ற கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளும் மக்களின் மீள்குடியேற்றத்திற்காக பயன்படுத்தப்படுகின்றபோதிலும் அப் பாடசாலைகள் இயங்கும் நிலையிலேயே ஒரு பகுதி மீள்குடியேற்றத்திற்காக பயன் படுத்தப்பட்டுகின்றது. அதே போல் மத்திய கல்லூரியையும் பகுதியளவிலேயே பயன் படுத்த சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்ய வேண்டும் எனப் பொதுமக்கள் கோரியுள்ளனர்.

முகாம் வாழ்க்கை முடிந்த பின்னும் எமது பிள்ளைகளின் கல்வி தறப்பாள் கொட்டில், மரநிழல் என்பவற்றிலேயே இன்னமும் தொடர்கின்றதே எனக் கல்லூரியின் பெற்றோர் ஆதங்கப்படுத்துகின்றனர்.

கடந்த பெப்ரவரி மாதம் மீள ஆரம்பிக்கப் பட்ட இக்கல்லூரி ஐந்து மாதங்களின் பின்னர் கூட மாற்றம் எதுவும் இன்றி ஆய்வு கூடம் இன்றி, நூலகம் இன்றி, கணனி அறை வசதியின்றி, மலசல கூட வசதியின்றி ஏன் வகுப்பறை வசதி கூட இன்றி இயங்கி வருகின்றது.

அடிக்கடி கிளிநொச்சி வந்து செல்லும் அமைச்சர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்கள், உயர் அதிகா... களை இக்க... நெருடாமல் இருப்பது ஏன் எனவும் பெற்றோர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (எ-405)




# கிளிநொச்சி நகரை அண்மித்துள்ள பிரதேசங்களுக்கு மின்விநியோகம்

கிளிநொச்சி , ஜூலை 12

கிளிநொச்சி நகரை அண்டிய பிரதேசங்களில் மின் இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்த பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப் பட்டு வருகின்றது.

இரணைமடுச்சந்தி, பாரதிபுரம், கனகாம்பிகைக்குளம், தொண்டமான் நகர், கிளிநொச்சி நகர், திருநகர், கணேசபுரம், பரந்தன் ஆகிய இடங்களுக்கே இவ்வாறு மின்சாரம் வழங்கப் பட்டு வருகின்றது.

மின்சாரம் வழங்கக்கூடிய இடங்களில் உள்ள வீடுகள், வர்த்தக நிறுவனங்களுக்கு மின் இணைப்புகள்வழங்கும் நடவடிக்கைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. இப்பகுதியில் இரணைமடுச்சந்திக்கு அண்மையில் இயங்கும் மின்சாரசபையின் பாவனையாளர் சேவை நிலையத்தினர் ஈடு பட்டு வருகின்றனர்.

இப்பகுதிகளில் மின்சாரம்பெற விரும்புவோர், மின்சார சபையின் பாவனையாளர் அலுவலகத்திற்குச் சென்று உரிய விண்ணப் ... பெற்று பூர்த்தி செய்து ...டாக மின் இணைப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கூறப்படுகின்றது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீள்குடியேறிய மக்களுக்கு இலவசமாக மின் இணைப்பு வழங்கும் வேலைத்திட்டங்களும் இடம்பெற்று வருகின்றன.(எ-405)

## அங்கவீனர்களுக்கு மலசலகூடம்

கிளிநொச்சி , ஜூலை 12

கிளிநொச்சி மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட அங்கவீனர்கள் 20 பேருக்குத் தலா ஒரு இலட்சம் ரூபா செலவில் மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்க வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் முன்வந்துள்ளது.

இதற்காக கரைச்சி பூநகரி, பளை, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து தலா 5 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இந்த ஒரு இலட்சம் ரூபா நிதி மூன்று கட்டங்களாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (6-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண நல்வாழ்த்துகள்

இன்று (12.07.2010) திங்கட்கிழமை இல்லறமெனும் நல்லறத்தில் இணையும்

கோப்பாய்
சிவஸ்ரீ சி.ஜோதீந்திரக் குருக்கள்
தம்பதியரின் ஏக புதல்வன்
சிரஞ்சீவி
**சிவராமசர்மா** (சட்டத்தரணி)

குளியாப்பிட்டிய
சிவஸ்ரீ இ.பாலச்சந்திரக் குருக்கள்
தம்பதியரின் கனிஷ்ட புதல்வி
சௌபாக்கியவதி
**மதிவதனி**

ஆகியோர் இருமனமொத்து இனிய நல்வாழ்வில் சகல செல்வ யோகங்களுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

சுபம்

*சரஸ்வதி வாசம்,*
*வீரபத்திரர் கோயிலடி,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.*

வாழ்த்துவோர்:
சிவஸ்ரீ இ. வேதரூபக்குருக்கள் குடும்பம் (லண்டன்),
ப்ரஹ்மஸ்ரீ.நா.சிவசங்கரசர்மா குடும்பம் (மயிலணி).

# முந்துங்கள்! முந்துங்கள்!

கொக்ககோலா வாடிக்கையாளர்களே முந்துங்கள். உங்களிடம் உள்ள இலவச சோடா மூடிகளை இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக கொக்ககோலா விநியோகஸ்தர்களான சிவா பிறதர்ஸிடம் (Siva Brothers) கொடுத்து அதற்குரிய இலவச சோடாக்களைப் பெற்றுக் கொள்ளவும். அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.

விநியோகஸ்தர்: சிவா பிறதர்ஸ்
*205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே: 0212225497.*

# முக்கிய அறிவித்தல்

## வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்

எமது நிறுவனத்தின் மூலதனக் கணக்குகளை ஒழுங்கமைக்கும் முகமாக பின்வரும் விவரங்கள் தொடர்பில் எமது நிறுவனத்தின் நடவடிக்கையுடன் தொடர்புகொண்டுள்ளவர்களிடமிருந்து 31.12.2008, 31.12.2009 ஆகிய திகதிகளில் உள்ளவாறான மீதிகளை உறுதிப்படுத்தி தலைவர்/பொதுமுகாமையாளர், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம், பிரதான வீதி, கரடிபோக்குச் சந்தி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு 31.07.2010 ஆம் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

1. வியாபார வருமதிகள், ஏனைய வருமதிகள் (பேரிணையத்துக்கு)
2. வியாபாரச் சென்மதிகள், ஏனைய சென்மதிகள் (பேரிணயத்திடமிருந்து)
3. பேரிணையத்திடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்கள்.
4. பேரிணையத்திடமிருந்து பெற்றுக்கொண்ட முற்பணங்கள்.
5. பேரிணையத்திற்கு வழங்கிய கடன்கள்.

**குறிப்பு:**
மற்றும் சங்கத்தின் வியாபார மற்றும் ஏனைய நடவடிக்கையோடு தொடர்புடைய விடயங்கள் இருப்பின் அது பற்றியும் எழுத்து மூலம் தெரிவிக்கவும். இவ்வாறு விவரங்களை அனுப்பி வைக்கும் பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் தங்களுக்கும் எமக்குமிடையில் இருக்கும் கணக்கு மீதிகளை உரிய முறைப்படி பேண முடியும்.

கூட்டுறவு சேவையிலுள்ள

ஞா.செல்வரட்ணம்
தலைவர்.

சோ.திலகராஜ்
பொதுமுகாமையாளர்.

**வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்,**
**பிரதான வீதி,**
**கரடி போக்குச் சந்தி,**
**கிளிநொச்சி.**

(100720)

# வீதி அகலமாக்கல் புத்தூரில் துரிதம்

யாழ்.பருத்தித்துறை வீதி அகலமாக்கும் பணியில் தற்போது புத்தூர் பிரதேசத்தில் வீதியின் கொங்கிறீற் இட்ட பகுதிகளுக்கு 'எம்சி-30' எனும் தார் ஊற்றப்படுகின்றது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிவரை தற்போது வீதியின் கிழக்குப்புறம் 'கிறவல்' இடப்பட்டுள்ளது.

வீதியின் கிழக்கு, மேற்குப்புறமாக அகலமாக்கிக் 'கிறவல்' இடும் பணி தொடர்ச்சியாகவே நடைபெற்று வருகின்றது. கொங்கிறீற் கலவையிடப்பட்ட இடங்களுக்குத் தண்ணீர் ஊற்றி இறுக்கமாக்கும் வேலைகள் இயந்திர உபகரண உதவியுடன் செய்யப்படுகின்றன. (எ-121)

# பாரதி வீதி படுமோசம்

நாவற்குழி, ஜூலை 12

நாயன்மார்கட்டு, பாரதி வீதி கடந்த 40 வருடங்களாகத் திருத்தப்படாமல் படுமோசமாகச் சீரழிந்த நிலையிலுள்ளது.

இந்த வீதியில் காணப்படும் வெள்ளம் வடியும் மதகும் உடைந்த நிலையிலேயே உள்ளது. மழை காலத்தில் இம் மதகு வழியாகவே வெள்ளம் வழிந்தோட வேண்டியுள்ளது. மதகு உடைந்ததால் வெள்ளம் ஓடாமல் தேங்கி நின்று பலத்த சிரமங்கள் ஏற்படுகின்றன.

நாயன்மார்கட்டுக் கிராம மக்கள் இது குறித்து பிரதேச சபையிடம் முறையிட்டுள்ளனர். மிக விரைவில் பாரதி வீதியையும், மதகையும் திருத்தித் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-121)

# ஜாதிக சம்பத

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 37
திகதி - 10.07.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: J | அதிர்ஷ்ட இலக்கம்: 02 | வெற்றி இலக்கம்: 4 4 5 5 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | J 02 4 4 5 5 6 | ரூ. 12,929,397.00 | - |
| 1 பரிசு | 02 4 4 5 5 6 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 4 4 5 5 6 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 4 5 5 6 | ரூ. 10,000.00 | 25 |
| 4 பரிசு | 5 5 6 | ரூ. 1,000.00 | 257 |
| 5 பரிசு | 5 6 | ரூ. 50.00 | 2403 |
| 6 பரிசு | 6 | ரூ. 20.00 | 23324 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7 பரிசு | 4 4 5 5 | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | 4 4 5 | ரூ. 100.00 | 252 |
| 9 பரிசு | 4 4 | ரூ. 50.00 | 2451 |
| 10 பரிசு | J | ரூ. 20.00 | 9594 |
| 11 பரிசு | J 02 | ரூ. 100.00 | 1084 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,867,660.00

[illegible]

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
[illegible]
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.13,280,500.00

# வெல்லன் விநாயகர் ஆலயம், கரவெட்டி பாலஸ்தாபனம்

நிகழும் விகிர்தி வருடம் ஆனிமாதம் 28ஆம் திகதி இன்று 12.07.2010 திங்கட்கிழமை அதிகாலை 04.05 மணி தொடக்கம் 5.40 மணி வரையுள்ள புனர்பூச நட்சத்திரமும், பூர்வபக்க பிரதமை திதியும், அமிர்தசித்த யோகமும் கூடிய மிதுன லக்கின சுப வேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற எம் பெருமான் திருவருள் கைகூடியுள்ளது.

ஆலய நிர்வாக சபை.

# விற்பனைக்கு

டாக்டரின் சொந்தப் பாவனையில் உள்ள சில ஆயிரம் கிலோ மீற்றர் தூரமே பாவித்த, மிக நல்ல நிலையில் உள்ள JIALING-90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. அத்துடன் சிசில் -80 குளிர்சாதனப் பெட்டியும், பிரிட்டிஷ் றலி சைக்கிளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 100, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே:- 0778996281

# கோழிக்குஞ்சு விநியோகம்

மிற்லைன் பைரகா புறொயிலர் குஞ்சுகள் செவ்வாய், வெள்ளி கிழமைகளில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

விவரங்களுக்கு: எஸ்.கிருஸ்ணகுமார் மானிப்பாய். தொ.பே: 0772338084

# கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

## கேள்வி விண்ணப்பம் கோரல்

1. யாழ்.மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ.சங்கங்களுக்கு யுனிலிவர் உற்பத்திப் பொருள்கள் விநியோகம் செய்வதற்கு பாரவூர்தி அல்லது விற்பனை வான் வாடகை அடிப்படையில் எமது சங்கத்திற்குத் தேவைப்படுகின்றது. எனவே நாள் அடிப்படையில் கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது. (சித்தன்கேணிக் களஞ்சியத்திலிருந்து செயற்பட வேண்டும்)
2. வவுனியாவிலிருந்து அனுராதபுர மாவட்டத்திலுள்ள சங்கங்களுக்கு யுனிலிவர் உற்பத்திப் பொருள்கள் விநியோகம் செய்வதற்கு நாள் அடிப்படையில் பாரவூர்தி தேவைப்படுகின்றது. இதற்கான கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது.
3. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சங்கங்கள், தனியார் ஸ்தாபனங்கள் என்பவற்றுக்குப் பொருள்கள் விநியோகம் செய்வற்கு பாரவூர்தி தேவைப்படுகின்றமையால் மாத அடிப்படையில் கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது.


**குறிப்பு:**
* கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரவூர்திகளுக்கு மட்டும் எரிபொருள் எம்மால் வழங்கப்படும்.

எதிர்வரும் 21.07.2010 இற்கு முன் தலைவர், கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம், பரந்தன் என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கவும்.

**தலைவர்,**
**கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்,**
**பரந்தன்.**

(சி/569075)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
25.07.1923

உதிர்வு
12.07.2006

Late.Rev.Sr.M.Antonina. A.C

நான்கு இருபது ஆண்டுகளுக்கு மேலாய்
நாற்றிசையும் நற்செய்தி நயமுடனே அறிவித்து
நான்கு ஆண்டு முன்னர் நல்லாயன் யேசுபதம்
நாடிச்சென்றாயே நாளுமே கலங்குகின்றோம்.

புலோலி. (100741) குடும்பத்தினர்.

# அடிக்கல் நடும் நிகழ்வு

தென்மராட்சி கிழக்கு, ஜூலை 12

வரணி மகா வித்தியாலயத்துக்கு சுற்றுமதில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வை பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

(201-122)

# 45 ஆம் நாள் நினைவுகளில்



திருமதி **விஜயலட்சுமி ஜெயபாலன்**

மலர்வு 22.06.1956
உதிர்வு 29.05.2010


*பாசமிகு அம்மாவே! பாவி என்னை விட்டு*
*எங்கே சென்றாய்?*
*பாசமுடன் அருகிருக்க பற்றுடனே*
*பாரினிலே எனை வளர்த்தாய்*
*அம்மா, அப்பா, அம்மம்மா என யாவரையும்*
*பார்போற்ற வாழவைக்க பிறதேசம் சென்றேன்*
*போதுமென மகிழ்ந்திருக்க பொன் பொருளாய்*
*அனுப்பி வைத்தேன்*
*பாதகன் உனை அழித்த வேளை*
*யாருமின்றிப் பதறினாயோ?*
*பாவியாம் நாம் உன் பிரிவால்*
*நினைந்துருகி வாடுகின்றோம்.*

மகன்: பிரதீபன்,
கணவர்: ஜெயபாலன்,
அம்மா: சிவக்கொழுந்து.

தல்லையப்புலம்,
கரவெட்டி.

(சி/569033)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்குளி ஆமர்றோட் குறூப் இராணுவ அணிக்கும் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிக்குமான சினேகபூர்வ ஆட்டம் அண்மையில் வரணி 52ஆவது படையணியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: தமிழினியன்)

# கோகுலனின் சிறப்பான பந்து வீச்சால் மத்திய கல்லூரி மகாஜனாவை வென்றது!

யாழ்ப்பாணம்,ஜூலை 12

கோகுலன் துல்லியமாகப் பந்துவீசி ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்ற மகாஜனக் கல்லூரியை இலகுவாக வெற்றி கொண்டது யாழ்.மத்திய கல்லூரி.

இலங்கைத் துடுப்பாட்ட சங்கத்தினால் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 17 வயதுப் பிரிவினர்களுக்கான 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணியினர் 42.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர். மௌசிகன் 29 ஓட்டங்களையும், விஜயநாதன் 27 ஓட்டங்களையும் சஞ்சயன் 32 ஓட்டங்களையும் டிலக்சன் 12 ஓட்டங்களையும் வாகீசன் 27 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர் கோகுலன் 10 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களையும் கிஷந்தன் 8 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கபிலன் ஒரு ஓவர் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

136 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி பெறலாம் என்ற நிலையில் களம் இறங்கிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 27.5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

கபிலன் 44 ஓட்டங்களையும் நிரோஸ் 24 ஓட்டங்களையும் வதுசணன் ஆட்டம் இழக்காமல் 27 ஓட்டங்களையும் சிறிவண்ணன் 12 ஓட்டங்களையும் மத்திய கல்லூரி அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். உதிரிகளாக 27 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்து வீச்சில் மகாஜனக் கல்லூரி அணி சார்பில் மதுஷன், பிரதீஸ், டிலோன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். (எ-23)

## அனலை சதாசிவ ம.விக்கு வெள்ளிப் பதக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை 12

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய மாணவன் தி.கஜேந்திரன் மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டியில் 21 வயதுப் பிரிவினருக்கான ஈட்டி எறிதலில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றார். இவர் தேசிய மட்டப் போட்டிக்கும் தகுதி பெற்றுள்ளார். (6)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூலை 12

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்படும் சிரேஷ்ட மட்ட மெய்வன்மைப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் வீர, வீராங்கனைகள், விண்ணப்பப் படிவங்களைப் பெற்று ஜூலை 16ஆம் திகதிக்கு முன்னர் இல.70/6 கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள யாழ்.மெய்வன்மை சங்க காரியாலயத்தில் அதனை ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-23)

## சதுரங்கப் போட்டியில் வடமராட்சி மகளிர் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை 12

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான (19வயது) சதுரங்கப் போட்டியில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மூன்றாமிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றது. (6-23)

## மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை 12

மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர்களுக்கான தரம் IIற்கான பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சையில் தோற்ற விரும்புவோர் யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்க செயலரிடம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று அதனை ஜூலை மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். (எ-23)




## வடமாகாணப் பாடசாலைகளின் தடகளப் போட்டி; வவுனியா புதுக்குளம் ம.விக்கு 11 பதக்கங்கள்!

யாழ்ப்பாணம்,ஜூலை 12

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம் ஆறு தங்கப்பதக்கம், 5 வெண்கலப்பதக்கம் அடங்கலாக 11 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

பதக்கங்கள் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு

**தங்கப் பதக்கம் வென்றோர்**

*21 வயது பிரிவு*

* எம்.ரகுவரன் 1500, 5000 மீற்றர் ஓட்ட நிகழ்வில் முதலாமிடம்.
* எம்.பால்ராஜ் 400 மீற்றர் ஓட்ட நிகழ்வில் முதலாமிடம்

*19 வயதுப் பிரிவு*

* அமிதிரான் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்ட நிகழ்வு முதலாமிடம்.
* ஞா.கஜந்தன் 200 மீற்றர் ஓட்ட நிகழ்வு முதலாமிடம்.
* புஸ்பாதேவி ஈட்டியெறிதல் நிகழ்வில் முதலாமிடம்

**வெண்கலப்பதக்கம் வென்றோர்**

*21 வயது பிரிவு*

* ஜெனிபர் குண்டு போடுதல் நிகழ்வு மூன்றாமிடம்.
* புஸ்பா தேவி 100 மீற்றர் சட்டவேலி பாய்தல் நிகழ்வு மூன்றாமிடம்.
* ஞா.கஜந்தன் 100 மீற்றர் ஓட்ட நிகழ்வு நீளம்பாய்தல் நிகழ்வு மூன்றாமிடம்.
* 21 வயதுப் பிரிவு ஆண்கள் 4×400 அஞ்சல் ஓட்ட நிகழ்வில் மூன்றாமிடம்.

(6-23)

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உடுவில் பிரதேச செயலகம் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஜூலை 12

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச யெலக அணி மோதிக் கொண்டது.

இதில் உடுவில் பிரதேச செயலக அணி தன்னை எதிர்த்து விளையாடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு சம்பியனாகியது. (எ-23)

## மாகாண கரம் போட்டியில் வடமராட்சி மகளிர் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை 12

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட கரம் போட்டியில் (15வயதுப் பிரிவு) சம்பியனைத் தனதாக்கி தேசிய மட்டப் போட்டிக்கு வட. மத்திய மகளிர் கல்லூரி தகுதி பெற்றுள்ளது. (6-23)



வடமாகாண கல்வித் திணைக்களம், மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் ஞான பொன்ராஜாவிடமிருந்து முறையே முதலாம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி, இரண்டாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மூன்றாமிடத்தைப்பெற்ற அளவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரிகளின் அணித் தலைவிகள் வெற்றிக்கிண்ணங்களை பெறுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க ஐரோப்பிய ஒன்றியத்தின் 'அகம் புலம் தமிழர் வாழ்வியல் சிறப்பு மாநாடு -2010' ஜேர்மனியில்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஐரோப்பிய ஒன்றியம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை ஜேர்மனியில் அகம் புலம் தமிழர் வாழ்வியல் என்ற தலைப்பில் சிறப்பு மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது. இது தொடர்பாக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகிலக் கல்விப் பொறுப்பாளரும் அகம் புலம் வாழ்வியல் மகா நாட்டின் தலைவருமாகிய பேராசிரியர் இ. பால சுந்தரம், உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகமும், ஐரோப்பிய ஒன்றியத் தலைவருமாகிய தமிழ்ப் பண்பாட்டுக் காவலர்துரை. கணேசலிங்கம் ஆகியோர் இம்மாநாடு தொடர்பாக ஊடக அறிக்கை யொன்றினை வெளியிட்டுள்ளனர்.

இந்த அறிக்கையில் வெளியிட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியத்தினால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11ஆந் திகதி சனிக்கிழமை ஜேர்மனியில் RHEINE என்னும் இடத்திலுள்ள 'Elisabethschule-Aula' மண்டபத்தில், 'அகம் புலம் வாழ்வியல் மகாநாடு' முற்பகல் 10 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை நடைபெறவுள்ளது.

உலகளாவிய தமிழர் சமூகத்தை மொழியாலும் பண்பாட்டாலும் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடனும், இலங்கை, இந்திய நாடுகளில் வாழும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடனும், அரசியல் சார்பற்று, இனமத பேதங்களைக் கடந்து, தமிழ்ப் பண்பாட்டாளர் என்ற ஒரே குடையின்கீழ் செயற்படுவதற்கும், தமிழ் மொழியை மறந்து போனவர்களை மொழியுணர்வாளர்களாக மாற்றும்' நேர்த்தியான கொள்கையுடனும், 1974 ஜனவரி 8ஆந் திகதி யாழ்ப்பாணத்தில நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் பல நாட்டு அறிஞர்கள் ஒன்றிணைந்து உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தை ஏற்படுத்தினர்.

இவ்வியக்கம் தென்னாபிரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டு வருவதோடு, உலகத் தமிழ் மக்களை ஒன்றிணைப்பதில் பெரும் வெற்றியும் கண்டுள்ளது. இவ்வியக்கத்தின் கிளைகள் 42 நாடுகளில் அமைக்கப்பட்டுள்ளதோடு, 'யுனெஸ்கோ' விலும் பதிவு செய்யப்பட்டு சிறந்த முறையில் இயங்கி வருகின்றது.

இதுவரை சென்னை, மொறிசியஸ், சேலம், கோலாலம்பூர், சிட்னி, ரொறன்ரோ, தென்னாபிரிக்கா, டெர்பன், பாண்டிச்சேரி என உலகலாவிய ரீதியில் 10 மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

இவ்வியக்கம் உலகளாவிய மகாநாடுகளின் மூலம் தமிழர் கலைகள், பண்பாட்டு ஊக்குவிப்பு, தமிழாண்டு, தமிழ்மொழிக் கல்வி, தமிழர் வரலாற்று ஆவணச் சேகரிப்பு, தூய தமிழ் வழக்கு, தமிழ் செம்மொழி உருவாக்கம், உலகத் தமிழரிடையே ஒற்றுமை பேணல் முதலான விடயங்களில் பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளது:

இந்த வகையில் உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியம் எதிர்வரும் செப்ரெம்பர் 11ஆம் திகதி ஜேர்மனியில் அகம் புலம் வாழ்வியல் சிறப்பு மகாநாட்டினை நடத்த உள்ளது.

அகத்திலும் புலத்திலும் வாழும் தமிழ் மக்களின் அமைதியான வாழ்க்கை, தமிழ் மொழிக் கல்வி, தமிழர் பண்பாட்டுப் பேணல், புனர் வாழ்வு என்பன பற்றி இம் மகா நாட்டில் ஆராயப்படவுள்ளன. இவ் விடயங்களை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லல், சமூக, பொருளாதார, தொழில் நுட்பத்துறை சார்ந்த துறைகளின் மேம்பாட்டுக்காக முனைப்புடன் செயற்படுதல். முதலான விடயங்கள் தொடர்பான ஆய்வரங்கு, கருத்தரங்கு, சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இதில் இடம் பெறவுள்ளன.

மகாநாட்டில் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்ப்பண்பாடு தொடர்பான ஆவணக் கண்காட்சியும் அகத்திலும் புலத்திலும் தமிழர் வாழ்வியல் வரலாறு, மொழி, இலக்கியம் சார்ந்த நூல்கள், இறுவட்டுக்கள், ஒளியிழை நாடாக்கள் நிழற் படங்கள் முதலியன கண்காட்சிக்கு வைக்கப்படும். இக்கண்காட்சியில் பங்களிக்க விரும்புபவர்கள் 31.07.2010 க்கு முன்பு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மகாநாட்டுப் பணிமனை முகவரி:

Conference Cordinator
I.M.T.C. European Union,
Postfach -2129,
48411, Rheine,
Germany.
தொலைபேசி:-
0049597114258
Email: imtc1974@yahoo.com
balasundarame@yahoo.com

-என்றுள்ளது.

## கிளிநொச்சியில் இன்று எச்.என்.பி.வங்கி கிளை திறப்பு விழா

கிளிநொச்சி, ஜூலை 12

ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையொன்று கிளிநொச்சி நகரில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் கருணா நிலையத்தில் இந்தக் கிளை இயங்கவுள்ளதாகவும், வங்கியின் 191 ஆவது கிளை இதுவெனவும் வங்கியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் ஜூலை12

யாழ்.நகர் மாவடி ஸ்ரீஞான வைரவர் கோவில் அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

தினமும் மாலை 7மணியளவில் வசந்தமண்டப பூஜையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 19 தினங்கள் உற்சவம் நடைபெறும். எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய் காலை 9 மணிக்கு தேர்ப் பவனியும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.29ஆம் திகதி சங்காபிஷேகமும் இரவு திரி பூர்வாங்கமும் நடைபெற்று வைரவப்பெருமான் பூந்தண்டிதையில் வீதியுலா வருவார். (ஓ)

* * *

யாழ்ப்பாணம் ஜூலை12

நீர்வேலி தெற்கு முருகையன் ஆலய பாலஸ்தாபன பூசைகள் இன்று காலை 6.30 மணிக்கு இடம்பெறும். (201)

* * *

கிளிநொச்சி, ஜூலை12

கிளிநொச்சி இராமநாதபுரம் மாவடி அம்மன் ஆலயத்தில் கடந்த 6ஆம் திகதி முதல் நித்திய பூஜைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

ஜூலை 5ஆம் திகதி கிரியைகள் இடம்பெற்று சாந்தி நடைபெற்று 6ஆம் திகதி பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று நித்திய பூசைகள் ஆரம்பமாகியுள்ளன.

இராமநாதபுரம் பகுதியில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் இந்த ஆலயத்தில் நித்திய பூசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பெருமளவானோர் ஆலயப்பூஜையில் கலந்து கொள்வதாகக் கூறப்படுகின்றது. (எ-405)

## கண்ணீர் அஞ்சலி



நயினாதீவு ஸ்ரீ கணேச சனசமூக நிலைய விளையாட்டுக்குழு உறுப்பினர்

**பாலசிங்கம் பாலமுரளி**

அவர்கள் 01.07.2010 அன்று லண்டனில் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

நண்பர்கள்
ஸ்ரீ கணேச சனசமூக நிலையம், நயினாதீவு.

(100744)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 ★ 06 ★ 1932



மறைவு 24 ★ 06 ★ 2009

**திருமதி நடராசா தனலட்சுமி**

திதி:- துதியை


அன்பினால் இனிய அமுதூட்டி வளர்த்தெடுத்து
பண்பினால் பெருமைசேர்த்து கல்வியினால்
அறிவூட்டி உழைப்பினால் உயர்வுபெற வைத்து
சந்தோஷத்தில் குறைவின்றி, இப்புவிதனில்
நல்வாழ்வதனை வாழ வைத்த தெய்வமே!
உயிர் உள்ளவரை என்றென்றுமே
உமை நாம் நினைத்திருப்போம்.

கட்டைப்பிராய் லேன்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

என்றும் நினைவுடன்:
திருமதி தர்மலிங்கம் ஜீவா (மகள்).

(100745)

## மரண அறிவித்தல்



**கதிரன் கணபதி**

(சின்னக்கண்டு அப்பா)

நவபுரம், கைதடியைச் சேர்ந்த (சின்னக்கண்டு அப்பா) என அழைக்கப்படும் கதிரன் கணபதி நேற்று (11.07.2010) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னார் வைரவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிரன்-காளியம்மா தம்பதியரின் செல்வ மகனும் இலட்சுமி, கணேசலிங்கம் (லண்டன்), தங்கமணி, இராசமணி, மதிவதனம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாதன், தவமலர் (லண்டன்), சின்னத்தம்பி, சிவலிங்கம் (துரை), வேலாயுதம் (பிரான்ஸ்) ஆகியோரின் பிரியமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான முருகன், சிகப்பி, சடச்சி, சின்னி, கதிரி ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற சபாரத்தினத்தின் அன்பு மைத்துனரும் பவானி (சுவிஸ்), காண்டீபன் (லண்டன்), கஜநிதி, காலஞ்சென்ற கஜேந்தினி, மோகனா (சுவிஸ்), பிரகாஸ் (லண்டன்), கஜேந்திரன் (லண்டன்), பாமா (லண்டன்), சுகிர்தா (லண்டன்), சியாமளா (லண்டன்), தபேந்திரன் (லண்டன்), சுரேந்திரன் (லண்டன்), கணேசமலர் (லண்டன்), ஜனனி (லண்டன்), பவிதாஸ் (ஜேர்மனி), தாட்சாயிணி (பிரான்ஸ்) ஆகியோரின் நேசமிகு பேரனும் அனோஜ், அபிஸ், கவிஞா, நவினியா, பவிசன், பவித்திரா, கஜலினி, றித்திக், சிவேதன், சாயன், கஜீவ், சிவர்சிகா, அஞ்சலி, கஜீவன் ஆகியோரின் பட்சமுள்ள பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.07.2010) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றன. பூதவுடல் கைதடி ஊத்தல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவபுரம்,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/569100)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி நடராசா தனலட்சுமி**

மண்ணில்
07.06.1932

விண்ணில்
24.06.2009

திதி: துதியை

ஓராண்டு சென்றாலும்
இன்னும் எம் நெஞ்சங்களில்
நீங்காது வாழுகின்றீர்
உம் ஆத்மா சாந்தி பெற
இறைவனை நாம்
வேண்டுகின்றோம்.

இருபாலை தெற்கு,
[illegible]ப்பிராய்.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

(100742)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் மீண்டும் கலவரம் தீவிரம் பொலிஸார் தடியடி-துப்பாக்கிச்சூடு

## 16 இராணுவத்தினர் உட்பட 21 பேர் காயம்



ஸ்ரீநகர், ஜூலை 12

காஷ்மீரில் 4 நாள்களுக்குப் பின்னர் உள்ளூர் பண்டிகைக்காக ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டது. ஆனால், மீண்டும் அங்கு கலவரம் வெடித்ததால் பொலிஸார் தடியடி மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தி ஆர்ப்பாட்டக் காரர்களைக் கலைத்தனர்.

இதன்போது 16 இராணுவத்தினர் உட்பட 21 பேர் காயமடைந்தனர்.

இதற்கிடையே, இன்று அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு முதல்வர் உமர் அப்துல்லா ஏற்பாடு செய்துள்ளார்.

காஷ்மீரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மத்திய ரிசேர்வ் பொலிஸ் உள்ளிட்ட துணை இராணுவப் படையினருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே சமீபத்தில் கடும் மோதல் ஏற்பட்டது. அப்போது, நடந்த துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் உயிரிழந்தனர். இதனால், கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஸ்ரீநகர் உட்பட காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதி முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த 4 நாள்களாக ஊரடங்கு உத்தரவு நீடித்த நிலையில், முதல்வர் உமர் அப்துல்லா தலைமையில் அவசர ஆலோசனைக் கூட்டம் கடந்த வெள்ளியன்று இரவு நடைபெற்றது. அப்போது, காஷ்மீரில் கொண்டாடப்படும் 'மீரஜ்-இ-ஆலம்' பண்டிகைக்காக ஊரடங்கு உத்தரவைத் தளர்த்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டது.

அங்குள்ள ஹஸ்ரத்பால் மசூதிக்குச் சென்று மக்கள் தொழுகை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதையடுத்து கடந்த வெள்ளியன்று நள்ளிரவில் இருந்தே மக்கள் மசூதிக்குச் சென்று வந்தனர். அந்த மசூதியில் நடந்த முதல்கட்ட தொழுகையில் 4 ஆயிரம் பேர் பங்கேற்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், குமார்வாரி, நாஸ் சினிமா, நவ்கத்தா, மைசூமா போன்ற இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளில் கூடினர். அவர்களை, பாதுகாப்புப் படையினர் விரட்டி அடித்தனர். அப்போது 20 பேர் கைது செய்யப்பட்டனர். இதுபோல, காகபோரா, புல்வமா, அனந்தநாக் போன்ற மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும் மோதல் ஏற்பட்டது. அதில் 16 துணை இராணுவத்தினரும் பொதுமக்களில் 5 பேரும் காயமடைந்தனர்.

வழிபாட்டுக்காக அனுமதிக்கப்பட்டு இருந்து ஹஸ்ரத்பால் மசூதியை நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலமாகச் சென்றனர். ஜாமியா மசூதியில் இருந்து ஹூரியத் மாநாட்டு கட்சியின் தலைவர் மிர்வேஸ் மௌலவி தலைமையில் சென்ற அந்த ஊர்வலத்தில் அரசுக்கு எதிராகவும் காஷ்மீர் விடுதலையை ஆதரித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலியானார் எனத் தகவல் வெளியானது. அந்தத் தகவலை அரசு தரப்பினர் மறுத்த போதிலும், சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடந்தன.

இதற்கிடையே, காஷ்மீர் வன்முறை குறித்து விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு, முதல்வர் உமர் அப்துல்லா ஏற்பாடு செய்துள்ளார். இன்று (திங்கட்கிழமை) நடைபெறும் அந்தக் கூட்டத்துக்கு, 12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

காஷ்மீரில் அமைதியை நிலை நாட்டுவதற்காக அடுத்த வாரம் வரை இராணுவம் இருக்கும் என முதல்வர் உமர்அப்துல்லா தெரிவித்தார். முன்னதாக, பல இடங்களில் இராணுவம் சார்பாக கொடி அணிவகுப்பு நடத்தப்பட்டது.

# சென்னையில் தங்கம் பறிமுதல் இலங்கையர்கள் இருவர் கைது!

தாம்பரம், ஜூலை 12

இலங்கையில் இருந்து சென்னைக்குக் கடத்திவரப்பட்ட ரூபா 28 லட்சம் மதிப்புள்ள தங்க பிஸ்கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் 2 இலங்கை இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கொழும்பில் இருந்து சுற்றுலா விசாவில் விமானம் மூலம் வந்திருந்த 2 இளைஞர்கள் 5 தங்க பிஸ்கட்டுக்களை வயிற்றுக்குள் வைத்துக் கடத்தி வந்தமை விமான நிலைய அதிகாரிகளின் சோதனையில் தெரியவந்தது.

உடனடியாக விமான நிலைய மருத்துவக் குழுவினர் விரைந்து வந்து அவர்களிடமிருந்த ஒன்றரைக் கிலோ எடையுள்ள 10 தங்க பிஸ்கட்டுகளை ஆசனவாயில் இருந்து எடுத்தனர். இவற்றின் மொத்த மதிப்பு ரூபா 28 லட்சமாகும்.

# அ.தி.மு.க. ஆட்சியில் மீனவர் தாக்கப்பட்டபோது ஜெயலலிதா இலங்கைக்குப் படையெடுத்தாரா?

## முதல்வர் கருணாநிதி கேள்வி

சென்னை, ஜூலை 12

அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கொல்லப்பட்டபோது ஜெயலலிதா என்ன செய்தார் - என்று முதல்வர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் கடிதங்களை எழுதியதுபோல, மீனவர்கள் பிரச்சினையிலும் கடிதம் எழுதியும், கண்டனம் தெரிவித்தும் முதல்வர் கருணாநிதி காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளித்து கேள்வி - பதில் வடிவில் கருணாநிதி சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர் தாக்கப்பட்டு இறந்த செய்தி தெரிந்ததும், உடனடியாகக் கண்டன அறிக்கை விடுத்து, இறந்தவரின் குடும்பத்துக்கு அரசின் சார்பில் நிவாரண நிதியும் வழங்க உத்தரவிட்டேன். இதன்பின், பிரதமர், மத்திய அமைச்சர்களுக்கு கடிதம் எழுதினேன். இந்தக் கடிதத்துக்கு மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மறுநாளே பதில் எழுதினார்.

ஆனால், இந்தப் பிரச்சினை குறித்து அறிக்கை வெளியிட்ட ஜெயலலிதா, மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை தி.மு.க. விலக்கிக் கொள்ள வேண்டும் எனக் கூறியிருக்கிறார். மேலும், இந்தப் பிரச்சினைக்காக மத்திய அரசுக்கு நான் வழக்கம் போல் கடிதம் எழுதியுள்ளேன் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்ட போது, ஜெயலலிதா என்ன செய்தார்? அவரும் மத்திய அரசுக்கு கடிதம் எழுதிக் கொண்டுதானே இருந்தார்? மாறாக இலங்கைக்குப் படையெடுத்துச் செல்கிறேன் என்று புறப்பட்டாரா?

ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் எனக் கூறி கட்சியினரையும், மக்களையும் ஏமாற்றுவதில் ஜெயலலிதா நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிபுணர்கள் குழுவை மறுபரிசீலிக்குமாறு ஐ.நாவிடம் இந்தியா வலியுறுத்துகிறதாம்!

## புதிய தகவல் தருகிறார் விஜயகாந்த்

சென்னை, ஜூலை 12

இலங்கை தொடர்பாக ஐ.நா. மன்றம் அமைத்துள்ள நிபுணர் குழுவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்திய அரசு ஐ.நா.வை வற்புறுத்துவதாக அறிகிறேன்.

- இவ்வாறு தே.மு.தி.கவின் தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார்.

அத்துடன் தமிழக மீனவர்கள் பிரச்சினையில் மத்திய அரசின் போக்கைக் கண்டித்து சென்னையில் நாளை 13 ஆம் திகதி தே.மு.தி.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இன்று இந்திய-இலங்கை உறவு என்றுமில்லாத அளவு மேம்பட்டு உள்ளது என்று இரு தரப்பாலும் சொல்லப்படுகிறது. குறிப்பாக, ஐ.நா. மனித உரிமை கமிஷன் முன்பு இரு தடவைகள் இலங்கை அரசு, தமிழினப் படுகொலை சம்பந்தமாக குற்றவாளியாக நிறுத்தப்பட்டபொழுது, இந்திய அரசுதான் தலையிட்டுக் காப்பாற்றியது. சர்வதேச நிதி உதவி நிறுவனம் (ஐ.எம்.எப்.) இலங்கை அரசுக்கு பண உதவி செய்ய மறுத்தபொழுது இந்திய அரசின் உத்தரவாதத்தின் பேரில்தான் இலங்கைக்கு நிதி உதவி கிடைத்தது.

இப்பொழுதும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போர்க்குற்றவாளி என்று குற்றம்சாட்டப்பட்ட நிலையில் ஐ.நா. செயலாளர் அமைத்துள்ள நிபுணர் குழுவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்திய அரசு ஐ.நா.வை வற்புறுத்துவதாக அறிகிறேன். இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் இந்திய அரசு பெருமளவுக்கு உதவி புரிந்து வருகிறது.

மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய பேட்டியொன்றில், இந்தியா உறவு நாடு என்றும், இதர நாடுகள் நட்பு நாடுகள் என்றும் கூறினார். மேலும் உறவு என்றும் நிலைக்கக் கூடியது என்றும், ஆனால் நட்பு வந்துபோகக் கூடியது என்றும் இந்தியாவோடு கொண்டுள்ள உறவைப் பற்றிக் கூறியுள்ளார்.

எனவே, இலங்கை சம்பந்தமான இந்திய அரசின் இத்தகைய பிற்போக்குத் தனத்தைக் கண்டித்து தே.மு.தி.க. சார்பில் 13 ஆம் திகதி காலை 10 மணியளவில் சென்னை சைதாப்பேட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியச் செய்திகள்

# நடுக்கடலில் மீனவர் அடித்துக்கொலை: இதுவே கடைசியாக இருக்க வேண்டும்

## இலங்கைத் தூதரிடம் தி.மு.க. மீனவரணி எச்சரிக்கை மனு



சென்னை, ஜூலை 12

நாகை மீனவர் செல்லப்பனை அடித்துப் படுகொலை செய்த இலங்கைக் கடற்படையினரைக் கண்டித்து தி.மு.க. மீனவர் அணி சார்பில் சென்னையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடந்தது. பின்னர் மீனவர்கள் மீதான தாக்குதல் சம்பவம் இதுவே கடைசியாக இருக்கவேண்டும் என்று இலங்கைத் தூதரிடம் அவர்கள் மனு கொடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத் தின்போது இலங்கை அரசைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டம் முடிந்ததும் சென்னை யில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரி யிடம் தி.மு.க. மீனவர் அணியின் மாநிலச் செயலாளர் மனு ஒன்றைக் கொடுத்தார். அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப் பவை வருமாறு -

கடந்த 7 ஆம் திகதி நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளம் கிராம மீனவர் பகுதியைச் சேர்ந்த செல்லப்பன் உட்பட 4 பேர் கோடியக்கரைக்கு தென்கிழக்கே 20 கடல் மைல் தொலைவில் மீன் பிடித்து கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களை பயங்கரமாகத் தாக்கியும், அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன் வகைகளையும், வலைகளை [illegible] எறிந்தும், அந்தத் தாக்குதலில் செல்லப்பன் என்ற மீனவரைப் படுகொலை செய்தும், மற்ற மீனவர்களை நிர்வாணப்படுத்தி சித்திரவதை செய்தும் உள்ளனர்.

இலங்கை மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடிக்கும்போது எந்தவித துன்புறுத்தல் இல்லாமல் மனிதாபிமானத்தோடு மனித நேயத்தோடு முறையான விசாரணை நடத்தி விடுவிப்பதைப்போல இந்திய அரசின் நடைமுறைகளை இலங்கை அரசும் பின்பற்றவேண்டும். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழக மீனவர்களை துன்புறுத்தவோ அவர்களுக்கு உயிரிழப்பு ஏற்படுத்தவோ மாட்டோம் என்று உறுதி வழங்கினார். ஆனால் அதற்கு மாறாக இலங்கைக் கடற்படையினர் வன்செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமையைக் களைய இலங்கை அரசு முன்வரவேண்டும். இலங்கை கடற்படையினரின் செயலை தி.மு.க. மீனவர் அணி கடுமையாகக் கண்டிக்கிறது என்பதை இலங்கை தூதரகம் வாயிலாக இலங்கை அரசுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

- இப்படி அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் தலிபான்களின் மறைவிடங்களை குறிவைத்து விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்

## 23 பேர் உயிரிழப்பு; 20 பேர் காயம்

பெஷாவர், ஜூலை 12

பாகிஸ்தானில் ஒரகாஸி பகுதியில் தலிபான்களின் மறைவிடங்களை குறிவைத்து இராணுவம் விமானங்கள் மூலம் குண்டு வீசி தாக்குதல் நடத்தியது. இதில் 23 தலி பான்கள் கொல்லப்பட்டனர். 20 பேர் காய மடைந்தனர்.

ஆப்கானிஸ்தானின் எல்லையை ஒட்டிய ஒரகாஸி பகுதியில் பழங்குடி மக்கள் அதிகம் வசிக்கின்றனர். இப்பகுதியில் மக்களோடு மக்களாக தலிபான்களும் வசிக்கின்றனர். இதனால் இப்பகுதியில் தலிபான்களை மட்டும் குறிவைத்து தாக்குதல் நடத்துவது கடினமாக உள்ளது.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை தலிபான்களின் மறைவிடங்களை சரியாக அடையாளம் கண்டு இராணுவம் கவனமாக தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் இரு ஜெட் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன. குண்டுகளுடன் சென்ற விமானங்கள் தலிபான்களின் மறைவிடங்களை குறிவைத்து குண்டு களை பொழிந்தன.

இவற்றில் தலிபான்களின் முக்கிய மறைவிடங்கள் தகர்ந்து தரைமட்டமாகின. இத்தாக்குதலில் தலிபான்களின் 7 மறைவிடங்கள் தகர்ந்துவிட்டன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் குண்டு வீச்சில் தலிபான்கள் 23 பேர் கொல்லப்பட்டடுள்ளனர். ஆனால், இதைவிட கூடுதலான பேர் கொல்லப்பட்டிருப்பர் என்று பாதுகாப்புப் படை வட்டாரம் தெரிவிக்கின்றது.

# பையில் 70 குழந்தைகளின் சடலங்களை வைத்திருந்த நபர் நைஜீரியாவில் கைது

அபூஜா (நைஜீரியா), ஜூலை 12

70 குழந்தைகளின் சடலங்களை பையில் வைத்திருந்த ஒரு நபரை நைஜீரியாவின் வர்த்தக தலைநகரமான லாகோசில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வைத்தியசாலையின் சவக்கிடங்கில் போதிய இடமில்லாததால் சடலங்களை வேறொரு இடுகாட்டில் புதைப்பதற்குத் தான் எடுத்துச் சென்றார் என கைதானவர் தெரிவித்துள்ளார். பொலிஸார் இதனை விசாரித்து வருகின்றனர்.

லாகோசின் வைத்தியசாலையின் சவக்கிடங்குகள் சிறிய இடமாக உள்ளன. அவற்றிலிருந்து வரும் துர்நாற்றம் மக்களை பெரிதும் துன்புறுத்தியமை நீண்டகால பிரச்னையாகவே இருந்து வந்துள்ளது.

# 2 கோடி ரஷ்யரின் மரணத்துக்குக் காரணம் ஸ்டாலினின் தவறான தலைமைத்துவமே!

## கருத்துக் கணிப்பீட்டில் தகவல்

மாஸ்கோ, ஜூலை 12

''இரண்டாம் உலகப் போரில் 2 கோடிக்கும் அதிகமான ரஷ்யர்கள் உயிரிழந்தமைக்குக் காரணம், ஜோசப் ஸ்டாலினின் தவறான தலைமையும், வழிகாட்டலும் தான்'' என பெரும்பாலான ரஷ்ய மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இரண்டாம் உலகப் போரின்போது, சோவியத் யூனியனைச் சேர்ந்த ஏராளமான மக்களையும், சிவப்பு இராணுவம் என்று அழைக்கப்பட்ட சோவியத் யூனியன் இராணுவத்தையும் எதிரி படைகள் கொன்று குவித்தன.

இதில் 2 கோடிக்கும் அதிகமான ரஷ்யர்கள் பலியாயினர். இச்சம்பவத்தை ரஷ்ய மக்களால் இன்றும் மறக்க முடியவில்லை. இதுகுறித்து அவ்வப்போது ரஷ்ய மக்களிடையே ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

சமீபத்தில் லெவாடா என்ற நிறுவனம் இதுகுறித்து ரஷ்ய மக்களிடம் கருத்துகளை கேட்டு, ஆய்வு நடத்தியது. அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

''இரண்டாம் உலகப் போரின்போது ரஷ்யாவுக்குத் தலைமை தாங்கிய ஜோசப் ஸ்டாலின், திறமையாகச் செயற்படவில்லை. அவருடைய தவறான தலைமையும், வழிகாட்டலும்தான், 2 கோடி பேர் பலியானதற்கு முக்கிய காரணம்'' என 49 சதவீத மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்திலிருந்து மூத்த அதிகாரிகளை வெளியேற்றியமை, எதிரிகளை எதிர்கொள்வதற்கு சரியான திட்டங்களை வகுக்காதமை ஆகியவை ஸ்டாலின் செய்த மிகப் பெரிய தவறுகள் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இருந்தாலும், இரண்டாம் உலகப் போர் வெற்றிக்கு, ஸ்டாலினின் தலைமை மிகவும் முக்கிய பங்கு வகித்துள்ளது என 8 சதவீத ரஷ்யர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தற்கொலைப் படைத் தாக்குதல்: ஈராக்கில் 5 பேர் உயிரிழப்பு!

பக்தாத், ஜூலை 12

ஈராக் தலைநகர் பக்தாத்தில் வெள்ளிக்கிழமை தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் மூவர் பாதுகாப்பு படை வீரர்கள்; இருவர் பொதுமக்கள்.

இந்தத் தாக்குதலில் 18 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காஸாலியா என்ற இடத்தில் பாதுகாப்புப் படையின் சோதனைச் சாவடியை குறிவைத்து காலை 7 மணிக்கு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை. ஆனால், சன்னி முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதால் சன்னி முஸ்லிம் பிரிவிக்கு எதிரான தீவிரவாதிகளே இச்செயலில் ஈடுபட்டிருப்பார்கள் என்றும் பாதுகாப்புப் படையினர் கருதுகின்றனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து காஸாலியா பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பெனாஸிர் படுகொலைச் சம்பவத்தை மறுவிசாரணை செய்ய முடியாது

## ஐ.நா. திட்டவட்டம்

நியூயோர்க், ஜூலை 12

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ படுகொலைச் சம்பவம் குறித்து மறுவிசாரணை செய்ய முடியாது என்று ஐ.நா. திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.




பெனாஸிர் படுகொலைச் சம்பவத்தை விசாரித்த ஐ.நா. ஆணைக்குழு, கடந்த ஏப்ரலில் அதன் அறிக்கையை சமர்ப்பித்தது. அதில் முஷாரப் அரசும், பாகிஸ் தான் பாதுகாப்பு முகவர்களும் அலட்சிய மாக நடந்துகொண்டதால்தான் பெனாஸிர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று சுட்டிக்காட்டியிருந்தது.

ஆனால், பாதுகாப்பு முகவர்களின் அலட்சியப்போக்கால்தான் பெனாஸிர் கொல்லப்பட்டார் என்ற ஐ.நா. ஆணைக்குழுவின் குற்றச்சாட்டுக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா முகமது குரேஷி மறுப்புத் தெரிவித்தார்.

பெனாஸிர் கொலைச் சம்பவத்தை மறுவிசாரணை செய்ய வலியுறுத்தி ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூனுக்கும் கடிதம் எழுதினார். இந் நிலையில், குரேஷியின் கடிதத்துக்கு ஐ.நா. பதில் அளித்துள்ளது.

அதில், பெனாஸிர் பூட்டோ கொலைச் சம்பவம் குறித்து மறுவிசாரணை செய்ய இயலாது. அது முடிந்து போன செயல் என்று ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதியாக அஷிப் அலி சர்தாரி பொறுப்பேற்றதும் பெனாஸிர் படுகொலைச் சம்பவத்தை ஐ.நா. விசாரிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

சர்தாரியின் இந்தக் கோரிக்கையை ஏற்ற ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன், ஐ.நா.வுக்கான சிலி நாட்டின் முன்னாள் தூதர் ஹெரால்டோ தலைமையில் மூன்று பேர் அடங்கிய தனி ஆணைக் குழுவை அமைத்தார்.

2009 இல் அமைக்கப்பட்ட அந்த ஆணைக் குழு பாகிஸ்தானுக்கு சில தடவை சென்று பெனாஸிர் கொலை செய்யப் பட்ட இடத்தை ஆய்வு செய்து தடயத்தைத் திரட்டியது. விரிவான விசாரணை நடத்தி அறிக்கையையும் தயாரித்து சமீபத் [illegible]


உ

## அருள்மிகு கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் கோயில்

### ஸ்ரீ கந்தையாச் சுவாமியார் (குடைச்சாமியார் சமாதி ஆலயமும்)

### புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்ட பட்ஷ மகா கும்பாபிஷேக விழா-15.07.2010

நிகழும் விகிர்தி வருஷம் ஆனிமாதம் 31ஆம் நாள் வியாழக்கிழமை (15.07.2010) மகம் நட்சத்திரமும் சித்தயோகமும், சதுர்த்தி திதியும், சிங்க லக்கினமும் கூடிய காலை 8 மணி 30 நிமிடம் முதல் 10 மணிவரையுள்ள மங்கள சுப வேளையில் புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்ட மகா கும்பா பிஷேகம் நடைபெறுவதற்கு அற்புத நர்த்தன விநாயகர் பெருமானது திரு வருள் கூடியுள்ளது.

ஆலயத் தலைவரும், தரும பரிபாலன சபையும்,
கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம்,
கோண்டாவில்.


# மரண அறிவித்தல்கள்

## பிலிப் சூசைப்பிள்ளை



[இளைப்பாறிய ஆசிரியர் - சென். யோசப் கல்லூரி அனுராதபுரம், யா/ புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்]

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் றக்கா வீதியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான பிலிப் சூசைப்பிள்ளை (துரைசிங்கம் ஆசிரியர்) 08.07.2010 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் திருமதி மாகிறேற் சூசைப்பிள்ளையின் (முன்னாள் ஆசிரியை-ஜோன் பொஸ்கோ மகாவித்தி யாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பிலிப் - ஆனாள் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்வர்களான அருள் - மரியம்மா தம்பதியரின் மருமகனும் செப மாலை (இராசாத்தியம்மா), காலஞ்சென்ற அந்தோனிப் பிள்ளை (ஐயா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம் (தம்பிராசா), வன்னமணி, டெய்சி மற்றும் பிலோமினா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிலிப் கலிஸ்ரஸ் (நிலாகரன்-பிரான்ஸ்), யூட்கமிலஸ் (நித்திலன்-பிரான்ஸ்), டியோ கிளேற்றஸ் (நிதீஸ்வரன்-பிரான்ஸ்), லொய்ஸ் கனிஷியா (கனடா), ஈனஸ் கிருஷாந்தா (பிரான்ஸ்), டொறிஸ் கமிலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யுடிந்தா, லுசிந்தா, யூட், கிளைட், தஜீந்தினி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ஐடா மாறி (பிரான்ஸ்), மரின் பெனிற்றா (பிரான்ஸ்), ஜெயசீலி (பிரான்ஸ்), கொட்வின் சாந்தன் (கனடா), விவேகரமணன் (பிரான்ஸ்), ஜோ மதனராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிளரிஷா, கஸ்ரோன், ஃபுளொரியன், ஏஞ்சலின், பெனோவா, கமிலின், ஜெரோம், டிரோன், டியோலின், மிஷல், ஏற்றியன், ஜெரமி, ஹர்ஷன், நகிர்ஷன், கிறிஸ்ரன், ஃபேபியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Ogdon Funeral home, (4164 Sheppard Avenue East Scarborough, ON M1S 1T3) CANADAவில் 19.07.2010 திங்கட்கிழமை அஞ்சலிக் காக வைக்கப்பட்டு 20.07.2010 செவ்வாய்க் கிழமை நல்லடக்கம் செய்யப்படும்.

இவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 20.07.2010 செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை அனைவரும்ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புகளுக்கு : டொறிஸ் கமிலா - 001-416-2979812, 001-416-7250506
லொய்ஸ் கனிஷியா - 001-416-7553889

தகவல் : தர்மினி (பேறாமகள்)

(100507)

## சத்தியவான் மரியதாஸ் மரியாம்பிள்ளை



யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், இல.01, 2ஆம் குறுக்குத்தெரு, குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியவான் மரியதாஸ் மரியாம்பிள்ளை நேற்று (11.07.2010) ஞாயிற்றுக் கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - இராசாத்தி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சேவியர் - மரியமுத்துவின் அன்பு மருமகனும் அந்தோனிக்கம்மாவின் அன்புக் கணவரும் குயின்வேஜின் (ராணி-கொழும்பு சென் ஜேம்ஸ் முன்னாள் ஆசிரியர்), சத்தியவான் ரமேஷ் (கட்சன் - லண்டன்), காலஞ் சென்றவர்களான டெகாமிற் அமல்ராஜ் (நிக்ஷன்), டொனால்ட் றிகர்ஷன் (நெல்சன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.01,
2ஆம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.

(100508)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே, இந்திய நடிகை அசின் ஆகியோர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஜனாதிபதியின் பாரியாரை மகப்பேற்று நிபுணர் ஜி.பவானி திலகமிட்டு வரவேற்பதையும் வைத்தியசாலை அதிகாரிகள் அவருடன் உரையாடுவதையும் குழுவினர் நோயாளிகளை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: உமா, தமிழினியன்)

# வீரவன்ஸவின் உடல் நிலை தேறுகிறது

கொழும்பு, ஜூலை 12

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் உடல் நிலை படிப்படியாகத் தேறி வருகிறது எனவும் தொடர்ந்து அவருக்கு சேலைன் ஏற்றப்பட்டு வருகிறது எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.முஸம்மில் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவைக் கலைக்கும்வரை அமைச்சர் விமல் வீரவன்ஸ சாகும் வரையான உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாகத் தெரிவித்து கடந்த வியாழக்கிழமை 8ஆம் திகதி கொழும்பு ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னால் அமைக் கப்பட்டிருந்த மேடையில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தார்.

அவரது உடல்நிலை உண்ணாவிரதம் மேற்கொண்டு 24 மணித்தியாலங்களுக்குப் பின்னர் மோசமடையத் தொடங்கியது. இதே வேளை, வெள்ளிக்கிழமை மாலை விமல் வீரவன்ஸவின் மனைவி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். விமல் வீரவன்ஸ உண்ணா விரதத்தை ஆரம்பித்தது முதல் தமது புதல்வியும் உணவு எதையும் உட்கொள்ள மறுப்புத் தெரிவிக்கிறார் என்று அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இதையடுத்து சனிக்கிழமை மாலை 4 மணியளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உண்ணாவிரத மேடைக்குச் சென்றார். அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு ஜனாதிபதி தனது கையால் நீரைக் கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்துவைத்தார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ தனது கோரிக்கை நிறைவேறாமலேயே உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

உடனடியாக அம்புலன்ஸ் மூலம் இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு அங்கு ஆரம்ப சிகிச்சை வழங்கப்பட்டது. இப்போது அவரது உடல் நிலை தேறி வருகிறது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஒ-சி)

## விமலின் தாயார் காலமானார்

கொழும்பு, ஜூலை 12

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தாயார் திருமதி எஸ்.என். வீரவன்ஸ நேற்று முன்தினம் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் காலமானார்.

85 வயதான அவர் அண்மைக்காலமாக நோயால் பீடிக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை விமல் வீரவன்ஸ சிகிச்சை பெற்று வரும் இராணுவ வைத்தியசாலைக்குச் சென்று துக்கம் விசாரித்து ஆறுதல் கூறினார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (ஒ-சி)

# ஜனாதிபதியின் பாரியாருடன் நடிகை அசின் வவுனியா விஜயம்

இலங்கை விஜயம் காரணமாக தென்னிந்தியாவில் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் பிரபல நடிகை அசின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவுடன் நேற்றுக்காலை வவுனியா சென்றார்.

கம்பஹா மாவட்ட ஐ.ம.சு. கூட்டமைப்பு எம்.பி. டாக்டர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயும் இவர்களுடன் வவுனியா சென்றுள்ளார்.

வவுனியாவில் நடிகை அசின் உட்பட்ட குழுவினர் தமிழ் கலாசார முறைப்படி வரவேற்கப்பட்டனர். பின்னர் இக்குழுவினர் வவுனியா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவுக்குச் சென்று அங்குள்ள குறைகளைக் கேட்டறிந்தனர்.

நடிகை அசின் வவுனியா வைத்தியசாலைக்கு விஜயம் செய்துள்ளார் என்ற செய்தி பரவியதும் ரசிகர்கள் வைத்தியசாலைக்குத் திரண்டு வந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. (ஒ-சி)

# தமிழக மீனவர் மீது நேற்றும் இலங்கைப் படை தாக்குதல்

தமிழக மீனவர்கள் மீது நேற்றைய தினமும் இலங்கைக் கடற்படையினர் தாக்குதல்களை நடத்தியுள்ளனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று கச்சத்தீவுக்கு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சுமார் 200 வரையிலான தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இதன் காரணமாக 50 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து தமிழக மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து தற்போது தமிழகத்தில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், மீண்டும் நேற்றைய தினம் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அரசியல் ரீதியாக சர்ச்சையை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் இனிமேல் தாக்குதல் மேற்கொள்வார்களாயின் ஒரு சிங்களவர் கூட தமிழ்நாட்டில் இருக்க அனுமதிக்கமாட்டோம் என நாம் தமிழர் இயக்கம் கூறியிருந்தது.(ஒ-சி)

# குடும்பநல மருத்துவ மாதுவின் மரணம்; உரிய விசாரணை நடத்த வேண்டும்

## விஜயகலா மகேஸ்வரன் எம்.பி கோரிக்கை

பருத்தித்துறை, ஜூலை12

வேலணை மத்திய மருந்தகத்தில் குடும்பநல மருத்துவமாதுவாக கடமையாற்றிய கைதடி தெற்கைச் சேர்ந்த தர்ஷிகா சரவணை (வயது-27) மர்மமான முறையில் மரணம் அடைந்துள்ளமை குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வேலணை மத்திய மருந்தகத்தில் குடும்பநல மருத்துவ உத்தியோகத்தராக கடமையாற்றிய இந்த இளம் பெண் அங்கு பணியாற்றிய வைத்தியரான பிரியந்த செனவிரட்ண என்பவரால் துன்புறுத்தப்பட்டு வந்ததாகவும் சனிக்கிழமை காலை இவரது சடலம் வைத்தியசாலையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவரது மரணம் தொடர்பாக பிரேதப் பரிசோதனை நடத்திய சட்ட வைத்திய அதிகாரி இந்த மரணத்தில் தற்கொலைக்கான சான்றுகள் காணப்படவில்லையென்று தெரிவித்துள்ளார். எனவே இது குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு சம்பவத்துடன் குறித்த மருத்துவர் தொடர்புபட்டிருந்தால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய செயற்பாடுகள் கடமைபுரியும் பெண்களை அச்சுறுத்துவதாகவே அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக தீவகத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. எனவே இவற்றை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் இது குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தி குற்றவாளிக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் இந்தச் சம்பவமானது வேலணைப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளமையினால் இது குறித்து பொலிஸாரும் நீதித்துறையும் தமது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும் பெண்கள் பாதுகாப்பாக கடமை புரிவதற்கு உரிய சூழல் குடாநாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் என்றார். (ஒ)

## குடும்பநல மாதுமரணம் துக்கதினம் அனுஷ்டிப்பு

வேலணை வைத்தியசாலையில் பதில் கடமையில் இருந்த போது மரணமான குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் செல்வி. சரவணை தர்சிகாவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்று திங்கட்கிழமை துக்கதினம் அனுஷ்டிக்குமாறு அரசாங்க குடும்ப நல உத்தியோகத்தர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

குடும்பநல உத்தியோகத்தர்கள் அனைவரையும் கறுப்புப்பட்டி அணிந்து கடமையில் ஈடுபடுமாறும் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-6)

## அமிர், யோகேஸின் நினைவுதினம் நாளை

யாழ்ப்பாணம் ,ஜூலை12

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம், முன்னாள் யாழ். மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் 21ஆவது ஆண்டு நினைவுதினம் நாளை செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணிக்கு அக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தவுள்ளனர். (ஒ-6)

## ஆஸ்திரேலியா எச்சரிக்கை!

அவுஸ்திரேலியாவினுள் சட்டவிரோதமான முறையில் குடியேறுவதற்கு முயற்சி செய்யும் இலங்கையர்கள் அவர்களது தாய் நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவார்கள். இவ்வாறு கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கை யில் அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமரான ஜூலியா கிலாட் அண்மையில் சட்ட விரோதமாக இலங்கைக் குடியேறிகளுக்கு விடுத்த எச்சரிக்கை பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.


# திருமண வாழ்த்து

நீர்வேலி
த.பரராசசிங்கம் தம்பதிகளின்
புதல்வன்
தர்மசங்கரன்
அவர்கள்

அராலி தெற்கு
க.இரத்தினம் தம்பதிகளின்
புதல்வி
வாலாம்பிகை
அவர்களை

இன்று (12.07.2010) திங்கட்கிழமை சுதுமலை
ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய திருமண
மண்டபத்தில் கரம்பற்றி மங்கல நாண்
சூட்டும் வேளையில்
இல்லறத்தின் நல்லறம் பேணி சொல்லறம்
யாவும் போற்றி சுடர்விடும் ஜோதியாய்,
அன்றில் பறவையாய்
வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

மிதிலா - வெளியீட்டகம்,
கஜமுகா காகிதச்சோலை.

(100809)



# தாயின் ஓராண்டு நினைவலைகளுள் தனயனவன் தம்பியின் மூவாண்டு நினைவுகளும்




அமரர்
முத்தம்மா தங்கவேலு
(திதி: பிரதமை)




அமரர்
தங்கவேலு சயந்தன்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஆண்டு வந்து கழிந்ததனால் - காலம்
நீண்டுகொண்டு சென்றிடினும் தாயே
மாண்டு போகவில்லையம்மா! எம்மில்
மீண்டு நிற்கும் உங்கள் எண்ணம்.

காலம் செய்த கோலம் அதுவாய் தாயே
ஞாலத்தில் நீங்கள் காட்சிக்கில்லை - நீயிருவீர்
கோலமிட்ட இல்லமிங்கு கோலம் மாறிப் போய்க்கிடக்க
வாலை மகன் சயந்தனோடு வருவேன் என்று போனீர்களோ!

அந்தி பகல் அருகிருந்து அரு மக்களாய் வளர்த்த தாயே!
வந்த நோய்க்காய் வந்தனை செய்து வருந்தி நொந் திளைத்தாயே
இந்தப் பிறவி போனதம்மா இன்னும் பிறந்தால் நீயே அம்மா!
உந்தன் மடியில் மறுபடி தவழும் மற்ற நாளினி எப்போதம்மா!

இருளது வந்து தினம் நாளதைக் கௌவுது - எம்மோடு
இருப்பவர் இழப்பினால் இதயங்கள் ஏங்குது
விருப்புடனா தாயே நாம் விடையது சொல்வோம் - என்றும்
விருப்பத்தோடு நம்மை நினைப்பினில் கொள்வோம்.

ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!

சர்வோதய வீதி,
நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
தொ.பே: 0213216759

நெஞ்சங்களில்
நிலைக்க வைத்து
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. அதிகாரி ஜோன் ஹோம்ஸின் இடத்திற்கு பெண் ஒருவர் நியமனம்

கொழும்பு, ஜூலை 12

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் பிரதிச் செயலாளர் நாயகமாகப் பணியாற்றிய ஜோன் ஹோம்ஸின் இடத்துக்கு புதிதாக பெண்மணி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

ஆஸ்திரேலியாவுக்கான பிரிட்டிஷ் தூதராகக் கடமையாற்றும் திருமதி.வெலேரி அமோஸ் என்பவரே குறித்த பதவிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என ஹோம்ஸின் இணைப் பேச்சாளரான பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

ஜோன் ஹோம்ஸ் இதுவரை காலமும் ஆற்றிய பணிகளுக்காக அவருக்கு நன்றி தெரிவித்துள்ள பான் கீ- மூன், புதிதாக நியமனம் பெறவுள்ள பெண்மணி அந்தப் பணியைத் திறம்பட மேற்கொள்வாரென நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (சி)

## உலகச் சம்பியன் ஆனது ஸ்பெயின்!

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதிப்போட்டியில் ஸ்பெயின் அணி நெதர்லாந்து அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

போட்டியின் 116 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் கோல் அடித்து அணியை வெற்றிபெறச்செய்தார். (டி)

## ஜனாதிபதியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினர் 14ஆம் இலக்க விடுதிக்குச் சென்று அவதானித்தனர். அதனைத் தொடர்ந்து கண் சத்திரசிகிச்சைக் கூடத்தையும் பார்வையிட்டனர்.

இறுதியில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சிறிபவானந்தராஜா தலைமையில் அவரது பணிமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தக் குழுவினர் பங்குபற்றினர்.

இதில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், அரச அதிபர் கணேஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் குழுவினரது விஜயத்தையொட்டி யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. நோயாளர்களைப் பார்வையிட வந்தவர்களின் எண்ணிக்கையும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. (ஒ-14)

## வேலணை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறார் என்றும் -

சுகாதாரத் திணைக்களத்தின் விசாரணைகள் இன்று ஆரம்பிக்கப்படும் என்றும் -

விசாரணைகள் முடியும்வரை டாக்டர் பிரியந்த யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் பணிப்பாளர் மேலும் கூறினார்.

இதேவேளை பெண்ணின் சடலம் சனிக்கிழமை இரவே உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், இந்தச் சம்பவம் குடாநாட்டு மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருப்பதையும், பலத்த சந்தேகங்களை எழுப்பி உள்ளதையும் அவதானிக்கவும் அறியவும் முடிகிறது. (ஒ-16)

## இந்திய மீனவர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலால் இந்திய நாகபட்டினத்தைச் சேர்ந்த மீனவரொருவர் அடித்துக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டதோடு, முதல்வர் மு.கருணாநிதி மத்திய அரசுக்கு இதுசம்பந்தமாக உடனடி தீர்வு காணுமாறும் கடிதமொன்றை எழுதியிருந்தார்.

அத்துடன், இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தார்கள் என விசாகப்பட்டினம், தூத்துக்குடி கரையோரப் பாதுகாப்பு படையினரால் 20 இலங்கை மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த 20 மீனவர்களையும், 12 மீனவப் படகுகளையும் இலங்கைக்குக் கொண்டுவர கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

எது எப்படி இருப்பினும், இரு நாடுகளுக்குமிடையில் இந்தப் பிரச்சினை சூடுபிடித்ததையடுத்து, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கையிலிருந்து விசேட குழுவொன்று இந்தியா சென்று பேச்சு நடத்தவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## மஹிந்த, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ - மூனின் நிபுணர் குழு நியமனத்தை நாமும் எதிர்க்கின்றோம். இதற்கெதிரான போராட்டத்தைப் படிப்படியாகத் தீவிரப்படுத்தியிருக்கவேண்டும். போராட்டத்தின் இறுதி ஆயுதமான உண்ணாவிரதப் போராட்டத்தை முதலிலேயே விமல் வீரவன்ஸ மேற்கொண்டமையால் இதற்கு மேல் எதுவித போராட்டமும் நடத்த முடியாது.

விமல் வீரவன்ஸவின் உண்ணாவிரதப் போராட்டத்தால் நடந்தது ஒன்றுமில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. பான் கீ - மூன் நியமித்த நிபுணர் குழு கலைக்கப்படவும் இல்லை.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.(அ-சி)

## ஐ.நா.வுடனான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா.நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டமையை நாம் விரும்பவில்லை. அக்குழு நியமிக்கப்பட்டமைக்கு அரசின் செயற்பாடே காரணம். நாடு சுதந்திரம் அடைந்தது முதல் ஐ.நா. சபை மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் போன்றவற்றுடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு எமது நாட்டுக்குக் கிடைத்தது. இப்படியானதொரு நாடு சமீபகாலமாக சர்வதேச தலையீட்டை எதிர்கொண்டு வருகிறது.

இந்த நிலைமைக்கு யுத்தத்தை வெற்றி கொண்ட படையினரோ அல்லது இந் நாட்டு மக்களோ அல்லது எதிர்க்கட்சியினரோ காரணம் அல்லர். நாட்டின் அரசமைப்பின்படி இந்த நாட்டை நிர்வகிக்க அரசு தவறியமையே சர்வதேச நாடுகளின் இந்தத் தலையீடுகளுக்குக் காரணம்.

### நாடகத்தின் இயக்குநரே அதனை முடித்து வைத்தார்

இவ்வாறான பிரச்சினைகளை இராஜதந்திர நடவடிக்கைகள் மூலமே தீர்க்க வேண்டும் என்று நாம் பலதடவைகள் அரசுக்குக் கூறிவந்தோம். ஆனால், அரசு அதைக் கணக்கில் எடுக்கவில்லை.

ஐ.நா. நிபுணர்கள் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விமல் வீரவன்ஸ நடத்திவந்த உண்ணாவிரத நாடகம் எதுவித பலனையும் அளிக்காது முடிவுக்கு வந்துள்ளது. நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டது மட்டுமே மிச்சம்.

இந்த நாடகம் இப்படித்தான் முடியும் என்று இந்த நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். அந்த எதிர்பார்ப்பின்படியே அது முடிவடைந்துள்ளது. நாடகத்தின் இயக்குநர் அதை முடித்து வைத்தார். இதைப் பார்த்து இப் போது நாடே சிரிக்கிறது.

இவ்வாறான கேலிக்கூத்தான விடயங்களை விட்டுவிட்டு இராஜதந்திர அணுகுமுறையின் ஊடாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வந்தால் அதற்கு நாம் ஆதரவு வழங்குவோம். - என்றார். (இ-07)

## அரசமைப்புத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இடதுசாரிக் கட்சிகளின் எதிர்ப்பை அடுத்தே ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தடவைகளுக்கு மேல் நீடிக்கும் திருத்தத்தைக் கைவிடுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறை ஒன்றை உருவாக்கும் ஐ.தே.கட்சியின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டார் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது. (அ-சி)

## தமிழ் அரசியல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்துள்ளோம். அத்துடன் புனர்வாழ்வு முகாம்களுக்கும் சென்று முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுடனும் கலந்துரையாடினோம்.

அப்போது அவர்கள் எங்களுடன் இருந்து எங்களை வழி நடத்தியவர்கள் இன்று நாடாளுமன்றத்தில் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கீழே இருந்து பணியாற்றிய நாமோ இங்கு அடைக்கப்பட்டுள்ளோம் என்று கவலை தெரிவித்தனர் என்றார்.

### புனர்வாழ்வு முகாம்களில் பெயர்விவரங்களைப் பார்வையிடலாம்

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 12ஆயிரம்பேர்கள் தொடர்பான பெயர்விவரங்களை வெளியிட முடியுமா என்று கேட்டதற்கு பதிலளித்தத அமைச்சர், அவர்கள் அனைவரும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுதந்த ரணசிங்கின் பொறுப்பிலேயே உள்ளனர்.

இவர்களது பெயர்விவரங்களை நாம் உத்தியோக பூர்வமாக வெளியிட முடியாது.

எனினும் அவர்கள் தங்கியுள்ள புனர்வாழ்வு முகாம்களில் அவர்கள் பற்றிய முழுமையான விவரங்களை உறவினர்கள் பார்வையிட முடியும்.

அந்தந்த புனர்வாழ்வு முகாம்களில் தங்கியுள்ளவர்களின் பெயர்விவரங்களைப் பாரர்வையிடலாம் - என்றார்.

யாழ்ப்பாணத்தில் நீதிமன்ற வசதிகள் போதியளவு இல்லாமையே இவர்களுக்கான விசாரணைகள் உரிய முறையில் நடைபெறாமல் மந்த கதியில் காணப்படுவதற்கான காரணமாகும்.

எனவே இவற்றை நிவர்த்தி செய்வதற்கு இங்குள்ள நீதிமன்ற வசதிகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுகக்கவுள்ளோம் - என்றும் பிரதி அமைச்சர் ஒரு கட்டத்தில் தெரிவித்தார். (அ-16)


**வணிகக்கல்வி : S. யசோ**

A/L-2012 செவ்,புதன் 4-5 pm | A/L-2011 சனி,ஞாயிறு 1-2 pm

தனிப்பாட அனுமதி வழங்கப்படும்

NEC ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

UPS • KEYBOARDS • MOUSE • COMPUTER PERIPHERALS • MULTIMEDIA SPEAKERS • DESKTOP PC • HOME THEATRE SYSTEMS • TFT-LCD MONITORS • DVD PLAYERS

Think Computers... Think Electronics... Think INTEX

4000W 8,180/- 5800WFM 16,800/- 3000W 7,170/- 4000W 8,850/-

14,200/- P80AV 8800W 14,200/- 4800W 12,550/- 10500W 18,600/- 1400W 3,140/- 2400WFM 5,380/-

INTEX DEMAND MORE

MICRO PC SYSTEMS

Jaffna No-218, Hospital road, Jaffna-021-2225893 Mob-0773963280

Nelliyadi Main Street Nelliyadi, Mob-0773039536

Vavuniya No-73C, 2nd Cross street, Vavuniya- 024-2221969,Mob-0773963284

# 37, 37th Lane, Wellawatha, Col-6.

அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

முகவராக இணைய விரும்புவோர் 0777425973

**யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!**

**Diploma in Mobile Phone Repairing**

(Software & Hardware Repairing)

(பல புதிய விடயங்களுடன்)

(With Digital Electronic & Computer Hardware)

(எமது இக் கற்கை நெறியை கற்பதன் மூலம் 100% நீங்கள் Mobile Phone இவை திருத்தி கொடுக்க முடியும்)

Fees - Rs.12000/= (With Digital Electronic & Computer Hardware)

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

வகுப்பு ஆரம்பம் - 15/07/2010 நேரம்10மணி- காலம் 2 மாதங்கள் -

உங்கள் பதிவுகளை உடன் மேற்க்கொள்ளவும் !!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS

No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.

T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

வடமாகாண காணி நிர்வாக வெளிக்கள போதனாசிரியர் போட்டிப் பரீட்சை வகுப்பு இன்று ஆரம்பமாகின்றது

திங்கள் முதல் வெள்ளி வரை பி.ப. 3.30 - 5.30 வரை (கடந்த கால வினாக்களும் எதிர்பார்க்கை வினாக்களும்)

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு, யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**DBF & CBF**

மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

ஆரம்பம்: 17.07.2010

DBF

(weekend &weekday classes)

*Accounting, Analysis & Planning (3.00-5.00)

*Advanced Management (12.00-100)

* Marketing Management (2.00-3.00)

* Business lending (6.30-8.00)

*Monetary & financial Systems( 1.00-2.00)

CBF All Subjects

(Week day evening Classes)

JAFFNA COLLEGE 1823 CEYLON 1872

Furthur Detail Director

Jaffna College

Undergraduate Dept.

464, Hospital Road,

Jaffna.

**விற்பனையாகிறது**

வருகிற சனிக்கிழமை (17.07.2010) நடைபெறவுள்ள

காணிநிர்வாக வெளிக்கள போதனா ஆசிரியர் பதவிக்கான

பரீட்சை வழிகாட்டி - 2010

P. உமாசங்கர் - விலை 300/-

பூபாலசிங்கம் புத்தகசாலை

பஸ்நிலையம், யாழ்ப்பாணம். 0212226693 | வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம். 0212221637

**பொருளியல் N.B. கஜீதரன்**

2012-A/L புதிய பாடத்திட்டத்திற்கமைவான கற்பித்தல் முறை.

* விக்னா (யாழ்.நகர்) * NEC (ஆனைப்பந்தி சந்தி) * BPI (குருநகர்)

* HAC (சித்தன்கேணி) * SHAMROCK (ஈச்சமோட்டை)

**JOB Guaranteed "Certified Medical Assistant"**

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்திய சாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை **லாவா வைத்தியசாலையில்** சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகப் பெற்றிடுங்கள்.

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி

கல்வித்தகமை: G.C.E O/L நாலு பாடங்களில் சித்தி

காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)

தெரிவு : நேர்முகப்பரீட்சை மூலம் அனுமதி.

July 2010 Intake

M.B.B.S வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.

உள்ளகப்பயிற்சி வழங்குவோர்: Lava Hospitals

சான்றிதழை இணைந்து வழங்குவோர்: KNOWLEDGE UNIVERSE® Malaysian Soft Skills and ICT Development Centre

KU Creating ideals

Tel: 0212224333 |# 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org